
கல்கி

KALKI 7-8-83 ரூ- 1-20

ஆண்டு மலர்





ஐயனாரே, காப்பாற்று!

கிராம எல்லைகளில் இருக்கும் பெரிய பெரிய சிலைகளை மக்கள் எல்லைத் தெய்வம் என்று கூறி வணங்கி வழிபடுவது தொன்று தொட்டு நிலவி வரும் வழக்கம்.

பெரிய வகை எல்லைத் தெய்வச் சிலைகள் செய்ய, சிமெண்ட், மற்றும் சுண்ணாம்பு உபயோகிக்கிறோம். சிறிய சிலைகளுக்கு கூளமண் என்று அழைக்கப்படும் வைக்கோல் பொடியும் களிமண்ணும் சேர்ந்த கலவையை உபயோகிக்கிறோம். பெரிய சிலைகளுக்குச் சூளை போடுவது கிடையாது. சிறிய சிலைகள் களிமண்ணால் செய்யப்படுவதால் சூளை போடப்படுகிறது.

ஐயனார் சுவாமிக்கு முகத்தில் சிவப்பு வண்ணம்தான் பூசுவது வழக்கம். காரணம் அவர் எப்போதும் கோபமாகவே இருப்பவர். சட்டை மஞ்சள் நிறத்திலும், அரை நிஜார் பச்சை வர்ணத்திலும் இருக்கும்.

ஐயனார் சிலைகள் செய்யு முன் ஆடு, கோழி பலி போடப்படும். படையலாகச் சாராயம், சுருட்டு, ரொட்டி வைப்பார்கள்.

சிமெண்டில் பெரிய சிலைகள் செய்ய ரூ. 7000 வரை ஆகும். களிமண்ணில் செய்யப்படும் சிறிய சிலைகள் ரூ. 100 முதல் ரூ.700 வரை செலவாகும்.

இச்சிலைகளைச் செய்பவர்களுக்கு வருடத்தில் இரண்டு மாதங்கள்தான், அதுவும் திருவிழா நேரங்களில்தான் வேலை இருக்கும். மற்ற நேரங்களில் வேலை கிடையாது. இதனால் சட்டி, பானை மற்றும் பொம்மை செய்வதில் மற்ற மாதங்களை ஓட்டுகிறோம்.

பிரபல சிற்பக் கலைஞர் கொசப்பேட்டை கே. வி. மகாலிங்கம் அவர்களின் மகன் கலைஞர் எம். ஜெயகோபால் சொல்லக் கேட்டவர்: —''சிக்கி''

-வண்ணப்படம்: கே. சுப்பிரமணியன்

பரிசு ரூ 300 பொன்மொழிகள் - போட்டி

ஐந்து பொன்மொழிகளை திருவாளர்கள் இளையராஜா, ம. பொ. சி., நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்தி, அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் வா. செ. குழந்தைசாமி, நா. பார்த்தசாரதி ஆகிய ஐந்து பேரிடம் காட்டி, அவர்களுக்கு விருப்பமான ஒன்றைமட்டும் தேர்ந்தெடுக்கச் சொன்னோம். அப்படியே ஆளுக்கு ஒரு பொன்மொழி வீதம் தேர்ந்தெடுத்துக் கொடுத்தார்கள்:

1. பாய்மரக் கப்பலை நகர்த்துவது, கண்ணுக்குத் தெரிகிற பாய்மரங்கள் அல்ல: கண்ணுக்குப் புலப்படாத காற்றுதான்.
2. நீங்கள் பெறும் ஒரே ஒரு வெற்றி, உங்களது பல தோல்விகளைத் திரையிட்டு மூடிவிடும்.
3. கனிகள் குலுங்கும் மரத்தின் கிளைதான் தாழ்ந்து காணப்படும். உண்மையான திறமைசாலியும் அதே போலப் பணிவாகத்தான் இருப்பான்.
4. கெட்ட எண்ணத்துடன் சொல்லப்படும் ஓர் உண்மை, ஆயிரம் பொய்களுக்குச் சமம்.
5. ரகசியத்தை வெளியிடாமல் இருந்தால், அது உங்களுக்கு அடிமை. வெளியிட்டீர்களானால் அதற்கு நீங்கள் அடிமை.

எந்தெந்தப் பிரமுகர் எந்தெந்தப் பொன்மொழியைத் தேர்ந்தெடுத்திருப்பார்? கணித்து, உங்கள் விடைகளைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதியனுப்புங்கள்.

முற்றிலும் சரியான விடைக்குப் பரிசு ரூ. 300. ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும். பத்துப் பேருக்கு மேல் சரியான விடை எழுதியிருந்தால், குலுக்கல் முறை மூலம் பத்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசு வழங்கப்படும்.

உறையின் மீது 'பொன்மொழிப் போட்டி' என்று தவறாமல் குறிப்பிடுங்கள்.

விடைகள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 22-8-83.

பொன்மொழி எண்	பிரமுகர்
1.	
2.	
3.	
4.	
5.	

என் பெயர் ————————

விலாசம் ————————

கையெழுத்து ————————

அப்பா ஆரம்பித்து வைத்த தொழிலை ஒழுங்காக நடத்தாமல் இழுத்து மூடுகிற அல்லது வேறு யாருக்காவது தாரைவார்த்து விட்டு ஒதுங்கிவிடுகிற பிள்ளைகளும் உண்டு; அப்பா சிறிதாகத் தொடங்கியதை ஊரும் உலகமும் மூக்கில் விரல் வைக்கும் வண்ணம் விரிவாக்கி விந்தைகள் புரியும் பிள்ளைகளும் உண்டு. 'டி.வி.எஸ்.' என்ற மந்திர மூன்றெழுத்துக் குடும்பத்தின் மூன்றாவது தலைமுறையினர், மேலே சொன்னதில் இரண்டாவது வகையில் இடம் பிடிப்பவர்கள்.

சந்தேகம் இருப்பவர்கள் டி. வி. எஸ். நிறுவனங்களின் பட்டியலை ஒருமுறை பார்வையிடலாம். ஊசி முதல் உருண்டோடும் சக்கரம் வரையிலான அவர்களது தயாரிப்புகளை, ஆண்டுக்கு 400 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடத்துகிற நேர்த்தியை, தொழிலாளர்களைக் கூலிப் பட்டாளமாக நினைக்காமல் குடும்பப் பாசத்துடன் அணைத்துக் கொள்ளும் பாங்கை—தொழில் ரீதியாகப் போட்டியாளர்களாக உள்ளவர்கள் கூடப் போற்றவே செய்வார்கள்.

இரண்டு பேர் உட்கார்ந்து செல்லும்படியான மோபெட்டுகளை முதன் முதலில் உருவாக்கிய பெருமை டி.வி.எஸ். நிறுவனங்களில் ஒன்றான சுந்தரம்-க்ளேட்டனுக்குத்தான் சாரும். மூன்றாண்டுகளுக்கு முன்பு ஹோசூரில் இதற்காகவே தனியாகத்தொழிற்சாலை ஒன்றை நிறுவினார்கள். இப்போது அங்கே தினமும் 200 டி. வி. எஸ்-50 மோபெட் வீதம் தயாரித்துக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொழில் சம்பந்தப்பட்ட அகராதிகளில் 'டி.வி.எஸ்' என்ற வார்த்தைக்குத் 'தரம்' என்றுதான் பொருள் காணப்படும். டி.வி. எஸ்.-50 மோபெட், தரங்களையே நிர்ணயிக்கும் தகுதியைப் பெற்றிருக்கிறது. சான்று: அதன் பிரும்மாண்டமான வெயிட்டிங் லிஸ்ட் (இதைப் படித்துவிட்டு, உடனடியாக டி.வி. எஸ்.-50 வாங்க உங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள ஓடினால், நீங்கள் 60,001வது நபராகத்தான் இருப்பீர்கள்!)

''என் மோபெட்டில் இன்னொரு ஆசாமியை ஏற்றிக் கொண்டு போவதில் விருப்பமில்லை எனக்கு!'' என்று முரண்டு பிடிக்கும் ஆசாமிகளும் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களைத் திருப்திப்படுத்துவதற்கென்றே விரைவில் டி.வி.எஸ்.-லோலோ என்ற ஒற்றை-நபர் மோபெட்டையும் தயாரித்து வழங்கப் போகிறார்கள்.

இது தவிர ரயில் போக்குவரத்துக்குப் பயன்படும் சில பாதுகாப்புச் சாதனங்களையும் சுந்தரம்-க்ளேட்டன் நிறுவனம் தயாரிக்க உத்தேசித்திருக்கிறது. (அந்தச்சாதனங்களை உபயோகிக்க ஆரம்பித்த பிறகாவது ரயில் விபத்துக்கள் குறைந்தால் மகிழ்ச்சிதான்!) அத்துடன் ஆந்திர மாநிலத்தில் பின்தங்கிய மாவட்டம் ஒன்றில் பெரிய அளவில் வார்ப்படத் தொழிற்சாலை ஒன்றையும் தொடங்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

சுந்தரம்-க்ளேட்டன் நிறுவனம், பங்குதாரர்களுக்கும் கற்பகத் தருவாக விளங்கி வந்திருக்கிறது. கடந்த பதினைந்து ஆண்டுகளாக, வருடம் தவறாமல் கணிசமாக லாபப் பங்கீட்டுத் தொகை அளித்திருக்கிறது இந்நிறுவனம். அது மட்டுமல்ல; அவ்வப்போது போனஸ் பங்குகளையும் ''இந்தா பிடி!'' என்று அள்ளிக் கொடுத்திருக்கிறது. பங்குதாரர்கள் அடைந்திருக்கும் லாபத்தைச் சுருக்கமாகச் சொல்வதானால், பத்தே ஆண்டுகளில் அவர்களது மூலதனம் கிட்டத்தட்ட ஐந்து மடங்காகப் பெருகியிருக்கிறது என்று கூறலாம்!

சுந்தரம்-க்ளேட்டன் நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டரான திரு. வேணு சீநிவாசன் இளைஞர்தான் என்றாலும் தொழிலுறவில் முதிர்ச்சி பெற்றவர். படாடோபமோ, பதற்றமோ அற்றவர். சிரித்த முகமும், சிந்தை முழுக்கச் செயல் திட்டங்களுமாகச் சோர்வின்றி உழைப்பவர். துணைக்குச் சிங்கக் குட்டிகளாக திரு. சுரேஷ் கிருஷ்ணாவும், திரு. கே. மகேஷும் இருக்கிறார்கள். இவர்களது அரவணைப்பில் சுந்தரம்-க்ளேட்டன் தொழில் துறையில் இன்னும் பல சாதனைகளைச் செய்து குவிக்கத்தான் போகிறது. எனவே, கைதட்டக் காத்திருப்போம்!

—எஸ். வி. ஆர்.

வெயிட்டிங் லிஸ்டில் 60,000 பேர்

◐ திரு. வேணு சீநிவாசன்





''பக்தா, தியாகராஜா! சஷ்டி விரதம் திரைப் படத்தைக் கண்டோம்; மகிழ்ந் தோம்''

''முருகா, இவ்வளவுதானா உன் தேன் மொழி?''

''குறுக்கே பேசாதிருந்தால் இன்னும் சொல்வோம்.''


''அப்படியே சுவாமிநாதா...''

''வெறும் கோயில்களையும் தலபுராணங் களையும் வைத்து இன்றைய ஜனங்களைத் திருப்தி செய்ய இயலாது என நீ தேர்ந் தெடுத்திருக்கும் கதையை ரசித்தோம். அந்தத் தடுதடுத்தப் பேர்வழியாக நடித்த கலைஞன் — சிவகுமார் எனும் என் பெயர் கொண்டவர் -- என்ன அற்புதமான உணர்ச்சி களையெல்லாம் தம் முகத்தில் கொண்டு வருகிறார்! பக்தனாக வேஷம் போட்டு மனைவி யிடமிருந்து கடைசியில் சாவிக் கொத்தை வாங்குகிறபோது முகத்தில் வழிகிற அந்தப் பெருமித உணர்வு ஒன்றே போதும்...''

''கதாநாயகி பூர்ணிமா...''

''குறுக்கிடக் கூடாது என்றேனே...''

''மன்னித்துவிடு மருதமலையானே!''



''அந்தக் காலத்து சௌகார் ஜானகியை நினைவூட்டும் பூர்ணிமா ஜெயராம், வெகு கண்ணியமான, இயல்பான முக பாவங்கள். சிறுவன் ஹாஜா ஷெரீபைக் கூட ஒரு நல்ல வேடம் கொடுத்து வெகு சிறப்பாய்ப் பயன் படுத்தியிருக்கிறாய். பாடல்களில் 'மன மோகனம்' மக்கள் மனத்தில் எடுபடும். என் தூதன் வீரபாகுவாய் வரும் ரஜினி காந்த் திரையில் சில நிமிடங்களே தோன்றி னாலும் தம்முடைய துடிப்பான நடிப்பால் என்னை அயரவைத்து விட்டார். ஆனாலும்..''

''சொல் குமரா... என்ன குறை?''

''முழுக்க முழுக்க என்னையே நம்ப முடி யாமல்தானே அந்தப் பெண்களின் நீச்சல் குளக் காட்சி, மொட்டை மாடியில் அந்தச் சொட்டைத் தலையர்களின் கும்மிப் பாட்டு, ஆடு, யானை, பாம்பு என்று சேர்த்துக் கொண்டாய்?''

''என்ன செய்வது வயலூரானே... என் நிலைமை அப்படி....''

''இருந்தாலும் தாய்மார்களைக் கவரும் விதத்தில் கதையை அமைத்ததற்காகவே உன்னைப் பாராட்டலாம்....''

''எல்லாம் உன்னருள் வேலவா!''

-ஜெய மன்மதன்



மூவரோ, தேவரோ?

கர்நாடகத்தில் திருவுலாப் புரிந்த ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள் ஆந்திர எல்லைக்குள் அடியெடுத்து வைத்தபோது ஆந்திர முதல்வர் என். டி. ராம ராவ், சுவாமிகளை வரவேற்று ஆந்திரத்திலேயே தங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட வேளையோ என்னவோ, இவ்வருடம் ஸ்வாமிகள் சாதுர்மாஸ்ய விரதம் கர்னூலில் அனுஷ்டிக்கிறார்கள். ஆந்திர மாநிலம் துவங்கியபோது தலைநகராக இருந்த கர்நூலுக்கு (அதற்குப் பிறகுதான் ஹைதராபாத்) இப்போது யோகம்!

சமீபத்தில் துறவிப் பேறு பெற்ற ஸ்ரீ சங்கராநந்தேந்திர சுவாமிகள் காஞ்சியிலிருந்து நடந்தும் பல்லக்கிலும் தனது குருமார்களைச் சந்திக்க அவசர அவசரமாக வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆந்திரக் கடற் கரை ஜில்லாக்களின் விஜயத்தை முடித்துக் கொண்டு, பூஜை பரிவாரங்களுடன் வந்தடைந்தபோது கர்நூலில் அமோக வரவேற்பு.

ஒரு பீடத்தை அலங்கரித்த, அலங்கரிக்கும் அலங்கரிக்கப் போகும் மூன்று சுவாமிகள் ஒருசேர இணைவது சிறப்பு நிகழ்ச்சி. அத்தோடு சாதுர் மாஸ்யம் ஒன்றாக அனுஷ்டிப்பது ஆத்திக சரித்திரம் காணாத ஒன்று. ஆகவே அது கர்நூலாக இருந்தாலும் சரி, காட்மாண்டுவாக இருந்தாலும் சரி, இந்த மூக்கூட்டு வியாச பூஜையைத் தரிசித்து விடுவது என்று பஸ்களிலும், கார்களிலும் ரயிலிலும் பக்தர்கள் ஆயிரக் கணக்காக முதல் நாளே வர ஆரம்பித்து விட்டார்கள். ஜூலை 24 ஞாயிற்றுக் கிழமையாகவும் இருந்தது.

சுவாமிகள் சிகை மழித்தல் முடிந்து ஹண்ட்ரி நதியில் நீராடித் திரும்பியபோது பல கோவில்களிலிருந்தும் ஸ்தாபனங்களிலிருந்தும், சால்வை, பிரசாதங்கள் வழங்கப்பட்டன. குடை தாங்கிய குஞ்சரம் பீடு நடை போட, காஞ்சிபுரம் திரு எல்லப்பா கோஷ்டியினர் மங்கள கீதம் இசைக்க, 'ஹர ஹர சங்கர' கோஷம் ஒலிக்க, குருமார்கள் பூஜைக்குத் திரும்பியது கண் கொள்ளாக் காட்சி. வியாச பூஜைப் பந்தலில் கூட்டமான கூட்டம்.

ஸ்ரீ பெரியவாள் வியாஸ பூஜை செய்கிறார்கள். இதர சுவாமிகள் இருக்கை புரிந்து ஈடுபடுகிறார்கள். இந்த மாதிரி இணையும் போது மூத்த சுவாமிகள்தான் பூஜை புரிவார்களாம். அதிக சாதுர்மாஸ்ய விரதம் புரிந்தவரே துறவிகளில் மூத்தவராம்.

சாதுர் மாஸ்யம், வியாஸ பூஜை என்றால் என்ன என்று திருவிசை நல்லூர் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளைக் கேட்டேன்.

''சந்நியாசிகள் மூன்று இரவுகளுக்கு மேல் ஒரு இடத்தில் தங்காமல் நடமாடும் கல்விச் செல்வமாக, ஞான ரதமாகத் திகழ்ந்து வருவார்கள். மழைக் காலத்தில் அவர்கள் நடந்து செல்லும்போது பூச்சிகள் மீது கால் பதிந்து ஜீவஹிம்ஸை ஏற்படலாம். இதைத் தடுக்க நான்கு மாதங்கள் மாரிக் காலத்தில் ஒரே இடத்தில் தங்கி சாதுர் மாஸ்யம் அனுஷ்டிக்கிற பழக்கம். ஹிந்து சமயம் மட்டுமின்றி ஜைனம், பௌத்த மதத்திலும் இந்த வழக்கம் இருந்து வருகிறது. இப்போது நான்கு மாதம் நான்கு பக்ஷமாக (2 மாதங்கள்) மாறி இருக்கிறது. வியாஸ பூஜையுடன் சாதுர் மாஸ்யம் ஆரம்பமாகிறது. வடக்கில் அதனை குரு பூர்ணிமா என்கிறார்கள். ஆனி அமாவாசைக்கு அடுத்த பௌர்ணமி குரு பூர்ணிமாவாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.''

சாஸ்திரிகள் விளக்கம் முற்றுப் பெற்றது.

க்யூவில் மணிக் கணக்காக நின்று, மெதுவாக நகர்ந்து, இடிபட்டு மேடைக்கு அருகே சென்று சுவாமிகள் பூஜை புரியும் நேர்த்தியைக் கண்ணாரச் சேவிக்கிறோம், அக்ஷதையைப் பரப்பி, கிருஷ்ண பஞ்சகம், வியாச பஞ்சகம், ஆதிசங்கர பஞ்சகம், அஷ்டதிக் பாலகர்கள், பிரும்மா, சரஸ்வதி, கணபதி, சுகர், நாரதர், சுத்த சைதன்யம் (சாளிக்கிராமம்) முதலிய ஞான புருஷர்களையும், தெய்வங்களையும் எலுமிச்சம் பழத்தில் ஆவாஹித்து, பஞ்ச உபகார பூஜை நடைபெறுகிறது. ஊறிய பயத்தம் பருப்புதான் நைவேத்தியம். காலை 11 மணிக்கு ஆரம்பமான பூஜை மாலை 5.30 மணிக்குப் பூர்த்தியாகிறது. 90 வயது பூர்த்தியான

○ நதிக்கரையில் இளந்துறவி



காஞ்சித் தெய்வம் உலக நன்மைக்கு நடத்தும் நீண்ட வேள்வி நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது. காலை மாற்றி வைத்துக் கொள்வது ஒன்றுதான். மற்றபடி ஆறு மணி நேரம் இருந்த இடத்தில் அமர்ந்து சீடர்கள் உதவி புரிய பூஜை, நிவேதனம், ஆரத்தி என்று இடைவிடாது ஈடுபடுகிறார்கள்.

பூஜை முடிந்த பிறகு சங்கற்பம். ஊர் ஜனங்கள் ''குருவே தாங்கள் எங்கள் ஊரில் தங்கியருள வேண்டும். எங்களால் ஆன கைங்கரியம் செய்கிறோம்'' எனத் துறவியை விண்ணப்பித்துக் கொள்வதே சங்கல்பம்.

நண்பர் நினைவுபடுத்தினார்: ''சென்ற முறை மகாகாவில் இந்த சங்கல்பத்தின்போது வெளியூர்வாசிகள் சேர்ந்து ஒன்றாகக் குரல் எழுப்பினர். உடனே பெரியவாள் உதட்டில் விரலை வைத்து அடக்கி, தலைப்பாகை ஜாடை காட்டி, ஊர்ப் பிரமுகரான நாயக் பிரபுவை விட்டு அதைச் சொல்லச்சொன்னார்.'' செயல் முறைகளை எப்படித் துல்லியமாக அனுஷ்டிக்கிறார்கள் பெரியவர்கள்!

பூஜை முடிந்ததும் மறு நாள் தங்கி வியாஸ அக்ஷதை பெறக் காத்திருந்தனர் பக்தர்கள். இடையிடையே சிலர் ஸ்ரீசைலம், மந்திராலயம் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்து வரக் கிளம்பினர்.

குரு பக்தி மிக்க மில் அதிபர் ரங்கநாத சர்மா தமது தொழிற்சாலை முழுவதும் பக்தர்களுக்கு ஒழித்து விட்டு விட்டார். அங்கு கோதுமை மூட்டைகள் மேலே அனந்த சயனம் புரிந்தவர் பலர். இட வசதி பொருட்டல்ல. ஆச்சார்ய தரிசனம் முக்கியம் என்ற அவர்களது பக்தியின் விசுவரூபத்தைத் தரிசிக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் சுவாமிகளைத் தரிசிக்க என்று வரும்போது அவர்கள் 'டிஸிப்ளின்' இன்றி நடந்துகொள்வதின் அடிப்படை பக்தி என்றாலும் பெருமை தருவதாக இல்லை.

சென்னையில் இருந்து ராஜா எஸ்டேட்ஸ் அனுப்பிய சமையல் கலைஞர்களை 'வெரி குட்' பாராட்டுகிறோம். திரியம்பகம் ஸ்ரீ காஞ்சி காமகோடி சேவக் டிரஸ்ட், பம்பாய் ஸ்தாபன நிர்வாகிகள் செய்த அன்ன தான கைங்கரியம் மறக்க இயலாது.

பூஜை, நிர்வாகம் என்று எத்தனை வேலைகள் இருந்தாலும் மலர்ந்த முகத்துடன் பக்தர்களுக்குத் தரிசனம் தந்து நலம் விசாரித்து



○ புனிதரும்; பக்தர்களும்

ஆசி அருளிய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளது அருட்தன்மை மறக்க இயலாது. வியாஸ பூஜையன்று வாசகர்களுக்கு 'மெஸேஜ்' தரப் பிரார்த்தித்தேன்.

''மாதா, பிதா, குரு தெய்வம் என்று நான்கு பேரிடத்திலும் பக்தி கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று ஹிந்து மதம் கூறுகிறது. தெய்வத்திற்கு முன்பாக குருவை வைத்தார்கள். உலக நன்மைக்குப் பிரார்த்தனை புரிபவர் ஜகத்குரு. மானுட முதல் குருவாகிய வியாஸரை நினைவுகூரும் வியாஸ பூஜை தினத்தன்று குரு பக்திக்கு நம்மைச் சமர்ப்பித்துக் கொள்வோம்.''

ஒரு தீபத்திலிருந்து ஏற்றப்பட்ட மற்றொரு தீபம் பிரகாசமாகத்தான் இருக்கும். ஸ்ரீ காஞ்சித் தெய்வம் ஏற்றி வைத்த ஜோதி அல்லவா ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகள்! அருள் வாக்கில் குரு பக்தி சுடர் விடுகிறது. புறப்படுகிறோம்; 'இன்னும் இரண்டு மாதம் பூஜ்யர்கள் இங்கு இருப்பார்கள். இன்னும் ஒரு முறை வருவோம்' என மனம் கூற, விடை பெறுகிறோம்.

-சுபஸ்ரீ

புகைப்படங்கள்: பாபுராவ்

''காப்பி கொடுக்கும்போது உன் மனைவி என்னவோ காதிலே சொன்னாங்களே, என்ன விஷயம்?''

''தினமும் காப்பி நேரத்திலே கழுகுக்கு மூக்கில் வேர்த்த மாதிரி உங்க ப்ரெண்ட் வந்திடுறாரே, எப்படி?'ன்னு கேட்டாள்!''

—இமை அ. கதிர்வேல்



ரஷ்யாவில் ராஜீவ்

இந்திய அரசியலின் இளைய ராஜாவான ராஜீவ் காந்தி இதற்கு முன்னரும் அன்னை துணையுடன் ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். இருந்தாலும் சஞ்சய் காந்தியைப் போலத் தம்மைப் பிரகடனப்படுத்திக்கொண்டதோ, ரஷ்யாவின் அரசியல் விவகாரங்களில் அநாவசியமாக மூக்கை நுழைத்ததோ, ரஷ்யர்கள் பற்றி 'காமெண்ட்' அடித்ததோ கிடையாது. தான் உண்டு, தன் சொந்த விஷயம் உண்டு என்று திரை மறைவிலேயே தான் இருந்து வந்திருக்கிறார். இந்த அம்சம் தான் ரஷ்யப் பெருந் தலைவர்களை மிகவும் கவர்ந்திருக்க வேண்டும்.

அதனாலேயே அண்மையில் ராஜீவ் ரஷ்யாவுக்கு விஜயம் செய்தபோது பிரமாதமாக உபசாரம் செய்து அவரது நன்மதிப்பைச் சம்பாதித்துக் கொள்ள மிகவும் பாடு பட்டார்கள் ரஷ்யத் தலைவர்கள்.

ஓர் அரசியல் கட்சியின் ஐந்து பொதுச் செயலர்களில் ஒருவர்தான் ராஜீவ் என்றாலும் ஒரு நாட்டுத் தலைவருக்கு அளிக்கப்படும் வரவேற்பு இவருக்கும் அளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் ரஷ்யப் பார்லிமெண்ட் தலைவர் ராஜீவை வரவேற்க, அடுக்கடுக்காக நிகழ்ச்சிகள் காத்திருந்தன. மாபெரும் அணுமின் நிலையத்தைப் பார்வையிடும் நிகழ்ச்சி ஒன்றும் பயணத் திட்டத்தில் சேர்க்கப் பட்டிருந்தது. சும்மா ஆடுமா ரஷ்யச் செந்தலை? இந்தியா புதிதாக இரண்டு அணுமின் நிலையங்களை அமைக்கத்திட்டமிட்டிருக்கிறது. அது சம்பந்தமான உடன்படிக்கை ஏற்பட வேண்டும் என்பதில் ரஷ்யாவுக்கு உள்ள அக்கறைதான் இதற்குப் பின்னணி!



சோவியத் வெளி விவகார அமைச்சர் குரோமிகோவுடன்..



இரண்டாம் உலகப்போரில் உயிரிழந்த வீரர்களின் நினைவாலயத்தில்

ஸோனியாவுடன் டிரிசெகோவ்ஸ்கி கலைக்கூடத்தில்





பைகல் ஏரிப்பகுதியில் குடும்பத்தினருடன் ராஜீவ்

அணுமின் நிலையத் தலைவருடன்...




ரஷ்யாவின் பெருந் தலைகளான பாது காப்பு அமைச்சரையும், வெளி விவகார அமைச்சரையும், ராஜீவ் சந்தித்துப் பேசினார். அதாவது இவர் பேச, அவர்கள் இவர் எப்படிப்பட்டவர் என்று கணித்துக்கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்பட்டது! இதே சந்தர்ப்பத்தில் மேற்கு ஜெர்மனியின் அதிபர் ஹெல்முட் கோலும் ரஷ்யாவுக்கு அதிகாரபூர்வமாக வந்திருந்தபோதிலும், ராஜீவை 'அம்போ' என விட்டு விடாமல் நன்றாகவே கவனித்துக் கொண்டார்கள் ரஷ்ய அரசியல்வாதிகள்.

ராஜீவ் குடும்ப சகிதமாகத்தான் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தார். அவர் அரசியல் தலைவர்களையும் உயர்மட்ட அரசாங்க அலுவலர்களையும் சந்திப்பதில் பொழுதைக் கழித்தாரென்றால், ஸோனியாவோ குழந்தைகளுடன் லெனின்கிராட் மற்றும் சரித்திரப் புகழ் பெற்ற இடங்களைச் சுற்றிப் பார்த்தார். அவருக்கென்றே விசேஷமாக ஏற்பட்ட கலா நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ரஷ்யர்கள் எதிலுமே கொஞ்சம் நிதான மானவர்கள். தூண்டில் போட்டு விட்டுப் பொறுமையுடன் காத்திருப்பவர்கள். 'ராஜீவ் இன்றில்லாவிட்டாலும் வருங்காலத்தில் ஒரு நாள் இந்திய அரசியலில் முக்கிய பங்கு வகிக்கப் போகிறார். எனவே அவரை இப்போதே பிடித்து வளைத்துப் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற ரஷ்யத் தலைமையின் நினைப்புத்தான். இப்படி அளவுக்கு மீறிய உபசரிப்பாக வெளிப்பட்டிருக்கிறது போலும்!

வி. ஆர்.



நரசிம்ம ராவ்
வன்முறை
பாண்டிச்சேரி அக்கிரமத்தைக் கண்டித்து ராஜினாமா!
ராஜினாமா வாபஸ்! ஐயையா..
நில்லுங்க... நில்லுங்க.. நாற்காலி போடறோம்! உட்காருங்க!
போராட்டம்



கல்கி

1983 ஆகஸ்டு 7
ருத்ரோத்காரி ஆடி 22
மலர் : 42 இதழ் : 1



எரிகிறது இலங்கை!

இலங்கை எரிகிறது. ஈழத் தமிழர் துடிக்கின்றனர். இங்கே நம் மனம் பதைக்கின்றது.

அங்கு வாழும் தமிழர் என்ன, அன்பே சிவம் என்பதை அறியாதவரா? அல்லது சிங்களத்தவருக்குத்தான் கருணாமூர்த்தியான புத்தரின் போதனைகள் புரியாமல் போயிற்று! இரண்டுமில்லை.

பிறகு இதென்ன அநாகரிகம்? ஏன் இந்தப் படுகொலைகள்? எதற்காக இந்தத் தீவைப்புக்கள்? மற்ற மற்ற அட்டூழியங்கள்?

ஈழத்தில் வாழும் லட்சக் கணக்கான தமிழர்கள் ஒரு பாதுகாப் பின்மையை உணர்ந்திருக்கின்றனர் — உறுதி.

அவர்களுக்கு நல்லது செய்யவே நினைக்கிறார் ஜெயவர்த்தனே— நம்புகிறோம்.

ஆனால் எண்ணுகிற அளவில், ஏன் சொல்லுகிற அளவில்கூட அவரால் செயல்பட முடியவில்லை — நிதர்சனம்.

இதற்கிடையில் தனி ஈழத் தமிழ்நாடு கோரிக்கை, புலிப்படை, தீவிரவாதிகள் தாக்குதல், எதிர்த் தாக்குதல், பழிக்குப் பழி என்று துவேஷங்கள் படிப்படியாக வளர்ந்து, குமுறிய எரிமலை வெடித்து, நாசத்தை, பயங்கர சேதத்தை விளைவித்துக்கொண்டிருக்கிறது.

முதல் பணி அமைதியை நிலைநாட்டுவது. அடுத்த பணி சொல் லாலும், செயலாலும் பொருளாலும் துயர் துடைப்பது. மூன்றாவது பணி இரு தரப்பினரும் ஒருவரிடம் ஒருவர் நம்பிக்கை கொள்ள, சம அந்தஸ்துடன் சகோதரராய் வாழ வழி வகை தேடுதல். இதற்குப் பேச்சு வார்த்தைகள் உரிய இடத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இடையில் துவங்க ஏற்பாடு செய்தல்.

இதை விடுத்து நமது முதல்வர் பிரச்னையை ஐ.நாவுக்குக்கொண்டு போவோம் என்கிறார்: எதிர்க் கட்சித் தலைவரோ போர் முழக்கமே செய்கிறார்! தொண்டர்கள் கதவடைப்பிலும் கல்லெறிதலிலும் கொடும் பாவி கொளுத்துதலிலும் இறங்குகிறார்கள். இதனாலெல்லாம் மனக் கசப்புக்கள் இலங்கையில் மேலும் வளரும்.

பிரதமர் கூறியது போல் இது இலங்கையின் உள் நாட்டு விவகாரம்;நாம் நேரடியாகத் தலையிட முடியாது. உண்மை. ஆனால்....

மறைமுகமாக இந்தியா தனது தார்மீகச் செல்வாக்கை உப யோகிக்க முடியும். உபயோகித்து, இலங்கை அரசையும் சிங்களவரையும் தமிழர்பால் இன்னும் அன்புடன், அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும் விதத்தில் நடந்துகொள்ளச் செய்ய முடியும்.

ஆனால் நமது துரதிர்ஷ்டம், எந்த ஒரு பிரச்னையிலும் நமது மாநில, தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனி அபிப்பிராயம். அட்டதிக்கில் ஒவ்வொருவரும் ஒரு திக்கு. ஒவ்வொருவருக்கும் தன் கருத்தே சரி என்ற சுய மோகம். இவர்கள் ஒன்றுசேர்ந்து இட்டவட்ட மாக ஒரு முடிவெடுத்துத் தேசிய அளவில் ஒரு தார்மீகக் குரல் எழுப்பப் போவதில்லை.

இந்நிலையில் ஈழத் தமிழர்களுக்கு நாம் எவ்வாறு உதவப் போகிறோம்?

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

1

யாரோ மண்டையில் தட்டிவிட்ட மாதிரி சட்டென்று கௌரி கண்களைத் திறந்தாள். கால் நிமிஷம் அப்படியே படுத்து, விழிப்பை ஸ்திரப்படுத்திக் கொண்டு, மணிக்கட்டிலிருந்த கடிகாரத்தைப் பார்க்க, அது ஐந்து முப்பத்தி ஏழு என்று சொல்ல, அவள் மெல்லிதாகப் புன்னகைத்தாள்.

சரியாக ஐந்தரைக்கு அலாரம் ஒலித்து எழுப்பிவிட்ட தினுசில் இப்படியொரு பழக்கம் தினமும்.

கல்லூரியில் படிக்கும் நாட்களில், காலை வேளையில் எழுந்து படிக்க முடியாமல் தூக்கம் ஆளைப் போட்டு அசத்த, ஸ்நேகிதி ஒருத்தி 'ஒரு புஸ்தகத்தில் படித்தேன் — காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருக்க வேண்டுமோ அத்தனை தடவை தலைகாணியில் இரவு படுக்கும்போது லேசாக முட்டிக்கொண்டு விட்டுப் படுத்தால் கண்டிப்பாய் விழிப்புக் கொடுத்துவிடும்' — என்று ரொம்பத் தெரிந்தமாதிரி அடித்துப் பேச, எத்தனை' சுலபமான வழி இது என்று சந்தோஷித்துஅன்றிரவு மறக்காமல் கடைசி வேலையாய்த்தலைகாணியில் நாலு தரம் முட்டிக் கொண்டு, நிச்சயம் எழுந்துவிடுவோம் என்ற நம்பிக்கையில் அலாரம் வைக்காமல் படுத்து, ஆறே முக்காலுக்கு அம்மாவின் அதட்டல் கேட்டு எழுந்து, அரக்கப் பரக்க டெஸ்டுக்குப் படிக்கப் பார்த்து, முடியாமல் தவித்துப் பறந்து... அப்புறமும் ஸ்நேகிதி வார்த்தையில் நம்பிக்கை இழக்காமல் இன்னும் நாலைந்து தரம் இப்படிச் செய்து, ஒவ்வொரு முறையும் ஏமாந்துபோய் மரியாதையாய் அலாரம் வைப்பதோடு, அப்பா, அம்மாவிடமும் 'எழுப்பிவிடுங்கள்' என்று சொல்லுவதையும், கடைசி வரைக்கும் வழக்கமாகக் கொண்டது இப்போது நினைவுக்கு வர, கௌரியின் புன்னகை அதிகமானது.

எழுந்து உட்கார்ந்தாள்.

ஏ.ஸி. ஓடிக்கொண்டிருந்ததால் அறையை வியாபித்திருந்த இருட்டிலும் இருள் விழித்துக்கொண்டதை உணர்ந்துவிட்ட விக்ரம் மெதுவாக அருகில் வந்து முனகியது.

'ஷ்....நோ....விக்கி... அப்பா தூங்கறார். எழுப்பிடாதே...' என்று முணு முணுத்தவள் அதன் தலையைத் தட்டிக் கொஞ்சிவிட்டு, சப்தமில்லாமல் பாத்ரூமை நோக்கிச் சென்றாள்.

பல் தேய்த்து, முகம் கழுவின பின் இந்தக் காலைத் தேவைக்கென அங்கேயே ஷெல்ஃபில் வைத்திருக்கும் சாந்துக் குழாயை எடுத்துக் குட்டி



யாய்ப் புருவங்களுக்கு நடுவில் பொட்டிட்டுக் கொண்டாள்.

கலைந்திருந்த தலைமுடியை வாரி, ரப்பர் பேண்ட் போட்டுக் கட்டின பின், வெளியில் வந்தாள்.

நைட் ட்ரெஸ்ஸைக்களைந்து கோட்ஸ்டாண்டில் இரவு அவிழ்த்துப் போட்டிருந்த புடவையை உடுத்திக் கொண்டாள்.

வீட்டில் அணியும் செருப்பை மாட்டிக் கொண்டு விக்ரம் பின்தொடர மெதுவாக வெளியில் வந்து கதவைச் சாத்தினாள். கீழே வந்தாள்.

ஹாலில் விளக்கைப் போட்டுக் கொண்டு ரங்கன் தூசி தட்டியபடி நின்றிருந்தான்.

''அந்த வெண்கல விளக்குகள் இரண்டும் பளபளப்பா இல்லே... இன்னிக்கு மறக்காம பாலிஷ் போட்டுடு. ப்ராஸோ இருக்கா?''



''இருக்கும்மா...பெருக்கித் துடைச்சுட்டு போட்டுடறேன்...''

கூடத்தைத் தாண்டினவள் இடது பக்கமாகத் திரும்பி பூஜை அறையின் வேலைப்பாடு செய்யப்பட்ட கதவுகளைத் திறந்து,செருப்பை வெளியிலேயே கழற்றி வைத்துவிட்டு, கதவுகளில் பொருத்தப்பட்டிருந்த வெண்கல மணிகள் ஜணஜண என்று சப்திக்க உள்ளே நுழைந்தாள்.

விளக்கை ஏற்றினாள்.

முதல் நாள் வைத்து, காய்ந்திருந்த பூக்களை அகற்றிக் கூடையில் போட்டாள். அலமாரியில் வைத்திருக்கும் துணியை எடுத்து, மண்டபத்தையும் படங்களையும் தூசியில்லாமல் துடைத்தாள். அங்கேயே இருக்கும் எண்ணெயை விளக்கில் விட்டு, திரியைத் திரித்து ஏற்றினாள். ஊதுபத்தி ஒன்றைக் கொளுத்தி ஸ்டாண்டில் பொருத்தினாள். ஒரு நிமிஷம் கண்களை மூடி நின்று கடவுளை மன சுத்தியோடு நினைத்து, விழுந்து வணங்கிவிட்டு வெளியில் வந்தாள்.

சமையல் கட்டில் தேங்காய் துருவிக் கொண்டிருந்த ருக்மிணியம்மா இவளைக் கண்டதும் கைக்காரியத்தைப் பாதியில் விட்டு விட்டு எழுந்து நின்றாள்.

''உட்காருங்க... டிகாஷன் இறக்கிட்டீங்களா ருக்மணிம்மா?''—

''ஆச்சும்மா.''

''பால் காய்ச்சிட்டீங்களா?''

''ஆச்சும்மா....''

''ஆறேகாலுக்கு இட்லியைவார்த்திடுங்க''

''சரிங்கம்மா.''

''இட்லிப் பானையை நேத்து எடுத்தாப்பல அவசரப்பட்டு எடுத்திடாதீங்க... டாக்டர் வந்து உட்கார்ந்தாவிட்டு எடுக்கலாம்.''

''சரிங்கம்மா.''

ஒரு டம்ளரில் காப்பி கலந்து எடுத்துக் கொண்ட கௌரி, அதை அருந்தியபடி வாசல் வராந்தாவுக்குச் சென்று நின்றாள்.

அங்கிருந்து வாசல் கேட்டும், நீண்ட கான்கிரீட் நடையும்,முன்பக்கம் பூராவும் வெள்ளையாய் உட்கார்ந்திருந்த நர்ஸிங் ஹோமும் தெளிவாய்த் தெரிந்தன.

''க்ளினரைக் கல்லாப் பெட்டியிலே உட்கார வைச்சது தப்பாப் போச்சு!''

''ஏன், என்ன ஆச்சு?''

''கல்லாப் பெட்டியைச் சுத்தமாத் துடைச்சு க்ளீன் பண்ணிட்டான்!''

மன்னார்குடி தேரோட்டி



கேட்டில் கூர்க்கா....

நடையைப் பெருக்கிக் கொண்டு தோட்டக்காரக் கந்தப்பன்.

பார்வையைத் திருப்பி, நர்ஸிங் ஹோமின் பின்னால் வீச, வார்ட் பாய்களான ஆறுமுகமும் அந்தோணியும் பக்கெட்டுகளைக் கழுவுவது புரிந்தது.

அப்படியென்றால் நர்ஸிங் ஹோமைப் பெருக்கித் துடைத்து விட்டார்கள் என்று அர்த்தம்.

நாலரைக்கு எழுந்து, ஆறுக்குள் துப்புரவு வேலையை முடித்துவிட வேண்டும் என்பது கௌரி வைத்திருக்கும் சட்ட திட்டங்களுள் ஒன்று.

காலடியில் விக்ரம் கொஞ்சலாக அழ, குனிந்தாள்.

''என்னடா?''—

''க்ங்....க்ங்....''

இவள் பூஜை, சமையல் அறையில் இருந்த நாழிகையில் சமர்த்தாகச் சாப்பாடு அறையோடு நின்று, வாசல் வராந்தாவுக்கு வந்ததும் பின்னாலேயே வந்து, வாட்ச்மேன் கொண்டு வைத்திருந்த தினசரிகளை வாயில் அழகாய்க் கௌவியபடி நின்றிருந்த விக்ரம், வாலை ஆட்டிக் கொண்டு மீண்டும் முனகியது.

''அப்பா கிட்ட பேப்பரைக் கொண்டு கொடுக்கணும்; அதானே? இருடா அவசரப் படாதே....''

புரிந்த தினுசில் விக்ரம் காதுகளை மடித்துக் கொண்டு குழந்தைத் தனமாய்ப் பற்களைக் காட்டியது.

மீண்டும் சமையலறைக்குச் சென்றவள் தன் டம்ளரை வைத்துவிட்டு, இன்னொன்றில் சூடாகக்காப்பியைக்கலந்து எடுத்துக்கொண்டு மாடிப் படிகளில் ஏற, டைனிங் ஹாலில் இருந்த கடிகாரத்திலிருந்து வெளியே வந்த பறவை ஒன்று உற்சாகமாய் ஆறு தரம் கக்கூ....கக்கூ... என்று குரல் எழுப்பியது.

மாடி அறையில் நுழைந்து, காப்பி டம்ளர், டபராவை டேபிள் மேல் வைத்தாள்.

ஏ. ஸி.யை நிறுத்திவிட்டு, கர்ட்டன்களை ஒதுக்கி, பால்கனிக்கதவைத் திறந்தாள்.

ஃபேனைச் சுழல விட்டாள்.

காப்பி டம்ளரைக்கையில் எடுத்துக்கொண்டு கணவனிடம் குனிந்தாள்.

''குட்மார்னிங் பாலா... காப்பி...''

கூடவே நின்றிருந்த விக்ரமும் அவரை எழுப்புவது போல 'ங்க்...' என்று குரல் கொடுக்க, பாலாஜி கண் விழித்தார்.

''குட் மார்னிங் டார்லிங்... குட் மார்னிங் விக்கி....''

எழுந்து உட்கார்ந்து காப்பி டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டார்.

இதற்குள் தாங்க முடியாதது போல விக்ரம் வாலை ஆட்டிக் கொண்டு, பேப்பரை முனகலுடன் அவர் முன் நீட்டியது.

''இருடா... காப்பியைக் கொட்டிடப் போறே.. வாங்கிக்கிறேன் இரு...'' என்றவர் காப்பியைக் குடித்துவிட்டு, விக்ரம் வாயிலிருந்து பேப்பர்களை எடுத்துக் கொண்டு 'தாங்க்ஸ்டா' என, அது ஜன்ம சங்கல்பம் ஆன மாதிரி கண்கள் பளபளக்க அங்கேயே படுத்துக் கொண்டது.



பளயகாட்ஸ்
சங்கு மார்க்
லுங்கிகள்
கைக்குட்டைகள்
PALAYAKAT CCY. PVT. LTD. MADRAS.
REGD. TRADE MARK
மதராஸ் பளயகாட் கம்பெனி(பி)லிட்.
88, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-600 001.
போன்: 23040
CHARI

கௌரி பாலாஜிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''நேத்து ராத்திரி ரொம்ப நேரம் ஆச்சா, டின்னர்லேந்து திரும்ப?''

''ம்ம்... அபௌட் ட்வெல் தர்ட்டி...''

''ஹவ் வாஸ் தி டின்னர்?''

''வழக்கமான 'டாஜ்' சாப்பாடு போல.''

''என்ன சொன்னார் டாக்டர் பிரதாப்?''

''ஸ்டேட்ஸ்ல ப்ராக்டீஸ் பண்ணது போதும். இங்க வந்துட்டா தேவலேன்னு சொன்னார். ரொம்பப் பெரிய பெரிய ப்ராஜெக்டெல்லாம் யோசிச்சு வைச்சிருக்கார் கௌரி... பெரிய அளவுலே ஒரு மாடர்ன் ஹாஸ்பிடல் கட்டி, எல்லாவிதமான சிகிச்சைகளும் பண்ண ஆசை இருக்காம். அங்கேயே ஏழெட்டு டாக்டர்ஸ்கிட்ட பேசினாராம். இண்டியாவுக்கு வர எல்லாரும் ரெடின்னு சொன்னாங்களாம். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு ஃபீல்டுல எக்ஸ்பர்ட்... பத்து பேரா சேர்ந்து பணம் போட்டு, வெளிலேயும் திரட்டி கோடி ரூபாய்ல லேடஸ்ட் உபகரணங்கள், வசதிகளோட ஹாஸ்பிடல்கட்டினா என்னன்னு யோசிக்கிறாங்களாம்... என்ன சொல்றீங்க பாலாஜி?—னு கேட்டார். ஃபென்டாஸ்டிக் ஐடியா... உடனே செயல்படுத்தத் துவங்குங்க. என் உதவி எல்லா விதத்திலேயும் உண்டுன்னு சொன்னேன்.''—

கௌரி கவனமாய் அவர் சொன்னதைக் கேட்டாள்.

''க்ரேட்! இந்த மாதிரி ஒரு ஹாஸ்பிடல் காம்ப்ளெக்ஸ் கண்டிப்பா மெட்ராஸுக்கு வேணும் பாலா... எந்த ஒரு ஆபரேஷன், ட்ரீட்மெண்டுக்காகவும் வெளிநாட்டுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லேங்கற நிலைமை வந்திட்டா... ஓ ஹௌமெனி வில் பெனிஃபிட்....''

''இன்னும் ஒரு வாரத்துல ஸி. எம்.-ஐப் பார்த்து இது விஷயமாப் பேச முடிஞ்சா நல்லா இருக்கும்னு பிரதாப் நினைக்கறாரு... சந்திக்க ஏற்பாடு பண்றேன்னு சொல்லி இருக்கேன்....''

''குட்... அவசியம் ஏற்பாடு பண்ணுங்க... இப்ப, மணி ஆறு பத்து...''

''ஓ.கே... ஓ.கே.... எழுந்துட்டேன்.''

பேப்பர் சகிதம் பாத்ரூமுக்குள் சென்று அவர் கதவைத் தாள் போட்டுக் கொள்ள, கௌரியும் எழுந்தாள்.

சரியாக முப்பது நிமிஷங்களில் ஷேவ்செய்து குளித்து, பாண்ட், புஷ் ஷர்ட், ஸாக்ஸ், ஸ்லிப்பான் அத்தனையும் வழக்கம் போல வெள்ளையில் அணிந்து, பூஜை அறையில் ஓரிரு நிமிஷங்கள் நின்று பிரார்த்தித்துவிட்டு, டைனிங் சேரில் பாலாஜி அமர, கௌரிக்கு இரண்டு நாட்களுக்கு முன் ஒரு பத்திரிகை—தி ஹாண்ட்ஸம், சக்ஸஸ்ஃபுல் டாக்டர் இன் வொயிட் — என்று அவரையும் பாலாஜி நர்ஸிங் ஹோமைப் பற்றியும் எழுதின கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

புன்னகையில் உதடுகள் விரிய, தட்டில் இரண்டு இட்லிகளை வைத்தாள்.

''எதுக்கு இப்ப இந்தச் சிரிப்பு கௌரி?''

தி.மு.க-அ.தி.மு.க. ஒற்றுமை

● ஆகஸ்டு 7ம் தேதி நடக்கவிருக்கிற பெங்களூர் மாநகராட்சி தேர்தலுக்கு அ. தி. மு. க. வும் தி. மு. க.வும் தங்கள் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. தமிழர்களின் ஓட்டுக்களைப் பிரிபடாமல் பெற வேண்டும் என்பதற்காக அ. தி. மு. க. போட்டியிடுகிற வட்டத்தில் தி. மு. க. நிற்கவில்லை. தி. மு. க. போட்டியிடுகிற இடத்தில் அ. தி. மு. க. போட்டியிடவில்லை. தி. மு. க.விற்கு அ. தி. மு. க. தொண்டர்களும்அ. தி. மு. க.விற்கு தி.மு.க. தொண்டர்களும் கூட தேர்தல் வேலைகளைச் செய்கிறார்கள்.

● ஒரே போஸ்டரில் கருணாநிதியின் படமும் எம். ஜி. ஆரின் படமும் அச்சடிக்கப்பட்டுள்ளன. அந்தந்த வட்டக் கட்சித் தலைமைத் தேர்தல் அலுவலகத்தில் அ.தி.மு.க. கொடியும் தி. மு. க. கொடியும் ஒரே கம்பத்தில் சேர்ந்தே பறக்கின்றன!

—ஆர்சி—எஸ்.
துரை-ராமச்சந்திரன்

''ஒண்ணுமில்லே. அந்தப் பத்திரிகைல உங்களைஹாண்ட்ஸம்-னு குறிப்பிட்டிருந்ததை நினைச்சுக்கிட்டேன்....''

பாலாஜி குறும்புடன் கண்களைச் சிமிட்டினார்.

''ஏன்? நான் ஹாண்ட்ஸமா இல்லியா?''

''ரொம்ப... ஐம்பது வயசுக்கு இத்தனை கம்பீரம் வேண்டாம்...''

''ஹேய்! என்ன நீ ஐம்பது வயசுன்னா கிழவனா இருக்கணும்னு தீர்மானம் பண்ணிட்டியா? ஐ'ம் ஜஸ்ட் மிடில் ஏஜ்ட்...''

''கிழவனா இருக்க வேண்டாம், பாலா... ஆனா, கொஞ்சம் வழுக்கை, கொஞ்சம் தொந்தி ஏதாவது இருக்கலாமில்லே?''

''இங்க பாரு... காது, நெத்தி பூரா ஒரே நரை....''

''ஆனா, அது உங்களுக்கு நல்லாத்தானே இருக்கு?''

அவள் சட்னி, சாம்பாரைப் பரிமாற, ஒரு வாய் விண்டு போட்டுக் கொண்ட பாலாஜி சிரிப்பு நிறைந்த குரலிலேயே தொடர்ந்தார்.

''தொந்தி இருக்கக்கூடாதுனு — முடிஞ்சப்போ எல்லாம் டென்னிஸ் விளையாடி, டயட் பண்ற கஷ்டம் எனக்குத்தானே தெரியும்... இப்பக் கூட இரண்டே இரண்டு இட்லி... ஒரு க்ளாஸ் ஆரஞ்சு ஜூஸ் இதானே?''

''எதுக்கு இத்தனை சிரமம்? பேசாம ஒரு பிடி பிடிங்களேன்... யார் தடுக்கறாங்க? வேணா இன்னும் இரண்டு இட்லி வைக்கட்டுமா?''

கைகளை மறித்த பாலாஜி தட்டை மறைத்துக் கொண்டார்.

''வேண்டாம்...டார்லிங்...இப்பவே நாம ரெண்டு பேரும் சேர்ந்து வெளில போனா, 'தங்கையா சார்'னு கேட்கறாங்க... அப்புறம் 'பெண்ணா'ம்பாங்க... நாப்பத்தி இரண்டு வயசுலேயும் சின்னப் பெண் மாதிரி ஸ்மார்ட்டா, வொய்? ப்யூட்டிஃபுல்லா—நீ

இருக்கறப்போ, நான் இவ்வளவாவது இல்லாட்டி எப்படி?''

கௌரி வாய் விட்டுச் சிரித்தாள்.

அவர்கள் பேச்சுப் புரிந்தது போல விக்ரம் வாலாட்டியது.

''என்னடா, நான் சொல்றது சரிதானே. அம்மா டீன் ஏஜர் மாதிரிதானே இருக்கா?''—

தலையை அதன் பக்கம் திருப்பி பாலாஜி பேசவும், குஷி அதிகமாக எழுந்து நின்று பலமாக வாலாட்டி 'வாவ்' என்றது.

''இன்னிக்கு ஆரஞ்சு ஜூஸ் மட்டும் போதுமா பாலா? நாலு ஆபரேஷன் இருக்கே... கூடா அரை கப் காபி தரேனே.''

பாலாஜி தலையசைத்து மறுத்தார்.

''நோ... மை டியர்... தாங்க்ஸ். ஆமா. இன்னிக்கு நாலா? மூணுதான்னு நினைச்சேனே''

''இரண்டு பைல்ஸ்... நாலாம் நம்பர் விமலா, அப்புறம் ஜெனரல் வார்ட் முனுசாமி... மிஸ்டர் சாரங்கன்... ஃபார் வேகாட்டமி... தென், மிஸ்டர் குமாரஸ்வாமிக்கு அபெண்டிஸெக்டமி, ஆக, மொத்தம் நாலு.''

''ஓ யெஸ்... முனுசாமிய விட்டுட்டேன்... நாலுதான்.''

சாப்பிட்டு எழுந்து அவர் கை கழுவப் போனபோது கௌரியும் பின்னோடு சென்றாள்.

''நேத்துச் சாயங்காலம் ஒரு சின்னக் கலாட்டா நடந்து போச்சு பாலா...''

''வாட்ஸ் தட்?''

சட்டென்று புருவங்கள் முடிச்சுப் போட்டுக்கொள்ள, கவலையுடன் வினவியவரின் கையைக் கௌரி பற்றிக் கொண்டாள்.

''நத்திங் வெரி சீரியஸ்... ஆனாலும் தப்புதான். மிஸஸ் சோமநாதன் அக்யூட் டயரியா அண்ட் டிஹைட்ரேஷனுக்காக நேத்துச் சாயங்காலம் அட்மிட் ஆனாங்க இல்லே? அவங்களை ட்ரீட் பண்றப்பதான் தப்பு நடந்து போச்சு....''

''என்ன சொல்றே கௌரி? என்ன ஆச்சு? நான் பாக்கறப்ப அவங்க நிலைமை அப்படி ஒண்ணும் பயப்படறுப்பல இல்லியே... மருந்தும், டிஹைட்ரேஷனுக்காக டெக்ஸ்ட்ரோஸ் ட்ரிப்பும்தானே கொடுக்கச் சொன்னேன்?''

''அங்கதானே ஸம்திங் வெண்ட் ராங் பாலா... நம்ப பார்மஸிலேந்து ஒரு பாட்டில் எடுத்துட்டு வந்து ட்ரிப் கொடுத்திருக்காங்க. டாக்டர் முகுந்தன் ஆரம்பிச்சு வச்சுட்டு ஸ்டாப் நர்ஸைப் பார்த்துக்கச் சொல்லிட்டு இன்னொரு பேஷண்டுக்கு ஈ. ஸி. ஜி. எடுக்கப் போயிருக்கார். அரை பாட்டில் இறங்கி இருக்காது. திடும்னு மிஸஸ் சோமநாதன் எனக்கு என்னமோ பண்ணுது. மயக்கமா இருக்குன்னு சொல்ல, முகுந்தன் வந்து பார்த்தா, பி. பி. இறங்கிடுச்சு, பல்ஸ்ஸும் பலவீனமாயிடுச்சு. என்னென்னுபுரியாம, எதுக்கும் முன்னெச்சரிக்கையா இருக்கட்டும்னு டெக்கோட்ரான், க்ரோமின் இன்ஜெக்ஷன் கொடுத்திட்டு ட்ரிப்பை எடுத்திட்டார். வழக்கம் போல ரூமெல்லாம் சுத்தமா இருக்கா, பேஷண்ட்ஸ் எப்படி இருக்காங்கன்னு பார்க்க நான்ஏழுமணிக்குப்போறேன். அப்பத்தான் அந்தக் கலாட்டா... பத்து நிமிஷத்துல மிஸஸ் சோமநாதன் ரிகவர் ஆயிட்டாங்க... நல்லா இருந்தவங்க திடீர்னு இப்படி ஆகக் காரணம் என்னென்னு துருவிப் பார்த்தா....''

பார்த்தா?''—

''5 பர்சண்ட் டெக்ஸ்ட்ரோஸுக்குப்பதிலா 25 பர்சண்ட்-ஐ ஃபார்மஸிஸ்ட் கொடுத்திருக்கார்.... முகுந்தன், ஸிஸ்டர் யாருமே கவனிக்காம ட்ரிப் துவக்கி இருக்காங்க பாலா.''

''ஓ மை காட்! ரத்த அழுத்தத்தைக் குறைக்க, வலிப்பு, மத்த நோய்க்குக் கொடுக்கிறதையா, ஏற்கனவே பலவீனமா இருக்கற மிஸஸ் சோமநாதனுக்குக்கொடுத்திட்டாங்க? ஹௌ இர்ரெஸ்பான்ஸிபிள்.''

கோபம் எட்டிப் பார்ப்பதை உணர்ந்து அவசரமாகக் கௌரி பேசினாள்.

''ஃபார்மஸிஸ்ட், சம்பந்தப்பட்ட எல்லாரையும் நான் கண்டிச்சுட்டேன். அவங்க இதுவரைக்கும் இந்த மாதிரி கவனக் குறைச்சலா நடந்துக்கிட்டதில்லே. ரொம்பக் கலங்கிப் போயிட்டாங்க.. நீங்களும் விட்டுடுங்க பாலா... ப்ளீஸ், இனிமே நிச்சயம் ஜாக்கிரதையாத்தான் இருப்பாங்க.''

கை துடைத்த டவலை மனைவியின் தோளில் பாலாஜி போட்டார்.

கோபத்தை அடக்கிக் கொண்டு அவளை ஏறிட்டார்.

''இப்படி நடக்கிறது இதுவே முதலும் கடைசியுமா இருக்கட்டும்'னு இன்னொரு தரம் பார்மஸிஸ்ட் கிட்டச் சொல்லிடு... ஜ'ல் டாக் டு முகுந்தன்....''


பேசிக்கொண்டே ஹாலுக்கு வந்தவர் கக்கூ க்ளாக் ஏழு தரம் கூவத் தொடங்கியதும், 'தாமியாச்சு டார்லிங்... ஸீ யூ லேட்டர்' என்று கிளம்ப, அவர் வராந்தாவுக்குச் சென்று, படிகளில்இறங்கி, அகல அகலமாய்க் கால்களை வைத்து நடந்து, நர்ஸிங் ஹோமில் நுழையும்வரை பார்த்துக் கொண்டே கௌரி நின்றாள்.

(தொடரும்)

''என்னங்க இது? எல்லாரும் அழுதுக்கிட்டே வராங்களே! ரொம்ப உருக்கமான படமோ?''

''நீங்க ஒண்ணு! ரொம்ப மோசமான படங்க இது. காசு வீணாப் போயிடுத்தேன்னு அழுதுகிட்டுவராங்க''

—மன்னார்குடி தேரோட்டி





CASBS-112-203 TAM

○ க. கண்ணன், செல்லூர் ★

? ராஜ்ய சபைத் தேர்தலில் கட்சியின் மேலிட ஆணையை மீறி வாக்களிப்பதையே புறக்கணித்த இரு ஜனதா எம். எல். ஏக்களின் செயல் குறித்து...?

! திரு. இஸ்மாயில் செய்த காரியம் சரியானதாகத் தோன்றுவதற்கு இரு காரணங்கள். (1) திரு. ராமமூர்த்தி நாடாளு மன்றத்துக்குப் போக முடியாதது ஒரு தேசிய இழப்பு. (2) கம்யூனிஸத்துக்கு ஆதரவு தரவேண்டாம் என்ற அடிப்படைக் கருத்து சரியாயினும் சமய சந்தர்ப்பம் அறிந்து செயல்பட வேண்டும். ராமமூர்த்தி வென்றதால் நாட்டில் கம்யூனிஸம் வந்துவிடப் போவதில்லை. ஆனால் மூப்பனார் வென்றதில் ஏற்கெனவே மத்தியில் பலம்வாய்ந்த கட்சியாக விளங்கும் இ. காங்கிரஸ் மேலும் பலப்படுகிறது. ஆக ஆட்சியில் உள்ள இ. காங்கிரஸை எதிர்ப்பது என்ற ஜனதாவின் நோக்கம் படுதோல்வி அடைகிறது.



○ எம். ஜி. ஆர்

○ தேரோட்டி, மன்னார்குடி

? எதை வைத்து ரு. க.வினால் பெண்களுக்கு ஆபத்து என்கிறீர்கள்?





○ சிவராமகிருஷ்ணன்

! விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளின் முடிவை வைத்து.

○ பி. டி. சிதம்பர சூரிய நாராயணன், பெரியகுளம்

? நினைத்தபடி செயற்கை மழை பெய்ததா?

! யாருடைய பாக்கெட்டிலோ பண மழை பெய்தது!

○ ப. பழனி, பல்லாவரம்

? பஸ் தொழிலாளர் திடீர் ஸ்டிரைக் பற்றி முதல்வர் அறிக்கை எப்படி?

! முதல் தரம்.

○ வெ. வைத்தியநாதன், கங்காதரபுரம்

? அமரர் கல்கி அவர்கள் எந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்காகக் கல்கிப் பத்திரிகையைத் தொடங்கினாரோ அந்த எண்ணத்தின் கால் பங்கையாவது இன்றைய கல்கி ஆசிரியர் நிறைவேற்றியிருப்பாரா?

! அமரர் கல்கி அவர்கள் எண்ணியதைச் செய்து முடித்தவர். அவர் காலத்திலேயே அவர் எண்ணங்கள் நிறைவேறி விட்டன முழுமையாக. இன்னொருவர் வந்து நிறைவேற்ற அவசியமில்லை. அவர் காட்டிய வழியில் இந்தப் பத்திரிகையை நடத்த முயல்கிறோம். சில தவறுகள் நேரலாம். ஆனால் அடிப்படை நோக்கங்களில் பழுதில்லை.

○ என். கந்தசாமி, ராமேசுவரம்

? தீண்டாமை, குடிப் பழக்கம், வரதட்சிணை முதலியவற்றைச் சட்டம் கொண்டு வந்து ஒழிக்க முடியாது என்கிறார்கள். அப்படியானால் சட்டம் எதற்கு?

! இந்த வாதம் மிகவும் தவறானது. திருட்டு, விபசாரம் போன்ற பல விஷயங்களைச் சட்டத்தின் மூலம் திருத்த முடியாது. நடந்து கொண்டுதான் இருக்கும். இதற்காகச் சட்டமே வேண்டாம் என்று கூறி விடுவதா? சட்டம் வேண்டும். அதைத் திறம்பட அமல்படுத்தவும் வேண்டும். இதைத் தவிர சமுதாயத்தில் ஆரோக்கியமான மனமாற்றத்தை உருவாக்கப் பிரசாரமும் வேண்டும்.

○ பால கோவிந்தராஜ், மதுரை

? மதுரை ஆதீனகர்த்தர் பல்லக்கில் செல்ல முடியாததால் காரில் போகிறேன் என்பது பற்றி உங்கள் கருத்து?

! காலத்துக்கு ஏற்ற சில மாறுதல்களை ஏற்பதில் பிசகு ஒன்றுமில்லை. ஓர் ஆதீனகர்த்தரின் செல்வாக்கும் மக்கள் அவரிடம் காட்டும் அன்பு, மரியாதை, மதிப்பு முதலியனவும் கார் அல்லது பல்லக்கினால் நிர்ணயிக்கப்படுவதில்லை.

○ சிந்தாமணி ஜெகதீஷ், திருச்சி

? கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் அணுமின்சாரத்தில் நியாயமான பங்கு தனக்கு வேண்டும் எனக் கர்நாடக அரசு கோருகிறதே?

! அதில் தவறில்லை. கல்பாக்கம் அணுமின் நிலையம் மத்திய அரசின் திட்டம். அதனால் அண்டை மாநிலங்கள் உரிமை கோருவதில் நியாயம் இருக்கிறது. தவிர இரண்டாவது கட்ட உற்பத்தியில் 50 சதம் பிற மாநிலங்களுக்கு உண்டுஎன்பது ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். இரண்டாவது கட்ட உற்பத்தி தொடங்கும்வரை காத்திருங்கள் என்று வேண்டுமானால் கூறலாம். அதற்கு மேல் பேச நமக்கு அருகதையில்லை.

○ எஸ். கணேசன், திருநெல்வேலி

? சமீபத்தில் தங்களை வருத்தமடைய, அதிர்ச்சி அடைய வைத்த சம்பவங்கள் எவை?

! எம். ஜி. ஆர். பயணம் செய்த கார் தாக்கப்பட்டதில் அதிர்ச்சி. போலீஸ் அறிக்கையைத்தொடர்ந்து தி. மு. க. தலைமையின்



○ செம்மங்குடி

பதிலால் வருத்தம். 'எமது தி. மு. க. தொண்டர்கள்தாம் சீண்டி விடப்பட்டார்கள், தாக்கப்பட்டார்கள்' என்ற அறிக்கை நாகரிகமானது அல்ல. 'எமது தி. மு. க. தொண்டர்கள் சீண்டப்பட்டார்கள், தாக்கப்பட்டார்கள். இருப்பினும் முதல்வர் கார் தாக்குதலுக்கு உள்ளானது தவறுதான்; வருந்துகிறோம்' என்று தி. மு. க. தலைமை கூறியிருந்தால் ஆரோக்கிய ஜனநாயகத்துக்கு உதவியிருப்பார்கள்.

○ சுரேஷ், கொடைக்கானல்

? மேற்கிந்தியத் தேர்வுக் குழுவின் தலைமை மறுபடி லாயிட்டுக்கு அளிக்கப்பட்டுள்ளதே?

! அவர் ராஜினாமா அவரது பெருமையை உயர்த்த அதை ஏற்காது அவரையே மீண்டும் காப்டனாக்கியது மே. இ. தேர்வுக் குழுவின் பெருமையை உயர்த்தியுள்ளது.

○ வி. சந்திரசேகரன், வீராக்கியம்

? இரட்டைச் சதம் அடித்து நாட் அவுட்டாகத் தொடர்ந்து ஃபார்மில் இருந்து வரும் இன்னிசை இளவல் இளையராஜா பற்றி.....?

! இரட்டைச் சதமும் மேலும் பல சதங்களும் அடித்துத் தொடர்ந்து ஃபார்மில் இருப்பதோடு போலிங்கிலும் ஒரு கை பார்க்கிற (சமீபத்திய சாதனை: எட்டு விக்கெட் — 2 காட்ச்; ஆக பத்து விக்கெட்டும் வீழக் காரணமானவர்) தமிழக ஓப்பனிங் பாட்ஸ்மன் வி. சிவராமகிருஷ்ணனின் ஆற்றலுக்கு ஒப்பிடலாம்!

○ கே. புகழேந்தி, பழனி

? ஒரு மனிதன் எப்போது வரை இளமையோடு இருக்கிறான்?

! சோர்வை அண்ட விடாமல் செயலூக்கத்துடன் விளங்கும்வரை. எடுத்துக்காட்டாக செம்மங்குடி. எண்பது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் இம்மேதை ஸ்ரீ ஸ்வாதி திருநாள் கிருதிகள் அனைத்தையும் சேகரித்து ஸ்வரப்படுத்திப் பிழையின்றிப் பிரசுரிப்பதில் பல ஆண்டுகளாகக் காட்டி வரும் ஆர்வமும் உழைப்பும் வியப்பில் ஆழ்த்துவது. அண்மையில் வெளியிடப்பட்டுள்ள இரண்டாம் பாகத்தில் அத்தனை கிருதிகளுக்கும் ஸ்வரத் தாளக் குறிப்புகளைத் தந்திருப்பவர் செம்மங்குடியே. தகுதி உணர்ந்து அவரிடம் பொறுப்பை ஒப்படைத்தது திருவிதாங்கூர் ராஜ குடும்பம். செம்மங்குடியின் சாதனைக்கு விழா எடுத்ததுடன் இளம் இசைக் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் செம்மங்குடி பொன் விழா அறக் கட்டளை பாராட்டுக்குரியது.

○ லலிதா சீனிவாசன், சென்னை-4.

? விலைவாசி விஷம்போல் ஏறியுள்ள இந்நாளில் மணமக்களுக்குப் பரிசு கொடுப்பது அவசியமா?

! எனக்குத் தெரியாது தாயே. நான் எப்போதுமே 'கைவீசம்மா' தான்!

○ சிந்தாமணி ஜகதீஷ், திருச்சி

? விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் பென்ஷனை நிறுத்திவிடலாம் என்று மொரார்ஜி கூறியது சரியா?

! சரிதான். தியாகத்துக்குக் கூலி பெற்றால் அது தியாகமாகாது.

ரூ. 10 பரிசு பெறுபவர்

★ க. கண்ணன்,
3, ஆசிரியர் வீதி
செல்லூர், திருநள்ளாறு
609 607



○ இளையராஜா



○ மதுரை ஆதீனம்

நீங்கள் கேட்டவை

எம். ஜி. ஆர் தாக்கப்பட்டது குறித்து...

துரை



பம்பாய் வி. சங்கர் & கம்பெனி ஆடிட்டர் நிறுவனத்தைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசன் அவர்களின் குமாரன் சிரஞ்சீவி **ரவி** அவர்களுக்கும் புது தில்லி எஸ்.வி.எஸ். மணி அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி **சரளா** அவர்களுக்கும் புது தில்லியில் 15-7-83 அன்று விவாஹம் சிறப்பாக நடைபெற்றது. புது தில்லி லெப்டினன்ட் கவர்னர் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

உன்னை அழைக்க நினைத்து..

பாரதியே!
ஒரு
பிருந்தாவனத்தை எதிர்
பார்த்து
பாலைவனத்தில்
கூவிய குயிலே!

நாளை முளைக்கும்
விதைகளுக்காய்
நேற்றே பெய்த மழையே!

நீ நம்பினாய்....
ஒரு சுதந்திர மழையில்
நம்
கொடிமரம் துளிர்விடும்;
இங்கு மண்டியிருக்கும்
வியாதி இருட்டு
விடைபெறும்;

அமுதத்தைப் போலவே
கண்ணீரும்
காணாத திரவமாய்
ஆகிவிடும்
என்றெல்லாம்
நீ
கனாச் சுகம்
கண்டுகொண்டிருந்தாய்.

• • •

இன்று....
இன்று.....
உன் தாயின் மணிக்கொடி
பட்டொளி வீசிப்
பறக்கவில்லை பாரதி!
அது—
அசைந்தால் கிழிந்துவிடும்
அபாயத்தில் இருக்கிறது.

வறுமைக்கு—
தான்
பிறந்த வீடு எதுவென்று
தெரியுமோ தெரியாதோ
புகுந்த வீடென்னவோ
புண்ணிய பாரதந்தான்.

இங்கே
வறுமை வெளியேறவில்லை—
கிராமத்து மக்களை
வறுமைதான்
வெளியேற்றிக்கொண்டிருக்
கிறது.

பாரதி!
உன்
கட்டளைக்குக்
கட்டுப்பட்டால்—
அழிப்பதற்கிங்கே
நாற்பது கோடி ஜகங்கள்
நாளைக்கே வேண்டும்.

• • •

இங்கே
மேட்டு வர்க்கத்தின் கவலை
இன்றைப் பற்றி.
அடித்தட்டு மக்களின் கவலை
நேற்றைப் பற்றி.
நடுத்தர வர்க்கத்தின் கவலை
நாளையைப் பற்றி.

இங்கே
மாதக் கடைசிகளைத்
தேதிகளில் அல்ல...
கண்களிலேயே
கண்டுகொள்ளலாம்.
ஏதோ போதை!
'பிம்பங்கள்
ரத்ததானம் செய்யும்'
'காகிதப் பூக்கள்
கர்ப்பம் தரிக்கும்'
'அமாவாசைகளில்
நிலாச் சோறு'
எல்லாம்
வசியம் பூசிய
வாக்குறுதிகள்.

வாக்களித்தவனின்
விரலில் குத்தும்
கரும்புள்ளி—
பின்னால்—
முகத்தில் பூசும் கரிக்கு
முன்னுரை அல்லவா?

பாரதி!
இனி
பாரத மாதாவும்
'ஒரு
பாஞ்சாலி சபதம்'
எடுத்தாக வேண்டும்!





New Philips Ferro Cassette now available in India.

At last ! A cassette that won't damage your recording head

Philips, the inventors of the world's first cassette bring you a world-class cassette.

International quality tape

Tape that won't snap or tear or stretch; a smooth and even coating; superior tonal response; high signal-to-noise ratio. With a precision mechanism to prevent jamming and snapping of tape.

Ask for it at your Philips dealer today.



Also Philips Ferro Popular at a popular price.

PHILIPS

PHILIPS—the trusted Indian household name for over fifty years.

OBM/9435

● ரொம்ப நாளைக்கப்புறம் திறைய மேக் கப் அப்பிய நடிகர்கள்.

ரகுநாத்: நாயகன். வி. கே. ஆரின் மகன். நடனம் சுலபமாய் வருகிறது. நடிப்பு?

ரகு: குரல் நல்ல ஒத்துழைப்பு. கொஞ்சம் மிடுக்கு. அல்லிபுரம் மைனர் என்னும் அந்த நான் தெருக்கூத்து வேஷம். கொஞ்சம் மெருகேறினால் நிஜமாகவே எம். ஆர். ராதா வின் அடுத்த வாரிசு.

மனோரமா, தங்கவேலு, தேங்காய், வெ. ஆ. மூர்த்தி. ஒய். ஜி. மகேந்திரன், படமோ வி. கே. ஆருடையது. இருந்தும் நகைச்சுவை திடீர் திடீரென்று காணாமல் போகிறது.

வைஜயந்திமாலா: கண் கயல் மாதிரி தான். அதற்காக ஒவ்வொரு சீனிலும் மீன் மாதிரி வாயைத் திறந்து காட்ட வேண்டுமா என்ன? கொஞ்சம் உணர்ச்சி, கொஞ்சம் பாவம்... ஊஹூம்! நாலைந்து தமிழ்ப் படம் நடித்த கதாநாயகி போல் ஆலமர உடம்பு வேறு.

ஸ்ரீலட்சுமி: கவர்ச்சி உடம்பு. இம்மென் றால் புடவை அவிழ்க்கிறார். உம்மென்றால் படுக்கையில் விழுகிறார்.

சிலுக்கு: மூன்று நிமிஷக் கொண்டாட்டம்.


சங்கர் கணேஷ்: 'கவிஞர் வழங்கிய தேவ ரின்' என்று டைட்டிலில் காட்டுகிறார்கள். இனி இப்படிப் போட்டால் பொருத்தமாய் இருக்குமோ? 'பாப்பிலஹரி, பர்மன், எம். எஸ். வி., இளையராஜா, கவிஞர் வழங்கிய தேவரின் சங்கர்–கணேஷ்.'

கதை(?) திரைக் கதை(??) டைரக்ஷன்(???) வி. கே. ராமசாமி: துணிச்சலான டைரக்டர் தான். இவ்வளவு உளுத்துப் போனகதையை,



வறண்டுபோன சம்பவங்களை வைத்துக் கொண்டு முதல் படம் எடுக்கச் சாதாரணத் துணிச்சல் போதாது!

-ஜெய மன்மதன்







17

காதல், பெண்ணின் விழிகளுக்குப் புதிய சுடரொளியைத் தருமோ!

டாக்டராகப் பதிவு செய்து கொண்ட தினத்தன்றே ராம்குமார் மதுரைக்குப் பறந்து கொடைக்கானல் மலையுச்சிக்குச் சென்றுவிட்டான்.

ராமின் பிரிவு இம்முறை பத்மாவைப் பெரிதாகப் பாதிக்கவில்லை.

சித்தியின் வீட்டில் தனியறையில், இரவு பதினொரு மணிக்கு நாவலை மூடிவைத்து விட்டு விளக்கை அணைத்தாள். 'நீயும் கொடைக்கானலுக்குப் புறப்படத் தயாராக இரு. இன்னும் ஒரு வாரத்துல உனக்குப் போஸ்டிங் ஆர்டர் வீடு தேடி வரும்' என்று ராம் விமான நிலையத்தில் சொன்னது அவள் நினைவில் திரும்பத் திரும்ப எதிரொலித்தது.

அதிகாலையில் ஈரக் கூந்தலைத் துவட்டியவள், உலகின் உச்சியில் நிற்பதைப் போல உணர்ந்தாள். காதல் உணர்வுதான் ஒரு பெண்ணை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது என்று எண்ணியவாறு நிலைக்கண்ணாடி எதிரே நின்று கழுத்தில் பவுடரைப் பூசினாள்.

'பத்மா! நாளுக்கு நாள் நீ அழகியாகிட்டே போறேடீ' என்று டெய்சி காதருகே பேசுவதைப் போன்ற பிரமை.

மனத்தில் காதல் மலர்ந்து விட்டால் உடம்பில் பௌதிக ரசாயன மாறுதல்கள் எல்லாம் நிகழும் போல இருக்கிறதே! பூரிப்பினால் உடம்பு கனத்து விட்ட மாதிரியும், ஏக்கத்தினால் இளைத்து விட்ட மாதிரியும் ஏக காலத்தில் இரண்டு விதமாக உணர்கிறேனே! என் விழிகள் விடியற்காலைப் பனியினால் கழுவப்பட்டதைப் போலப் பரிசுத்தமாகப் பளபளக்கிறதே! காதல் பெண்ணின் விழிகளுக்குப் புதிய சுடரொளியைத் தருமோ!

''பத்மா!'' என்று சித்தப்பா கூப்பிட்டார்.

''என்ன சித்தப்பா?'' என்றபடி பத்மா ஹாலுக்கு வந்தாள்.

''ஒரு சின்ன க்ளினிக் வைக்க உத்தேசமா எவ்வளவும்மா ஆகும்?''காதுக்குள் இணைத்த நிக்குச்சியைத் திருகிக் கொண்டே கேட்டார்.

சப்பாத்திக்குத் தேய்த்துக் கொண்டிருந்த சித்தி புகைப்படம் போல அசைவற்றுப் பத்மாவையே பார்த்தாள்.

''சின்ன க்ளினிக்னாலும்.... ஒரு ஸ்டெரிலைஸர் வாங்கணும், எக்ஸ்ரே வாபி, B. P. அபாரடஸ், வாஷ் பேசின், பர்னிச்சர்... ஐயாயிரம் இருந்தா ஸ்டார்ட் பண்ணிரலாம். ஏன் சித்தப்பா?''

''முன் ரூமைத்தான் க்ளினிக்கா மாத்திரலாம்னு நினைக்கிறேன்.''

''மாத்தி?''

''சும்மா ஒரு நாலைஞ்சு வருஷத்துக்கு பிராக்டிஸ் பண்ணு.''

உடனே சித்தி, ''பத்மா, பத்மா, சித்தப்பா ஆஸ்பத்திரி வெச்சுக் குடுப்பாரு. அதுக்காக வேலை தேடறதை நீ நிறுத்த வேண்டாம். கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகள்ல வேலை கிடைச்சா ரொம்ப நல்லா இருக்கும்.''

''கவர்ன்மெண்ட் வேலை இப்ப யாரு குடுக்கறாங்க? சும்மா வாயை மூடிக்கிட்டு இரு.'' என்றார் சித்தப்பா.

''நான் எதுக்குச் சொல்றேன்னு உங்களுக்குப் புரியாது. பகல்ல கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில வேலை பார்த்தான்னா ஒண்ணாந் தேதி சம்பளம் வாங்கிக்கலாம். சாயங்காலத்தில நம்ம ஆஸ்பத்திரியையும் கவனிச்சுக்கலாம். சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு வர்ற நோயாளிகளை வீட்டுக்கு வரச் சொல்லலாம். அங்கே சேராழியற மாத்திரை மருந்துகளை எடுத்துட்டு வந்து நம்ம ஆஸ்பத்திரியில உபயோகிக்கலாம்....''

''போதும்னேன். உன் யோசனைகளை உன்னோட வச்சுக்க. என்ன பத்மா சொல்றே? க்ளினிக் ஆரம்பிச்சிரலாமா?''

''இந்த ஏரியாவில ஓடாது சித்தப்பா. பக்கத்தில ஏகப்பட்ட பாலிக்ளினிக் இருக்கு. ரட்லண்ட் கேட்ல இருக்கிற மாடி வீட்டுக்காரங்கள்ளாம் ஸ்பெஷலிஸ்டைத் தேடிப் போவாங்களே தவிர எங்களை மாதிரி புது டாக்டர்கள் கிட்ட வர மாட்டாங்க. பக்கத்துல ராயப்பேட்டை வேற இருக்கு. போர்டைத் தொங்கப் போட்டுக்கிட்டுச் சும்மா உக்காந்திருக்க வேண்டியதுதான்.''

''அப்புறம் என்னசெய்யறதாஉத்தேசம்?''

''கொடைக்கானல்லே பிரகாஷ் நர்ஸிங் ஹோம்னு ஒண்ணு இருக்கு. ரிடையரான ஒரு மிலிடரி டாக்டர் ஏழைங்களுக்காக நடத்தறார். அங்கே ஒரு லேடி டாக்டர் போஸ்ட் காலியா இருக்கு.. அப்ளிகேஷன் போடலாம்னு இருக்கேன்.''



''கொடைக்கானலுக்கா! ரொம்ப தொலை வாச்சே!'' என்றாள் சித்தி.

''சம்பளம் ஆயிரத்து ஐநூறு கிடைக்கும் சித்தி. தங்கறதுக்கு குவாட்டர்ஸ் குடுக்கறாங்க. ஐநூறு ரூபாய் என் செலவுக்குப் போதும். மாசம் ஆயிரம் ரூபா சித்தப்பாவுக்கு அனுப்பி வெச்சிருவேன்.''

''மாசம் ஆயிரம் ரூபாயா!'' என்றாள் சித்தி. ''சீக்கிரமா அந்த வேலைக்கு எழுதிப் போடு. வேறே யாருக்காவது குடுத்திறப் போறான்.''


''கொடைக்கானலுக்கு எப்படிம்மா தனியாப் போவே? பக்கத்துலயா இருக்கு?'' என்றார் சித்தப்பா.

உடனே சித்தி, ''கொடைக்காவல் என்ன லண்டன்லேயா இருக்கு? கோயமுத்தூருக்குப் பக்கத்துல இருக்கு. இந்திரா காந்தி டில்லி போயி வேலை பாக்கலை? அவுங்க பொம்பளை இல்லே? படிச்ச பொண்ணுங்களுக்கு என்ன துணை வேண்டிக் கிடக்கு?'' என்றாள்.

ராம் ஏற்கனவே சொல்லி யிருந்தபடி, புதன் கிழமை அதிகாலை ஏழரைக்குப் பத்மா சாந்தோம் பங்களாவை அடைந்தாள். தோட்டத்து நிழலில் பிரம்பு நாற்காலிகள் போட்டு ராமின் அப்பாவும் அம்மாவும் அமர்ந்திருந்தனர். தொலைவில் நீல சமுத்திரம் அலையடித்தது.

''வாம்மா, வா'' என்று ராமின் அம்மா வரவேற்றாள்.

பைப் கடித்து கையில் ஹிண்டு விரித்திருந்த ராமின் அப்பா, ''நேத்திக்கு நைட் ராம்



பேசினும்மா. இன்னும் ரெண்டு மூணு நாள்ல அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் உன் வீட்டு அட்ரஸுக்கே வந்திருமாம். உக்கார். வேலு, இன்னொரு சேர் கொண்டா. ராம் அங்கே எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிக் கிட்டிருக்கான்'' என்றார்.

''சமையலுக்கு ஒரு நல்ல வேலைக்காரி ஏற்பாடு பண்ணச் சொல்றேன். ஒரு நாலஞ்சு மாசத்துக்கு அட்ஜஸ்ட் பண்ணிக்கோ'' என்றாள் ராமின் அம்மா.

''நாலஞ்சுமாசத்துக்கு அப்புறம் என்ன?'' என்று அப்பா புன்னகையுடன் பத்மாவின் முகத்தை ஆழமாகப் பார்த்தார்.

பத்மா நாணப் புன்னகையுடன் தலை கவிழ்ந்தாள்.

''டாக்டர் மிஸஸ் பத்மா ராம்குமார், எம். பி. பி.எஸ். அப்படித்தானே?'' என்றார் அவர்.

தலை கவிழ்ந்திருந்த பத்மா புடவைத் தலைப்பால் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டபோது அம்மாவும் அப்பாவும் அர்த்தமுள்ளபார்வைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர்.

கொடைக்கானலை நோக்கி மலைச் சாலையில் வளைந்து வளைந்து ஏறிய பஸ்ஸில் பத்மா நெஞ்சை முத்தமிடும் கனவுகளுடன் அமர்ந்திருந்தாள். கொடைக்கானலில் பஸ் நின்றபோது அவளுடைய சொந்த இதயமே விலாவோடு படபட வென்று மோதியது.

ராம் வந்திருக்கிறானா? பார்வையைச் சுழற்றினாள். குளிரால் 'வெட வெட' வென்று நடுங்கினாள். என் தந்தி கிடைத்திருக்காதோ?

கண நேரம் குழம்பியபோது ராமின் ஃபியட் வந்து கொண்டிருந்தது.

''பிரயாணம் கம்ஃபர்ட்டபிளா இருந்துதா?'' கார் புறப்பட்டதும் கேட்டான்.

''ம்'' என்று புன்னகையுடன் முகத்தை அசைத்தாள். மலைப் பிரதேசத்தையே பார்த்தறியாத பத்மா மேகத்தை உரசும் பச்சைச் சிகரங்களையும், யூகலிப்டஸ் மரங்களையும் அதிசயித்து ரசித்தாள்.

சரிவுப் பாதையில் ராம் படு வேகமாகக் காரை விரட்டினான். மேகங்கள் உறங்கிய பாதாள பள்ளத்தாக்கைப் பத்மா அச்சத்துடன் பார்த்தாள்.

குவார்ட்டர்ஸ் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. குளிர் தாக்காதபடி தரையில் மரப் பலகைகள் பதிக்கப்பட்டிருந்தன. வட்டச் சுவரில் இருந்த கண்ணாடி ஜன்னல்களின் வழியே நீலப் புகை படர்ந்த சமவெளி தெரிந்தது. ஹீட்டரும் கட்டிலும் அமர்க்களமாக இருந்தன.

''இதுதான் டாக்டரம்மாவோட பங்களா'' என்றான் ராம்.

புடவையும் ஸ்வெட்டரும் அணிந்து, விலகி நின்ற வயதான பெண்மணியை ''பார்வதியம்மா, வாங்க'' என்று ராம் பக்கத்தில் அழைத்தான். ''பத்மா, இவுங்க உன் கூடவே இருப்பாங்க. உனக்கு என்ன தேவைன்னாலும் இவுங்க கிட்டச் சொன்னாப் போதும். ஓ.கே? நீ குளிச்சு ரெஸ்ட் எடுத்துக்கோ. நர்ஸிங் ஹோம்ல இன்னிக்குப் பார்த்து நீளமா க்யூ நிக்குது. சாயந்தரம் வர்றேன்.''

அடுத்த ஒருவாரத்தில் பத்மாவுக்கு ஏறத்தாழ கொடைக்கானல் முழுவதையும் ராம் காரில் சுற்றிக் காண்பித்து விட்டான்.

மப்பும் மந்தாரமுமான ஒரு ஞாயிறன்று பிற்பகல் கோல்ஃப் கிளப் பக்கம் மைதானத்தில் தனிமையாக அமர்ந்திருந்தனர்.

''சித்தியும் சித்தப்பாவும் நம்ம மாரே ஜுக்குச் சம்மதிப்பாங்களா பத்மா?'' என்று சந்தேகத்துடன் கேட்டான் ராம்.

''உண்மையை மறைக்காமச் சொல்லட்டுமா? இன்னும் நாலஞ்சு வருஷத்துக்கு நான் அவுங்களுக்குச் சம்பாதிச்சுக் குடுக்கணும்னு எதிர்பார்க்கறாங்க.''

''அதுல ஒண்ணும் தப்பில்லையே. ஒரு லட்ச ரூபாயை கேஷா குடுத்திருவோம். என்ன சொல்றே?''

''முதல்ல லெட்டர் எழுதிப் பாக்கறேன். எதிர்ப்புத் தெரிவிச்சாங்கன்னு அப்புறம் பார்க்கலாம்.''

''அங்கே பாரு.''

பத்மா பார்த்தாள். மைதானத்துக்கு மேலே கைக்கு எட்டுகிற உயரத்தில் ஒரு மேகம் இரண்டாகப் பிளந்து பிரிந்துகொண்டிருந்தது.

''எதிர்பாராத முத்தத்துக்குப் பிறகு மனசில்லாமல் பிரியற இதழ்கள் மாதிரித் தெரியலே?''

''இப்பக்கண்டு பிடிச்சுட்டேன். கோடைக் கானல்தான் உங்களைக் கவிஞராக்கியிருக்கு.''

''இல்லே பத்மா. என்னைக் கவிஞனாக்கியது நீதான்'' என்றவன் அவள் முகத்தையே பார்த்தான். அவளுடைய குழந்தைக் கண்ணங்களில் முத்தங்களைக் குவிக்கத் துடித்தவனாய், ''இன்னிக்காவது ஒண்ணு தாலாமா?'' என்றான்.

''நானே தர்றேனே'' என்றாள் பத்மா.

''நிஜமாகவா? எங்க குடு.''

பத்மா தன் வலக் கரத்தின் நான்கு விரல்களில் ஒரு முத்தத்தைப் பதித்து அந்த விரல்களை அவன் உதட்டின் மேல் வைத்தாள். ''இருட்டிக்கிட்டு வருது. கிளம்புவோம்.''

எழுந்தனர்.

''கேன் ஐ ஹோல்ட் யுவர் ஹாண்ட் டியர்?'' என்று அனுமதி கேட்டான்.

''ஷ்யூர்'' என்ற பத்மா தன் கரத்தை அவனிடம் ஒப்படைத்தாள்.

அவனுடைய கதகதப்பான கரம் அவள் கரத்தைக் கைப்பற்றியபோது அவர்களுடைய விரல்கள் பின்னிக் கொண்டன.

பத்தே நாட்களில் அநேக நோயாளிகளின் மனத்தில் பத்மா இடம் பிடித்து விட்டாள். பத்மா கழுத்தைச் சுற்றி ஸ்டெத்தைப் போட்டுக்கொண்டு பிரகாஷ் நர்ஸிங் ஹோமின் பெண்கள் பகுதிக்குள் நுழைந்தபோது பெண்கள் கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

ஒரு அதிகாலை. ஆறு மணி.

நைட் டியூட்டி பார்த்த ராம் தூக்கக் கலக்கத்துடன் எழுந்து மருத்துவ மனைக்கு வெளியே வந்தான். காருக்குள் ஏறி அமர்ந்தான். ரிவர்ஸில் காரைச் சாலைக்கு மெதுவாக நகர்த்தினான்.

மூடுபனி அடர்த்தியாகப் பரவியிருந்த அந்த வேளையில் விளக்கில்லாமல் ஒரு லாரி சாலையில் வந்து கொண்டிருந்தது அவனுக்குத் தெரியவில்லை. (தொடரும்)



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1983



※ இடமிருந்து வலம்: ஸ்ரீமதி அநுராதா ரமணன், ஸ்ரீ வேணுகோபாலன், கல்கி ஆசிரியர் கி. ராஜேந்திரன், கே. ஆர், வாசுதேவன், கு. ராஜவேலு

1983, ஜூலை 24ம் தேதி நடுவர் குழுவினர் கூடி, விவாதித்து, பின்வரும் சிறுகதைகளைப் பரிசுக்குரியன எனத் தேர்ந்தெடுத்தனர்.

முதல் பரிசு ரூ. 1000

யாரோ பார்க்கிறார்கள்—
கோ. வி. ஜெயராமன் (ஜெரா)
ஜூனியர் இன்ஜினியர்,
அனல் பிளாண்ட்
எம். வி. ஐ. வி. லிட்.,
மேட்டூர் அணை 636-403

இரண்டாம் பரிசு ரூ. 500

எனது வண்ண நிலா—
கலியாண வெங்கடேசன்
45. வடக்கு மாட வீதி.
திருவொற்றியூர்
சென்னை 600-019

மூன்றாம் பரிசு:
தலா ரூ. 250 வீதம் இரு சிறுகதைகளுக்கு

(1) ஜீவனுமசம்
கே. ஜெயலட்சுமி
5, முதல் கிராஸ் தெரு.
டிரஸ்ட்புரம்
கோடம்பாக்கம், சென்னை 600-024.

(2) வெய்யில் இனி என்ன செய்யும்?
கே. மோகன் (சஞ்சீவன்)
14, அருணாசல கிராமணி தெரு.
கே. கே. புதூர், கோவை 641-038

கல்கி வாசகர்கள், எழுத்தாளர்கள் சார்பில் நமது நன்றியைப் பெறும் நடுவர்கள்:

(1) கு. ராஜவேலு,
இயக்குநர், பண்பாட்டு இயக்ககம்,
தமிழக அரசு.
(2) கே. ஆர். வாசுதேவன்
ஆசிரியர், ரத்னபாலா
(3) ஸ்ரீவேணுகோபாலன்
(4) அநுராதா ரமணன்
(5) ஆசிரியர், கல்கி

(பிரசுரத்துக்கு ஏற்கப்பட்ட கதைகள் விவரம் அடுத்த இதழில்)

புகைப்படம்: உத்ரா

எப்போது தான் விடியுமோ?


மதுவிலக்கைக் கைவிடுவது என்று எம்.ஜி. ஆர். முடிவெடுத்தபோது அதை எதிர்த்த அடியாரிடம், ''நீ என்ன சொன்னாலும் மது விலக்கைக் கைவிடுவதென்று நான் முடி வெடுத்து விட்டேன்'' என்று எம். ஜி. ஆர். சொன்னவுடன் அந்த 'நான்' என்ற சர்வாதிகாரத்தை எதிர்த்து அப்போதே கட்சியை விட்டு வெளியேறி யிருந்தால் அடி யாரைப் பாராட்டி யிருக்கலாம்.

சென்னை-57 இரணியல் 'கலை'

ஐன்ஸ்டைனின் பிரசித்தி பெற்ற தத்துவம் $E=MC^2$ தான், NC^2 அல்ல! 'விஞ்ஞானம் பற்றி அணு அளவாவது தெரியுமா?' என்று கேட்டுவிட்டு உங்களது அஞ்ஞானத்தை இப்படி விளம்பரப்படுத்திக் கொண்டிருக்க வேண்டாமே!

ஈரோடு ஜி. இளங்கோ

மாதம் ரூ. 500 செலவு செய்து நாய்கள் வளர்த்தால் அந்தத் தொகையைத் திரும்பச் சம்பாதித்துவிட முடியுமா? தயவு செய்து



ஷ்ரேயஸின் அப்பாவிடம் கேட்டு எங்களுக்கும் சொல்லுங்களேன்!

இளங்கார்குடி நிரஞ்சன் பாஸ்கர்

'ஈத் முபாரக்' கட்டுரையில் அரசாங்கத் தலைமை காஜி ஜனாப் குலாம் முகம்மது தகி கான் அவர்கள் ரம்ஜானைப் பற்றிக் கூறியது யாவும் அனைவரையும் கவர்ந்தது. ஆனால், குடும்பத் தலைவி ஜனாபா மஹீர் மிர்ஸா அவர்கள் கடைசியாக ''மாலையில் சினிமா எல்லாம் போவதுண்டு'' என்று சொல்லி யிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் சினிமா பார்ப்பது என்பது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளது.

சென்னை-1 நாகை ஜி. அஹமது

'டௌரி கல்யாணம்' விமரிசனம் படித்தேன். ஸ்ரீவித்யா தன்னுடைய ஊர் திருத்துறைப்பூண்டி என்றதும் ''நெனைச்சேன்.— உம்மரைப்பார்த்ததுமே உனக்குத் தஞ்சாவூர் ஜில்லாவாகத்தான் இருக்கும்னு!'' என்று சொல்கிறார் ஒரு பாட்டி. இது தஞ்சை மக்களின் நெஞ்சைப் புண்படுத்தும் என்பதை உங்கள் விமரிசனத்தில் சுட்டிக் காட்டாதது பெரிய குறை.

சீர்காழி சுந்தரம்

அன்புள்ள மஹேஸ்வரிக்கு,

நீ பார்த்து மகிழ்ந்த 'காட்டிலே ஒரு குடும்பம்' படத்தின் கதையை அம்முவுக்குச் சொல்லும்போது அந்த மாமாவின் பிள்ளைகள் தூக்கிக் கொண்டு வந்துவிடுவது சிங்கக் குட்டிகள் என்று தவறாகச் சொல்லி யிருக்கிறாய். அவை புலிக் குட்டிகள்! நீ பயத்தில் கண்ணை மூடிக் கொண்டதால் படத்தைச் சரியாகப் பார்க்கவில்லை போலிருக்கிறது!

பெங்களூர்-53 சித்திரப்பிரியா

'திறமைக்குத் தண்டனை' என்ற தலையங்கம் படித்தேன். நான் '68 சதவிகிதத்தினுள்ளேதான் (பிற்பட்டோர்) பகுதி நேர பி.ஈ. அப்ளை செய்துள்ளேன். 80 சத மதிப்பெண்கள், மூன்றரை வருட அனுபவம். இதனூடே எனது நிலை 'மெரிட்'டில் 7ம் இடம். எனக்கே இடமில்லை சென்ற முறை. இப்பொழுதும் அப்படித்தானோ அறியேன்.

இதற்கான காரணம் ஊழலில்லை? பொரிக இல்லை?

திருச்சி பன்னீர்செல்வம்

ஒதுக்கீட்டினால் பாதிக்கப்பட்டவர்களுள் நானும் ஒருவன். என்னுடன் படித்த என்னை விடக் குறைவாக மார்க் வாங்கியவர்கள் இன்று கல்லூரிகளில் படிக்கிறார்கள். நான் இடம் கிடைக்காமல் வீட்டில் இருக்கிறேன். என் போன்ற இளைஞர்களுக்கு எப்போது தான் விடியுமோ?

சின்னசேலம் கோ. பாபு

டி. வி. சங்கரநாராயணனின் கச்சேரியைப் பற்றி நான்கே வரிகளில் மனம் குளிர எழுதிய தராசு பதில்களைப் படித்த அதே இதழில் மெல்லிசைப் பாடகர் ஒருவரைப் பற்றி இரண்டு பக்கங்கள் எழுதி வீணடிக்கப்பட்டது கண்டு வருந்துகிறேன். பல ட்யூன்கள் காப்பியடிக்கப்பட்டு உருவாகும் சினிமா இசையை மீண்டும் காப்பியடித்து ஒருவர் பாடுவதில் என்ன மேன்மை இருக்கிறது? இந்த மெல்லிசைக் குழுக்கள் தங்கள் திறமையை வேறு இசைத் துறைகளில் வளர்த்துக் கொண்டால் அதுவே இசைக்குச் செய்யும் தொண்டாகும்.

சென்னை உமாபதி

கமலின் எளிமையான தோற்றத்தை அட்டைப் படமாக ஏ. வி. பாஸ்கர் கொடுத்திருப்பது கண்ணுக்குக் குளுமையாக இருந்தது. வாசகர்களுக்கு இதுவே ஒரு பரிசுதான்!

வாழ்குடி ஆ. சந்திரசேகரன்

தாலாட்டும் பாசமெனத் தவழும் மென்மை!



இளம் பிஞ்சு அவன் மேனி
எளிதில் புண்படும்—
ஈரத்தில் ஊறும்போதோ
எரிச்சல், உரசல்,
இடைஞ்சல். எரிச்சலை
ஆற்றி, துணி உராய்வுப்
புண்களைத் தடுப்பது
ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்.

வளரும் பருவ முழுதும்
பாப்பாவுக்குப் பாதுகாப்பு
—தூய்மை கொஞ்சும்
மென்மையான
ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்.
நேரிலும் நினைப்பிலும்
பாப்பாவுக்கு அதுவே
உங்கள் அன்பின் தாலாட்டு.



குழந்தைப் பராமரிப்புக் கைப்புத்தகம் வேண்டுவோர்
எழுதுக இம்முகவரிக்கு: JOHNSON & JOHNSON LTD.,
(C.I.C-I) 30, FORJETT STREET, BOMBAY-400 036.

உலர் நயமுடன் குளுகுளு சுகம்- ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்

அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப் போட்டி '83
ரூ.1000 முதல் பரிசுக் கதை



யாரோ பார்க்கிறார்கள்

சுப்பையா வெளியே வருவதற்கும், ஒரு பதினொன்றும் நம்பர் பஸ் பயணிகளின் பாரத்தை முற்றுமாக இறக்கி வைக்கவும் சரியாக இருந்தது. இவனுக்கு முன்பே ஒரு பெருங்கூட்டம் கீழே சிதறி விழுந்த சில்லறையைப் பொறுக்கும் வேகத்தோடு பஸ்ஸுக்குள் அடைந்து கொள்ளப் பாய்ந்து கொண்டிருந்தது. எல்லோருக்கும் அவசரம், சீக்கிரமாக வீட்டுக்குப் போய்விட வேண்டும்!

அதில் இருந்தவர்கள் பெரும்பாலும் ஆபீஸ் கவலைகளை இறக்கி வைத்து விட்டு, குடும்பக் கவலைகளை ஏற்றுக் கொள்ளப் போகும் நடுத்தர வயதுக்காரர்கள்தான். இளவட்டங்களைப் போல, ஃபுட்போர்டிலும், நெரிசலிலும் பயணம் செய்ய விரும்பாமல் 'மியூசிகல் சேர்' பந்தயம் போல் சீட் பிடிப்பதற்காகத் தாவிக் கொண்டிருந்தனர்.

சுப்பையாவும் அதைத்தான் செய்தான். ஆனால்... வயதாகி விட்ட செருப்பின் வார் கர்ணனின் தேர்ச் சக்கரம் போலக் கடைசி நேரத்தில்- பழிவாங்கி விடவே, செருப்பை எடுத்து டிபன்பாக்ஸ் இருந்த பைக்குள் போட்டுக் கொண்டு பஸ்ஸைப் பிடிப்பதற்குள், அது மூச்சுத் திணறியபடி நகர ஆரம்பித்து விட்டது.

வேறு வழியில்லை! தன்னை ஒரு 'மடன் ஏஜ்' வாலிபனாகத்தான் கற்பனை செய்துகொள்ள வேண்டியிருந்தது சுப்பையாவுக்கு. அவன் தாவி ஏறிய விதம் வயதுக்குப் பொருந்தாமல், பார்ப்பவர்களை அப்படித்தான் நினைக்



கத் தூண்டும்! கண்டக்டர் வேறு பல மனித தலைகளை விலக்கி, எட்டிப் பார்த்து, இவனுடைய செயலுக்காக எரிந்து விழுந்து விட்டு, 'ரைட்'கொடுத்தபடி நெருப்புக் கோழியாக மீண்டும் புதைந்து கொண்டார். என்ன செய்வது? இந்த நடுத்தர வாழ்க்கையில், தேவையில்லாமல் இப்படிச் சில 'அர்ச்சனை'களுக்கு ஆளாவது சகஜமானதுதான்!

கப்பையா எப்படியோ அடித்துப் பிடித்து உள்ளே நகர்ந்து. ஒரு சீட்டோரம் இருந்த கம்பியில் லேசாகச் சாய்ந்து நின்றுகொண்டான். உடம்பு மிகவும் அசதியாக இருந்தது. உட்கார்ந்து கொண்டால் தேவலை போல இருந்தது. இப்போதெல்லாம் இப்படித் தான்! எங்கிருந்துதான் இந்தக் களைப்பும் ஆயாசமும் வந்து சேருமோ? அதுவும் மாதக் கடைசி என்றால் சொல்லவே வேண்டியதில்லை! பத்தடி நடப்பதற்குள் படுத்து விடலாமா என்றிருக்கும்! பணத் தேவை பெரிதாக வாயைத் திறக்கும்போது முதலில் பலியாகிப் போவது இந்த உற்சாகமும், சுறுசுறுப்பும்தான்!

அதிலும் இன்று நேரமே சரியில்லை! எழுந்திருக்கும்போதே நெடு நேரமாகிவிட்டது. சீக்கிரமே எழுந்தால் வழக்கமாக நிற்கும் பாக்கிக்காகப் பால்காரியிலிருந்து ஸ்கூலுக்குப் போகும் குழந்தைகள் வரை 'நை, நை' என்று அரித்தெடுத்து விடுவார்கள் என்ற பயத்தாலோ என்னவோ, இமைகள் திறக்க மாட்டேன் என்று அடம் பிடித்தன. போதாததற்கு 'காலை டிபனுக்கு வழியில்லை' என்று நேற்றே மனைவி 'காப்ரா' படுத்தி இருந்தாள்.

எழுந்தால் மொய்த்துக் கொள்ளக் காத்திருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கிடையே சிக்கிக் கொண்டு பேந்தப் பேந்த விழிப்பதை விடத் தூக்கத்திலாவது சுகம் காணலாம் என்ற முடிவோடு இரவே மனைவியிடம் சொல்லிவிட்டுத்தான் படுத்திருந்தான் : 'நானாக எழுந்திருக்கும் வரை எழுப்பாதே' என்று! இவன் மேல் இருந்த வயிற்றெரிச்சலிலோ என்னவோ, அவள் கணவன் சொல்லைத் தட்டாத தர்ம பத்தினியாய் நடந்து கொண்டதில், இவனாக எழுந்திருக்கும்போது மணி பத்தாகி விட்டிருந்தது.

அதற்குப் பின் பரபரப்பாக இயங்கி, பதற்றத்தில் மனைவியை அவசரப்படுத்தி, அவளுடைய விசேஷ அர்ச்சனைகளைப் பவ்வியமாக முதுகில் சுமந்து கொண்டு சூடு ஆறாத கஞ்சியால் நாக்கைச் சுட்டுக் கொண்டு, பஸ் ஸ்டாக்காக ஓடும்போது இடது கால் பெருவிரலின் நகத்தைப் பெயர்த்துக் கொண்டு, அதோ, இதோ என்று லேட்டாக ஆபீஸை அடையும்போது 'சீ' என்றாகி விட்டது. போதாததற்கு ஹெட்கிளார்க்கின் வாயில் வேறு விழுந்து புரண்டாகி விட்டது.

பஸ்ஸுக்குள் கூட்டம் நெருக்கிக் கொண்டிருந்தது. வியர்வை நாற்றமும், யாரோ சில வாயுத் தொல்லைக்காரர்களின் கைங்கரியமும் சேர்ந்து மூச்சைத் திணறடித்துக் கொண்டிருந்தன. இருந்த நிலையில் இருந்து எந்த அவயவத்தை ஒரு மில்லி மீட்டர் நகர்த்தினாலும் அடுத்தவர் மேல் மோதும் அபாயம் தெரிந்தது. இப்படி இயக்கமின்றித் தொங்கிக் கொண்டிருக்கும் பரிதாபகரமான நிலைமையே நரக வேதனையாக இருந்தது.

கப்பையா லேசாகக் கண்களை மூடிக் கொண்டான். ஏதோ ஒரு களைப்பு கனமாகப் படர்ந்து விழிகளை இருட்டடிப்புக்குச் சிபாரிசு செய்தது. கப்பையா சுதாரித்துக் கொண்டான். ஒரு வேளை இது பசியாகக் கூட இருக்கலாம். காலையில் சுடு சாதத்தில் நீர்த்த மோரை விட்டுஅவசரம் அவசரமாகக் கிளறி, காற்றுப் புகாமல் டிபன் பாக்ஸில் போட்டு அடைத்துக் கொண்டு வந்திருந்த சாதம் மத்தியானம் பார்க்கும்போது நசநசத்து நாற்றமெடுத்திருக்கவே, வழக்கமாகச் சாப்பிடும் இடத்தில் வாலையாட்டிக்

கொண்டு வந்து நிற்கும் வயிறு ஒட்டிப்போன நாய்க்குச் சந்தோஷ அதிர்ச்சியைத் தர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

வெது வெதுப்பான குழாய்த் தண்ணீர் எத்தனை நேரம்தான் இரைப்பைக்குச் சமாதானம் சொல்ல முடியும்? இந்தத் தளர்ச்சி வெறும் வயிற்றின் விரக்திச் சாபமாய்த் தான் இருக்கும். பசிக்கும், களைப்புக்கும் கூட வித்தியாசம் தெரியாமல் தன்னை மழுங்கடித்து வைத்திருக்கும் இந்த வாழ்க்கையின் அவலங்களை நினைக்கும்போது வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போலத் தோன்றியது சுப்பையாவுக்கு!

யார் செய்த புண்ணியமோ, அப்படி ஒரு இக்கட்டுக்குச் சுப்பையாவை ஆளாக்காமல் பூ மார்க்கெட் வந்துவிடவே, இவன் நின்று கொண்டிருந்த இடத்துக்கு அருகில் இருந்த ஓர் ஆசாமி இறங்குவதற்காக எழுந்தார். சுப்பையா சற்றும் தாமதிக்காமல் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டபோது ஏதோ ரன்னிங் ரேஸில் முதலாவதாக வந்து விட்டதைப் போன்ற திருப்தி முகமெங்கும் விகசித்தது.

இப்போது கொஞ்சம் சுமை குறைந்ததைப் போல் இருந்தது. வெளியே சாலையில் பறக்கும் வாகனங்களையும், எதையோ தொலைத்து விட்டுத்தேடும் பரபரப்பை வலியப் போர்த்துக்கொண்டு அலையும் மனிதக் கூட்டங்களையும் பார்க்கும்போது உடம்பின் அசதி கூடச் சற்றுப்பின் வாங்கி லேசாக உற்சாகம் எட்டிப் பார்ப்பதைப் போலிருந்தது. இறங்க வேண்டிய இடம் வந்துவிடக் கூடாதே என்றுகூட மனம் சபலப்பட்டது. வழக்க

அணுவும் எதிர்ப்பும்!

அணு ஆயுத எதிர்ப்பு இயக்கம் இப்பொழுது வலுவடைந்து வருகிறது. ஆண்டுதோறும் இந்த இயக்கத்தினர் அணு ஆயுதங்களால் ஏற்படக் கூடிய நாசத்தை உணர்த்துவதற்காக ஆயிரக்கணக்கில் சில நிமிஷங்கள் இறந்து போனவர்களைப் போல் பூமியில் பரவலாக விழுந்து கிடக்கிறார்கள். இந்தக் கோரக்காட்சி பார்ப்பவர்களின் ரத்தத்தை உறையச் செய்யும். இந்த ஆண்டும் பிரிட்டனில் 4000 பேர்கள் இக்காட்சியை க்ளாஸ்கோ நகரத்தில் நடத்தினார்கள்.

தகவல்: ரிஸர்ச் அண்ட் ரெஃபரன்ஸ்



மாக உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள் பஸ்ஸில் ஸ்டாண்டிங்கில் வருபவர்களை 'அற்ப ஜந்துக்களாகப்' பார்க்கும் அந்தப் பார்வை கூடத் தானாக இப்போது தன்னிடம் ஒட்டிக் கொண்டதைப் போல் உணர்ந்து அதிசயப்பட்டான் சுப்பையா!

முன் பகுதிக் கூட்டத்தில் நீந்தி ஒரு வழியாக வந்து சேர்ந்திருந்த கண்டக்டரை நோக்கிப் பல கைகள் நீளவும், சுப்பையாவும் வேறு வழியின்றிப் பத்திரமாக வைத்திருந்த ஒரு ரூபாய்த் தாளை நீட்டி, ''ஒரு சாய்பாபா காலனி'' என்று விண்ணப்பித்துக்கொண்டான். டிக்கெட் புத்தகத்துக்கும், உதட்டு எச்சிலுக்குமாக விரைவுப் பயணம் புரியும் கண்டக்டரின் வித்தியாசமான விரல்களில் லயித்துப் போயிருந்த சுப்பையா, டிக்கெட் தன் கைக்கு வந்ததும், மீதி 50 பைசா வராத காரணத்தால் தலை நிமிர்ந்து பார்ப்பதற்குள் கண்டக்டர் மனிதத் தலைகளுக்குள் மறைந்து போயிருந்தார். ''சார்... மீதி சில்லறை'' என்று கத்தலாமா என்றுகூட ஒரு கணம் நினைத்தான் சுப்பையா!

இந்த நெரிசல் நேரத்தில் கண்டக்டர் வள்ளென்று எரிந்து விழுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டாலும், சில்லறையைக் கேட்டு வாங்குவது அடுத்தவர் கண்களுக்கு அநாகரிகமாகத் தெரிந்துவிடுமே என்ற தேவையற்ற அச்சத்தாலும், தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான் சுப்பையா!

ஆனால்... நெடு நேரம் அவனால் அப்படி இருந்துவிட முடியவில்லை. நிலைமையின் பயங்கரம் உந்தித் தள்ளியது. நாளைக்குக் காலையில் பஸ்ஸுக்காக மீந்திருக்கும் சில்லறையே இந்த 50 பைசாதான். நாளைக்குச் சம்பளப் பணம் கையில் வந்து சேரும் வரை தம்பிடி கிடையாது.

எல்லாவித எண்ணங்களும் தானாக விடைபெற்றுக் கொண்டு போய், இந்த 'மீதிச் சில்லறை' விவகாரம் மட்டும் தனித்து மனத்தில் தைத்துக் கொண்டிருந்தது. சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் கூட லயிக்காமல் இயற்கையின் உபாதைக்கு உட்பட்டவன் போலநெளிந்துகொண்டிருந்தான் சுப்பையா.

இந்த மாதிரி ஒவ்வொரு நயா பைசாவையும் கணக்குப் பார்த்துச் செலவழிக்கும் நிலையில் எந்தத் தாலுகா ஆபீஸ் குமாஸ்தாவும் இல்லை என்ற உண்மை திடீரென்று சுப்பையாவின் நினைப்பை உதைத்தது. எரிச்சலைக் கிளப்பியது. ஒரு சுய இரக்கம் உருவாகி மனத்தைக் குறுகச் செய்தது. மற்றவர்களைப் போல் பதவியை வைத்துப் பணம் பண்ணிக் கொள்ளும் சாமர்த்தியமோ, தைரியமோ தன்னிடம் இல்லை என்று மனைவி அடிக்கடி இடித்துக் காட்டிச் சலித்துக்கொள்வது சத்தியமான வார்த்தையோ என்ற சங்கடம் வதைத்தது. வாஸ்தவத்தில் பக்கத்து ஸீட் பாலகுருவின் பாக்கெட் எப்போதும் நிரம்பி வழிவதை இவனே பார்த்திருக்கிறான்! நிச்சயமாக, தாலுகா ஆபீஸ் குமாஸ்தாவுக்கு விதிக்கப் பட்டிருக்கும் ஸ்கேலில் இந்த வளமைக்கெல்லாம் வாய்ப்பே இல்லை. சில பேர்களுடைய முகத்தைப்

பார்த்தே இவன் சரியான அப்பாவி என்று முடிவு செய்து கொண்டு தருவதற்குத் தயாராக வருபவன் கூட தந்திரமாகத் தப்பித்துக் சொன்வதுண்டு. ஒருவேளை தான் அந்த 'அப்பாவிகள்' ரகமோ?

பஸ் வட கோவையைச் சமீபித்துக்கொண்டிருந்தது. சுப்பையாவுக்குக் கிட்டத்தட்ட ஜுரமே வந்துவிடும் போலிருந்தது. என்ன வானாலும் சரி, இந்த முறை கண்டக்டர் பக்கத்தில் வரும்போது கேட்டே விடுவது என்று தீர்மானித்துக் கொண்டான். கூடவே 'கண்டக்டர் இந்தப் பக்கம் கடைசி வரை வராமலே போய்விட்டால் என்ன செய்வாயாம்' என்று உள் மனம் ஒன்று தேவையில்லாமல் சீண்டிப் பார்த்தது.

சுப்பையா வழக்கமாகச் சம்பளத் தேதியில் போடப்படும் குடும்ப பட்ஜெட்டைப் பார்த்ததும் குப்பென்று வியர்த்துப் போவானே அதைவிட இப்போது கூடுதலாக வியர்த்தான். இருப்புக் கொள்ளாமல் நெளிந்தான். இதற்கு மேலும் அவனைச் சோதிக்க விரும்பாததைப் போல அடுத்த நிறுத்தத்தை விட்டு பஸ் நழுவ ஆரம்பித்ததும், இவன் சீட்டருகே இருந்த பின்புற வாயிலில் பிரசன்னமானார் கண்டக்டர்.

''யாருக்காவது 'சேன்ஜ்' வரணுமா?''

''சார், இங்கே'' — சற்றுத் தூக்கலாகத் தான் வெளிப்பட்டு விட்டது சுப்பையாவின் குரல். கண்டக்டரின் 'ஒரு மாதிரியான பார்வையே' தன் குரலின் அவசரத்தைஅடையாளம் காட்டிவிட 'விசுக்'கென்று வெட்கிப் போனான். கொஞ்ச நேரம் வரை கண்டக்டர் தன் கையில் செருகிவிட்டுப் போனதைப் பற்றிய நினைப்பே இல்லாமல் தலை குனிந்திருந்த சுப்பையா, மெல்ல விரல்களைப் பிரித்துப் பார்த்ததும்... ஜிலீரென வயிற்றில் குளிர் பாய்ந்தது. அவன் கையில் அழுக்கேறிய இரண்டு ரூபாய்த் தாள் இரண்டும், ஒரு 50 பைசா நாணயமும் இருந்தன. நியாயமாக அவனுக்குச் சேர வேண்டியது 50 பைசா மட்டுமே! கண்டக்டர் ஏதோ ஞாபக மறதியில், இவன் ஐந்து ரூபாய் கொடுத்ததாக நினைத்துக் கொண்டு, இதைத் திணித்திருக்க வேண்டும். கூட்ட நெரிசலில் கண்டக்டர் தொலைந்து போயிருந்தார். கூப்பிட்டாலும் காதில் விழுவதற்கு வாய்ப்பில்லை!

இருக்கையை விட்டு எழப்போன சுப்பையாவின் இயக்கத்தைக்கட்டுப்படுத்தியது குரலொன்று. கூர்ந்து கவனித்தான்! மனசுக்குள்ளிருந்துதான் யாரோ முணுமுணுத்தார்கள்!

''அதிர்ஷ்டவசமாகக் கிடைத்திருக்கும் தொகையைக் கண்டிப்பாகத் திருப்பித் தரத்தான் வேண்டுமா?''

கிழிந்த சொக்காயும், அடர்ந்த தாடியுமாகத் தோன்றிய சுப்பையா, ''திருப்பிக் கொடுக்கத்தான் வேண்டும்'' என்று நேர்மை, நாணயம் பற்றி ஒரு 'குட்டி லெக்சர்' கொடுக்க, பளிச்சென்ற உடையில் பகபக வென்று சிரித்துக்கொண்டிருந்த சுப்பையா, ''திருப்பித் தராவிட்டால் பெரிய பாவமில்லை'' என்று பரிந்துரை செய்ய, ஒரு நிழல் நாடகத்தை மூளை அரங்கேற்றிச் சில நிமிஷங்களைக் கரைத்ததும், தலையைச் சிலுப்பி, எல்லாவற்றையும் உதறிவிட்டு மீண்டான் சுப்பையா!

கையிலிருந்த நாலு ரூபாய் சொச்சம் ஒரு கேள்விக் குறியாக நின்று நிரம்ப நோகடித்தது. இதை இப்படியே தக்க வைத்துக் கொண்டால் நிறைய விஷயங்களைச் சாதிக்கலாம்.

கடைசிப் பையன் ஒரு வாரமாகக் கேட்டுக் கொண்டிருக்கும் கணக்கு நோட்டை வாங்கித் தரலாம். வழக்கப்படி நலிந்து போயிருக்கும் மாசக் கடைசி 'மெனுவை' ஒரு பருப்புக் குழம்பும் பொரியலுமாக மாற்றி அமைக்கலாம்! அல்லது சோப்பும் பினேடும் வாங்கிப் பூச்சாண்டி கோலத்தையாவது போக்கிக் கொள்ளலாம்.

இதை யெல்லாவற்றையும் விட இரண்டு முழம் பூவையும், இரண்டு ரூபாயையும் ரகசியமாக மனைவியிடம் நீட்டி, ''குழந்தைகளுக்குத் தெரியாமல் 'செகண்ட் ஷோ' சினிமா பார்த்துட்டு வா'' என்று சொன்னால் போதும்; படம் பார்த்து விட்டு வந்த பிறகாவது, வழக்கப்படி இடைவெளி விட்டுப் படுக்கையைப் போடாமல், தன் படுக்கையிலேயே அவள் படுத்துக் கொள்ளச் சம்மதிக்கலாம்!

இந்த நினைப்பு வந்ததும் சுப்பையாவின் உடம்பில் ரத்தம் புதிதாகிப் போய் வேகம் பிடித்தது. மெல்லிய விசில் கூட உதட்டோடு உறவாடியது. கவாதினமாகப் பணத்தைப் பாக்கெட்டில் போடப் போனவன்... செயலற்றுப் போனான்.

அவனுக்குப் பக்கவாட்டுச் சீட்டில் அமர்ந்து கொண்டிருந்தவன்... இவனையே



தேசப்பற்றும் சிக்கனமும்

ஜப்பானில் பணம் இருந்தாலும் மணமாகி ஒரு குழந்தைக்குத் தந்தையாகும் தருணத்தில் தான் ஜப்பானியர்கள் சொந்தமாகவீடுவாங்குவார்கள்.அதற்கு முன்பு பணத்தை வீட்டில் முதலீடு செய்வது நாட்டு நலனுக்கு உகந்தது அல்ல என்று பரவலான ஒரு கருத்து. வீடு வாங்கும் தருணம் ஏற்படும்வரையில் அவர்கள் பணம் பாங்கியில் இருக்கும். தொழில்களுக்கு அப்பணம் மூலதனமாக உபயோகப்படும். ஜப்பானில் தொழில் வளத்துக்கு இப்பழக்கம் ஒரு முக்கிய காரணமாகும்.

தகவல்: ரிஸர்ச் அண்டு ரெஃபரன்ஸ்

பார்த்துக் கொண்டிருந்தான். பஸ் ஏறும் போதே இவனைப் பார்த்ததாக ஞாபகம்!

சுப்பையா ஒரு ரூபாய் கொடுத்து டிக்கட் வாங்கியதிலிருந்து இப்போது மீதியை வாங்கியதுவரை... அவன் கவனித்துக் கொண்டு இருந்திருக்கலாம்! முகத்தை அப்படியும் இப்படியும் திருப்பாமல் இங்கேயேதான் பார்த்துக் கொண்டிருக்கிறான்!

அவன் கூலிங் கிளாஸ் போட்டுக் கொண்டிருந்ததால் அவனுடைய விழிகளின் பாய்ச்சலைப் பார்க்க முடியாவிட்டாலும், அந்த இறுகிய முகமும், இதழ்களில் தெரியும் இகழ்ச்சிப் புன்னகையும் சுப்பையாவை இனம் கண்டு கொண்டதாகப் பறை சாற்றின!

சுப்பையாவுக்கு லேசாக நடுக்கம் பரவியது. அந்தக் கூலிங் கிளாஸ் ஆசாமி திடீரென்று தன்னிடம், 'ஏன் சார் இப்படித் திருட்டுத்தனம் பண்றீங்க?' என்று கேட்டுவிடுவானோ என்று சுப்பையா தவித்தான்! அல்லது அவன் கண்டக்டரைக் கூப்பிட்டு, விவரத்தைச் சொன்னாலும் போதும். இத்தனை பேரின் முன்னிலையில் தான் தலை குனிந்தபடி நிற்கத்தானே வேண்டும்! ''நீயெல்லாம் படிச்சவன்தானே?'' என்று கண்டக்டர் கேட்டு விட்டால் அப்புறம் முகத்தை எங்கே வைத்துக் கொள்வது?

சுப்பையா மீண்டும் நெளிந்தான். அவன் இதயம் தலைதலையாய் அடித்துக் கொள்வது காதில் விழுந்தது. மாவரைக்கும் எந்திரமாக மனசு ஊங்காரமிட்டது. எந்த முடிவுக்கும் வர முடியாமல் இருக்கையில் நெருப்பை உணர்ந்தான் சுப்பையா!

பஸ் வேறு காலனியைச் சமீபித்து விட்டது. அந்த நேரம் பார்த்து கண்டக்டர் வேறு சுப்பையாவை நெருங்க, அந்தக் கூலிங் கிளாஸ் ஆசாமி எதற்கோ கண்டக்டரைப் பார்த்துக் கைநீட்ட, கண்டக்டர் விசிலடித்தார்.

சுப்பையாவின் இதயத் துடிப்பு நின்று விட எத்தனிப்பதற்குள் விருட்டென்று எழுந்தவன், கண்டக்டரிடம் நாலு ரூபாயைத் திருப்பிக் கொடுத்தான்!

''அதிகமாக் குடுத்திட்டீங்க — எனக்குச் சேர வேண்டியது 50 பைசாதான்.''

கண்டக்டர் சட்டென்று நிமிர்ந்து சுப்பையாவைப் பார்த்து நன்றியும், நேசமும் வழியப் புன்னகைத்தார்! ''தேங்க்ஸ் சார்.''

சுப்பையா மேலும் தாமதிக்காமல், தலை கவிழ்ந்தபடி பஸ்ஸை விட்டு இறங்கினான். மனம் மழைக்குப் பிந்திய வானம் போல் வெளிச்சமாகி விட்டிருந்தது! சுமைகள் சுக்கல் நூறாகச் சிதறி, சுகமான மூச்சுக் காற்று வெளிப்பட்டது!

பஸ் மீண்டும் கிளம்பிய ஓசை கேட்டு லேசாகத் திரும்பிப் பார்த்த சுப்பையா, அசைவற்று நின்று, சில நிமிடங்கள் ஆனதும் சுற்றுப்புறத்தை மறந்து கொஞ்சம் உரக்கவே சிரித்து விட்டான்!

அந்தக் கூலிங் கிளாஸ் ஆசாமியின் கைகளைப் பக்கத்துக்கு ஒருவர் பிணைத்துக் கொள்ள, அவன் கால்களை ஊன்றித் தடம் உணர்ந்தபடி தூரத்தில் புள்ளியாகிக் கொண்டிருந்தான்.

கடைசியில்.... கடைசியில்.... அந்தக் கூலிங் கிளாஸ் ஆசாமி பார்வையில்லாதவனா? இவன் பார்த்து விட்டானே என்ற பயத்தில் அல்லவா வலியக் கிடைத்த அந்த நாலு ரூபாயை...

ஓ! யாரோ பார்க்கிறார்கள் என்ற பயம் இருக்கும்வரைதான் தவறுகள் தலை தூக்காமல் நேர்மை உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் என்பது எத்தனை சத்தியமான வார்த்தை!

''பெண் பார்க்க வர்ற மாப்பிள்ளைக்கு சொஜ்ஜி பஜ்ஜியோட அடிஷனலாக ஒரு ஸ்வீட் வேறே போடணுமா எதுக்கு...?''

''அவர் உங்க வீட்டுக்கு வந்தால் நூறு பெண்களைப் பார்த்த சாதனையைச் செய்யறாராம். அதுக்குத்தான்...''

என்.எஸ்.வி. குருமூர்த்தி.





''லாட்டரியிலே பணம் விழுந்தும் ஏன் கவலையா இருக்கீங்க?...''

விழுந்தா பாதிப் பணத்தை திருப்பதி உண்டியலிலே போடறதா நான் வேண்டிக்கிட்டேன். பழனியிலே பாதி போடறதா என் மனைவியும் வேண்டியிருக்காளாம்.''

—ராதா.

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®

ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

வளரும் குழந்தை-களுக்கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன—வளரும் வயதிலே உடம்புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச் சத்துக்கள் —அளிக்கிறது காம்ப்ளான். மறவாதீர்கள், டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான்.

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப் புத்தகம்.

''குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி'' 50 பைசா தபால்தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக : தபால் பை நம்பர் 19118, (Comp) G-78, பம்பாய் 400 025.

—GLC-6-2012 TM


திட்டமிட்ட பரிபூரண உணவு — காம்ப்ளான்®

அடைந்தார்க்கருள் செய்யும் நாயனர்

ஆனந்தி

தூர்வாச முனிவரைப் பற்றி எத்தனையோ கதைகளைக் கேட்டிருக்கிறோம். மகா கோபக்காரர் என்று பெயர் வாங்கிய முனிவர். 'பிடி சாபம்' என்று ஆரம்பித்து விடுவார். தேவர்கள் கூட அவரைக் கண்டு பயப்படுவார்கள். மற்ற முனிவர்கள் சபித்தால் அவர்கள் வலிமை குன்றும். தூர்வாச முனிவருக்கு மட்டும் சாபம் கொடுத்தால் தவ வலிமை பெருகும். இப்படி ஒரு வரத்தைக் கொடுத்து விட்டார் சிவபெருமான். ஆனால் இந்த வரத்தை அவர் அதிகம் உபயோகித்து விடாமல் இருக்க ஒரு வழி செய்தார். தம்முடைய ஆனந்த தாண்டவ தரிசனத்தை அகம் மகிழச் சிந்தை குளிர முக மலர்ச்சியோடு சதா பார்த்துக் கொண்டே இருக்கும்படி செய்து விட்டார். திருக்களர் க்ஷேத்திரத்தில் இந்தக் காட்சியை நாமும் காணலாம்.

அருகம் புல்லையே உணவாகக் கொண்டு தவம் செய்த மாமுனிவர் தூர்வாசர். அருகம்




○ ஸ்ரீ ஆண்டவர் உற்சவ விக்ரகம்

புல் தரக்கூடிய வலிமையை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். விநாயகரை தூர்வாச பத்திரத்தினால் அர்ச்சனை செய்கிறோம். இதையே சாப்பிட்டு வந்தபடியால் அவருக்குத் தூர்வாசர் என்று பெயர் வந்தது.

மன்னார்குடிக்கு அருகில் உள்ள திருக்களர் சிவாலயத்தில் இந்த அருகம்புல் மகரிஷியைப் பரம ரஸிகராகக் காண்கிறோம். கடுமையான விரதங்கள் அனுஷ்டித்து வயது முதிர்ந்த ஒரு முனிவரின் முகம் அழகாக இருக்குமா? திருக்களரில் தூர்வாஸ முனிவரின் முகம் தெளிந்த புன்னகையோடு அழகாக இருக்கிறது. அவருக்கு நேர் எதிரே ஆனந்தத் தாண்டவ மூர்த்தியின் அற்புத வடிவம் இருக்கிறது.

சம்பந்தர் பெருமான் திருக்களர் உடையாரைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்.



○ ஸ்ரீ ஆடவல்லான்

''வானவர் தொழக் கூத்துகந்த பேர்
அம்பலத்துறைவாய்
அடைந்தார்க் கருளாயே''

என்று அவர் பாடியதால் 'அடைந்தார்க்கருள் செய்த நாயனார்' என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறார்.

எத்தனையோ நாடுகளை வென்று புகழ் பெருக்கிய கோப்பரகேசரி வர்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர், இறையிலியாக நிலங்களைத் தந்து மகிழ்ந்த கோவில் இது. இன்னும் பலர் திருவிளக்கெரிக்கவும் அமாவாசை தினத்தில் வீதி உலா எழுந்தருளச் செய்யவும் நெல் அளித்திருந்தார்களாம்.

புராணங்களைப் பார்த்தால் கந்தமாதனம் என்ற குன்றிலிருந்த அறுபதினாயிரம் மகரிஷிகள் இங்கு வந்து தங்கி ஒவ்வொருவரும் ஒரு லிங்கம் பிடித்து வழிபட்ட தலம் எனத் தெரிகிறது.

தாண்டவத் தலங்கள் எழில் ஒன்று திருக்களர். தூர்வாஸ முனிவருக்குத் தந்த வரத்தின்படி முனிவர்களின் ஆனந்தத்துக்காக ஈசன் பிரம தாண்டவம் செய்தருளிய தலம்.

தாண்டவத்தைத் தரிசனம் செய்த அத்தனை மகரிஷிகளுக்கும் சிவ பஞ்சாட்சர



○ ஸ்ரீ தூர்வாசர்



ஸ்ரீ அன்னை அமிர்தவல்லி

மந்திரத்தை 25 விதமாக ஷண்முகப் பெருமான் உபதேசம் செய்த தலம்.

தேவலோகத்துப் பாரிஜாத மரத்தை தூர்வாஸ முனிவர் கொண்டு வந்து நட்டு வளர்த்ததால் பாரிஜாத வனம் என்ற பெயரும் பெற்றது. மார்க்கண்டேயர் வழிபட்டஇடம் திருக்களர்.

தூர்வாஸ முனிவர் உண்டுபண்ணிய தீர்த்தம், ஞான தீர்த்தம், பிரம தீர்த்தம் முதலிய தீர்த்தச் சிறப்பும் பெற்றது திருக்களர்.

• • •

ஊருக்குள் வந்த உடனே கண்களில் படுவது கோபுரமும் தூர்வாஸ தீர்த்தமும்தான். இந்தக் குளத்தின் ஒரு கரையில் கோவிலூர் மடத்தின் கிளை மடமான கோவிலூர் ஆண்டவர் வீரசேகர ஞான தேசிகர் மடம் இருக்கிறது. இந்த வேதாந்த மடத்துக்குத் தலைவராக விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணசாமி சுவாமிகள் அத்வைதக் கருத்துக்களை எளிமையாக எடுத்துக் கூறுகிறார். சுவாமிகளோடு கோவிலுக்குச் சென்று பாரிஜாதவனேச்வரரையும் அமிர்தவல்லித் தாயாரையும் தரிசித்து ஸ்ரீ ஆண்டவர் சந்நிதியில் வழிபட்டது ஒரு பாக்கியம்.


ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வரர் மூலஸ்தானம்



திருக்களரில் அந்திகால பூஜையின்போது உண்டான உள்ளக் கிளர்ச்சியை என்றும் மறக்க முடியாது. மணிகள் ஓசையும் மந்திரங்களின் ஓசையும் காதுகளை நிரப்புகிறது. தெய்வ மணம் கமழுகிறது. கொடி மரத்தைக் கடந்து சிங்கங்கள் சிலிர்த்து நிற்கும் தூண்களுடைய மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் தீபங்களின் ஒளியில் காந்திபெற்று விளங்கும் கோவிலழகில் ஒரு கணம் மெய் மறந்து நிற்கிறோம்.

அடுக்குத் தீபமும் அலங்கார தீபமும்காட்டி முளைத்தெழுந்த நாயனாரை வழிபடும்போது புல்லரிக்கிறது.

களர்முளை நாதருக்கு அணிவித்திருக்கும் திருவாசி எத்தனை அழகு! தமிழ் நாட்டுக் கோவில்களில் உள்ள திருவாசிகளை யெல்லாம் படம் எடுத்துப் பார்த்தால் நாம்



பெரியகோவில் ராஜகோபுரம் தூர்வாஸ தீர்த்தம்

பிரமித்துப் போவோம். அத்தனை விதம். இந்தத்திருவாசியில் கிளிகள், நடுவே வாழைத் தார் பூவோடு ஊஞ்சலாடுகிறது.

ஆடல் வல்லானின் திருமுன்பு நிற்கிறோம். நேர் எதிரே தூர்வாஸ முனிவர். ஒரே சமயத்தில் நடராஜப் பெருமானுக்கும் தூர்வாஸருக்கும் தீபாராதனை செய்கிறார்கள். சச்சிதானந்தத் தாண்டவக்கோலத்தைப் பார்ப்பதா? சச்சிதானந்தக் கடலில் மிதக்கும் முனிவரைப் பார்ப்பதா என்று புரியாமல் இப்படியும் அப்படியும் திரும்பித் திரும்பிப் பார்த்து ஆனந்தப்படுகிறோம். மெய்சிலிர்க்கச் செய்த இந்தக் காட்சி நெஞ்சை விட்டு நீங்காது.

பிராகாரத்தில்உள்ள உற்சவ மூர்த்திகளின் அழகை வருணிக்க முடியாது. சந்திரசேகரருடைய கம்பீர அழகு. உமையவளின் நளின அழகு. நடராஜ மூர்த்தியின் தத்துவ அழகு. எல்லைக் காவல் தெய்வங்களின் அச்சுறுத்தும் அழகு. அடியார்கள் எளிய அழகு. எப்படித்தான் செப்புச் சிலையாக வடித்தார்களோ? சில அழகிய படிவங்கள் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டதாக அறிகிறோம். மாலிக்காபூர் காலத்தில் அவன் அட்டூழியங்களிலிருந்து பாதுகாக்க மறைத்த படிவங்களாக இருக்

கலாம். பின்னமின்றிக் கிடைத்திருப்பது நமது பாக்கியம்.

அம்மன் கோவிலும் கிழக்கு நோக்கியே இருப்பது ஒரு விசேஷம். பிறவிப் பிணியைத் தீர்க்கும் அமுதவல்லித் தாயாரிடம் அடைக்கலம் புகுந்துவிட்டால் எந்தப் பிணியும் நம்மை அணுகாது. இளங்கொம்பன்னாள் என்பது தமிழ்ப் பெயர்.

''திருக்களரில் திகழும் இளங் கொம்பொடிருக்குங் களர்முளை ஈசா'' என்று உமாபதி சிவாச்சாரியார் ஈசனை ஏத்துகிறார்.

அஷ்டபுஜ துர்க்கையை வணங்கி, நவக்கிரகங்களை வலம் வந்து கோவிலூர் ஆண்டவர் முன்னிலையில் நிற்கிறோம். இந்த வீரசேகர ஞான தேசிக சுவாமிகளைப் பற்றிக் காஞ்சிப் பெரியவர்களே கூறியிருக்கிறார்கள்:

அருள்வாக்கு

குழந்தை விஷமம் செய்தால் கட்டிப் போடுகிறோம். நம்மிடம் 'ஆசை' என்ற விஷமம் இருப்பதால் நம்மைப் பசுபதி கட்டிப் போட்டிருக்கிறார். குழந்தைக்கு விஷம புத்தி போய்விட்டால் அப்புறம் கட்ட மாட்டோம். நமக்கு ஆசை போய் விட்டால் ஈசுவரனும் நம்மை அவிழ்த்து விடுவார். ஆசையினால்தான் பலருக்குப் பலவிதக் கஷ்டங்களை உண்டாக்கி நாமும் கஷ்டப்படுகிறோம். ஆசை போய் விட்டால் யாருக்கும் நம்மால் கஷ்டம் இல்லை. அப்போது கட்டும் இல்லை. அவிழ்த்து விடுவார்.

கட்டுப் போய் விட்டது என்பதால் அசலான் தோட்டத்தில் மேயமாட்டோம். ஏனென்றால் அசலான் தோட்டத்தில் மேயாத புத்தி நமக்கு வந்த பிறகுதான் பசுபதி கட்டையே எடுக்கிறார். கட்டுப் போன பின் நாம் கட்டப்பட்ட நிலையிலிருந்து உயர்ந்து கட்டியவனின் நிலைக்கே போய் விடுவோம். கட்டு இருக்கிற வரையில் நாம் வேறு, ஸ்வாமி வேறு என்று பூஜிக்கிறோம். கட்டு போய்விட்டால் நாமே அவன் என்று தெரிந்துகொள்வோம். அப்புறம் பூஜை கூட வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்



''தூர்வாஸர் மாதிரி'' என்றே சொல்லி ஜனங்கள் பயப்பட்டுக் கொண்டிருந்த சுவாமிகள் ஒருவர் சமீப காலத்தில் இருந்தார். அவருக்கு வீரப்ப சுவாமிகள் என்று பெயர்.

''ஆசை தடுக்கப்பட்டால் கோபமாகிறது. வீரப்ப சுவாமிகளுக்கு உத்தமமான ஆசையே இருந்தது. தமிழ் நாட்டில் உள்ள தேவாலயங்கள் எல்லாம் பூர்வத்தில் இருந்தது போலவே சீரும் சிறப்புமாக இருக்க வேண்டும். இந்த நாடு முழுவதிலும் வேத வித்யை மங்காமல் பிரகாசிக்க வேண்டும் என்பதே அவரது ஆசை. ஆணைபடியால் நகரத்தாரிடம் இன்ன கோயிலுக்குத் திருப்பணி செய்யுங்கள்; இன்ன ஊரில் வேத பாடசாலை வையுங்கள் என்று கட்டளை போடுவார். அவரிடம் அடங்கி நடந்து கொண்டிருந்த நகரத்தார் சமூகத்தினர் அவர் சொன்ன விதமே ஏராளமான ஆலயங்களுக்குத் திருப்பணி செய்தார்கள். வேத பாடசாலைகளை எங்கு பார்த்தாலும் வளர்த்தார்கள். வீரப்ப சுவாமிகள் கோபித்துக் கொண்டதால் நாட்டுக்கே பெரிய நன்மை உண்டாயிற்று!''


சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் கோவிலைக் கருங்கல் திருப்பணியாகக் கட்டுவதற்கு ஏராளமான நிதி திரட்டி உதவியிருக்கிறார் வீரப்ப சுவாமிகள். கோவிலூர் சிவாலயத் திருப்பணிகள் செய்து கோவிலூர் மடத்தை ஒரு சிறந்த மடமாக்கியவர் இவரே. திருக்களர் தலத்தில் கோவில் திருப்பணி தொடங்கிய போது தம்முடைய கரங்களாலேயே உளி கொண்டு கொத்திப் பணியைத் தொடங்கி வைத்தாராம். இந்தத்திருப்பணி முடிந்து உற்சவம் நடக்கும்போதே நாம் வந்த காரியம் ஆகிவிட்டது என்பது போல் தேருக்கு முன்னால் நின்று ''மகாதேவா மகாதேவா'' என்று சொல்லிக் கொண்டே பரிபூரணம் எய்தினாராம். இவருடைய அதிஷ்டானக் கோவில் வேதாந்த மடத்தின் அருகிலேயே இருக்கிறது.

நான்மறையோதும் அந்தணர் வாழ்ந்த ஊர் எனச் சரித்திரம் கூறுகிறதல்லவா? வேத பாடசாலைகள் இன்றும் இருக்கின்றன. ருக்வேத பாடசாலை மட்டும் நடந்து வருகிறது. அம்பிகையின் சந்நிதியில் தினமும் யஜுர் வேத பாராயணம் செய்து வருகிறார் ஸ்ரீ ராமமூர்த்தி கனபாடிகள்.

அறுபதினாயிரம் முனிவர்கள் தங்கிய இந்த ஊரில் கூட இன்று வேதம் பயில மாணவர்கள் வருவதில்லை என்று வருத்தப்பட்டார் வேத விற்பன்னரான ஸ்ரீ கணேச கனபாடிகள். ஆலய வழிபாடு முதலிய அரிய விஷயங்களை எளிமையான முறையில் எடுத்துக் கூறுகிறார் இவர். கல்வி, பக்தி, அடக்கம் மூன்றும் சேர்ந்தவர்களைக் காண்பது அரிதாக இருக்கும் இந்த நாளில் ஸ்ரீ கணேச கனபாடிகள் போன்றவர்களைக் காண்பது நம்பிக்கை தருகிறது.

நடராஜப் பெருமானின் பிரும்ம தாண்டவம் சர்வலோகங்களின் ஒரு நியதிக்குட்பட்ட இயக்கத்துக்கு ஆதாரமானது. அதன் தத்துவம் உணர்ந்து வழிபட்டு நாமும் தூர்வாசரைப் போல மனம் தெளிந்து ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்துபோக முயல்வோம்.

ஹா...ச்சு ஹா...ச்சு நாளே பாழாய்ப் போ...ச்சு



ஜலதோஷம் உங்கள் நாளையே பாழாக்க விடாதீர்கள். மூக்கு ஒழுகல், அடைப்பு, தலை பளு. இவை ஜலதோஷத்திற்கே உரித்தான அறிகுறிகளாகும். இதனால் உங்களுக்கும் தொல்லை, உங்கள் நாளுக்கும் தொல்லை. சிந்தித்துச் செயல்பட வேண்டாமா? கோல்டரின் சாப்பிட்டுப் பாருங்களேன்! அது விசேட ஃபார்முலாவின்படி தயாரான ஜலதோஷ மாத்திரையாகும். வசதிக்கு வசதி, நிவாரணத்திற்கு நிவாரணம்!

ஜலதோஷம் வாட்டுகிறதா?
கோல்டரின் அதை விரட்டுகிறது.



CASBC 111-203 TAM

பூர்வ கதை :

விஸ்வநாதன் ஒரு நிறுவனத்தில் ''லயேஸான் ஆபீஸ''ராகப் பணியாற்றுகிறான். கவிதை உள்ளம் படைத்தவன்; கற்பனை வளம் மிக்கவன். அடிக்கடி லாரிகளைப் பயன்படுத்தி ''லேடக்ஸ் ரப்பர்'' தொழிலகத்துக்குக் கொண்டு வருவதால் அவனுக்கு லாரிப் போக்குவரத்து பற்றிய சகல அம்சங்களும் அத்துப்படி. அங்கு நிலவும் உழைப்பாற்றலும் தெரியும், தில்லு முல்லுகளும் புரியும். தன் மனைவி தாரிணியிடமும் குழந்தையிடமும் மிகுந்த அன்புடைய அவன் ஒரு லாரியைத் தேடி வெளியூர் செல்லும் போது வசந்தாவைச் சந்திக்கிறான். உடலை விற்றுப் பிழைப்பவள் என்பது தெரிய வந்த போதிலும் அவளது வெள்ளை உள்ளம் அவனை ஈர்க்கிறது.

உபாத்தியாயராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற நாணு சார் கல்யாணத்துக்கு நிற்கும் பெண்களைக் காக்கும் பொறுப்பு இருப்பது கருதி சென்னை வந்து கே.ஆர். வடிவேலிடம் வேலைக்கு அமர்கிறார். அவர் மகள் காயத்ரி லாரி கம்பெனி சொந்தக்காரரான காந்திலால் மேத்தாவிடம் வேலைக்கு அமர்கிறாள்.

விசுவநாதனுக்கும் காயத்திரிக்கும் சந்திப்பு ஏற்பட்டு, கவிதைகள் பற்றிய விவாதம் சூடேறுகிறது. நட்பாகவும் மலர்கிறது. லாரி ஊழியர்கள் வேலை நிறுத்தம் காரணமாக லேடக்ஸ் ரப்பர் தொழிலகத்துக்கு வந்து சேரத் தாமதமாகும் என்ற ஓர் இக்கட்டான நிலையில் காயத்ரி, விசுவநாதனுக்கு உதவத் தீர்மானிக்கிறாள். கே. ஆர். வடிவேல்தான் லாரி ஊழியர்கள் தொழிற்சங்கத் தலைவன். அவனிடம் வேலை பார்ப்பவர் காயத்ரியின் அப்பா நாணு ஸார். எனவே விசுவநாதனுக்கு உதவ முடியும் என நம்புகிறாள், காயத்ரி. அவர்களிடையே நட்பு இறுகுகிறது. அன்பு மலர்கிறது.

அத்தியாயம் 30

''எனக்கு ஒரு விஷயம் புரிய மாட்டேங்கறது வடிவேலு. இந்த டிரைவர், கூலியாட்கள்ளாம் உங்கிட்ட எப்படி இவ்வளோ விசுவாசமா இருக்கான். எழுந்திருன்னு எழுந்திருக்கான். உட்கார்ன்னு உட்கார்றான். நீ அரசியல் கட்சியாளுங்கறதால வரான்னு தோணலே. தமிழ் நன்னாப் பேசறேங்கறதுக்காகவும் வர்றதாத் தெரியலே. முன்னை கூட ஒரு ஸ்டிரைக் பண்ணி ஜெயமாயிட்டு தாமே?''

''நல்லாக் கேட்டீங்க ஐயரே.'' வடிவேலு தொடையைத் தட்டிக் கொண்டு பலமாய்ச் சிரித்தான். கூட இருந்த இரண்டு மூன்று கூலித் தோழர்களும் சிரித்தனர்.

நாலு பேர் சூழ இருந்தபோது அப்பாவித்தனமாய் நாணு ஐயர் இந்தக் கேள்வி கேட்டது வடிவேலுவுக்குப் பிடித்திருந்தது. நாலு பேருக்கு நடுவில்தான் வடிவேலுவைப் புகழ வேண்டும் என்று நாணு ஐயர் தீர்மானித்த சூட்சமம் வடிவேலுவுக்குப் புரியவில்லை.

''விசுவாசம் எப்ப வரும் ஐயரே?''

''உதவி செய்தபோது.''

''எப்படிப்பட்ட உதவி செய்தபோது?''

''மறக்க முடியாத உதவி செய்தபோது.''

''இன்னும் நல்லா யோசியுங்க. மறக்க முடியாத உதவி எது?''

''சங்கடத்தில்சமயத்தில்உதவிசெய்யறது.''

''தப்பா யோசிக்கிறீங்க வாத்தியாரய்யா இன்னும் சரியா யோசியுங்க.''

''தெரியலே வடிவேலு.''

''பலன் எதிர்பாராம உதவி செய்யறபோது வாத்தியாரய்யா. இந்த ஸ்டிரைக்ல நஷ்டம் எனக்குக் கூடத்தான். எனக்கும் வருமானம் போச்சு. ஆயிரம் ஆயிரமாய்ப் பொழங்கற இடம் இது.. உங்களுக்கே தெரியும். இவுங்களுக்கு அஞ்சு ரூபா கூடக் கெடைச்சதுன்னு எனக்கு என்னு லாபம்? நான் அதுல எட்டணு குடுடான்னு கேக்க முடியுமா? இல்லே இதுக்கு முன்ன அந்த மாதிரிக் கேட்டிருக்கேனு... கேளுங்க... என்னுப்பா...'' கூலியாட்கள் இல்லை யென்று தலையசைத்தார்கள். ''இவங்களுக்குத் தெரியும். எந்த எதிர்பார்ப்பும் இல்லாம வடிவேலு முன்னாடி நின்னு ஒதைவாங்குவான்னு தெரியும். தனக்கு நஷ்டம் வந்தாலும் சொல்லு மாற மாட்டான்னு தெரியும். இவுங்க விசுவாசம் வச்சு நான் என்னு எம். பி. ஆயிட முடியுமா? எம். எல். ஏ. ஆயிட முடியுமா? என்னு... கொறைஞ்ச பட்சம் நாளைக்கு நான் மண்டையைப் போட்டா கும்பலா வந்து மாலை போடுவாங்க. காடுமுட்டும் வந்து அடடேன்னு வருத்தப்படுவாங்க. அது போதும் ஐயரே.''

''தலைவரே அப்படி யெல்லாம் வாணும் தலைவரே!''

''ஏன்டா, மாலை போட மாட்டியா?''

''ஐயோ... அதுக்குச் சொல்லலே. மாலைக்கு என்னு? கொண்டாந்து குமிச்சிடுவம்.''

''அடி சக்கை... எப்படா சாவான்னு பாத்துக்கிட்டிருங்க...''

''தலைவரே! வுட்டேன் வுட்டேன்.'' கூலியாள் வெகுளியாய்க் கை தூக்கினான்.


வடிவேலு சிரிப்பு புது இஞ்சின் மாதிரி துள்ளலுடன் வெளி வந்தது. முகத்தில் சந்தோஷம் பொங்கிற்று.


நாணு ஐயர் அவன் சந்தோஷபலஹீனத்தை எடை போட்டார். தாக்கலாம் என்று தீர்மானித்தார். ஆட்கள் கடையை விட்டு நகர்ந்தார்கள்.

மூடியும் விளையாட்டும்!

பற்பசை (பேஸ்ட்) தீர்ந்து விட்டால் அதை மூடியுடன் சேர்த்துத் தூக்கிக் குப்பையில் போட்டு விடாதீர்கள். கறுப்பு, வெள்ளை நிறமுடைய மூடிகள் 'செஸ்' காய்கள் (பான்கள்) உடைந்து விட்டாலோ அல்லது தொலைந்து விட்டாலோ அவற்றுக்குப் பதிலாகவும் சிகப்பு நிறமுடைய மூடிகளைத் தாயக் கட்டம் ஆடும்பொழுதும் பயன்படுத்தலாம்!

''மிஸ்ரா''.




பாலகுமாரன்
இரும்பு
குதிரைகள்

''என்னங்க வாத்தியார் ஐயா... என்ன சேதி?''

''புரிஞ்சுகண்டயா. நீ மகாகெட்டிக்காரன் வடிவேலு.''

''இல்லேன்னு இங்க குப்பை கொட்ட முடியுமா சொல்லுங்க.''

''இங்கிலீஷ் கம்பெனி. அவாளுக்கு மௌபரீஸ் ரோட்ல ஒரு கோடவுன் இருக்கு''

''காந்திலால் ஓட்டறான் அவங்களுக்கு.''

''காந்திலால் கடை மூடியிருக்கு. என்னை வந்து கேட்டான். வண்டி ஓடாதான்னு. இட்டக்கவே வராதேடான்னுட்டேன்.''

''அடடே...''

''வாடகை மேற்கொண்டு தர்றேன்னான்.'' வண்டிக்கு ஆயிரம் கொடுத்தாக் கூட எடுக்க மாட்டாங்க. போயிட்டு வான்னுட்டேன்.''

''மேலேன்னு?''

''மொத்தமாப் பத்தாயிரம்னான்.''

''பத்தாயிரமா?''

''கேஷா தரேன்னான்.''

''என்ன சொன்னீங்க?''

''எனக்கு ஒண்ணும் புரியல்லே. உன்னைச் சுத்தி எப்பவும் கூட்டம்.''

''வுட்டுட்டீங்களா?'' — வடிவேலு வேக மாய்த் திரும்பினான்.

''வுடுவேனா. இங்க பேச முடியாது. நீ ஏதாவது ஒரு ஓட்டல்லே போய் இரு. எங்கே இருக்கேன்னு போன் பண்ணுன்னேன். நாம அங்கே போகலாம். போன் வரும். போன்ல என் பொண்ணு பேசுவோ.''

''உங்க பொண்ணு?''

''அவளையும் அந்த ஆள் கூட அனுப்பிருக்கேன்.''

''உங்க பொண்ணையா... அவரு கூடவா? என்னத்துக்கு?''

''அந்தப் பையன் இங்கிலீஷ் கம்பெனி ஆள். பேரு விஸ்வநாதன். எனக்குத் தூரத்து உறவு. வேலை போயிடும்னு வந்து அழுதான்.''

''பெரிய ஆளு ஐயரே நீ!''

''இப்பச் சொல்லு. ஒண்ணும் முடியாது. நீ வேற எங்கேயாவது பாருப்பான்னு அனுப்பிச்சிடலாம்.''

''வேணும். போன் வரட்டும்.''

''செய்யலாங்கறயா?''

''யோசிப்போம்.''

''சாகக்கு நான் ஜவாப்தாரி.''

''சாக கிடக்கட்டும். எங்கனயாவது பேச்சு வுட்டீரோ... குடலு உருவிடுவாங்க.''

''நான் கொத்துப் பன்னீர்ப் புகையிலை யைத் திணிச்சிண்டுடுவேன். பேசுன்னாலும் முடியாது.''

''ஐயரே, பப்ளிக் லாரி, வாடகை லாரி தான் ஓடக் கூடாது. ப்ரைவேட் லாரிக் கம்பெனி லாரிங்க ஓடறதை யாரும் தடுக்க முடியாது. லோடு ஹார்பர்ல. ஹார்பர் கூலிதான் லோடு ஏத்தப் போறான்.''

''இறக்க கம்பெனில க்ரேன் உண்டு.''

''கரெக்ட். நான் என் மச்சானை அனுப்பிச்சு நாலு மாவு கம்பெனி லாரிய மடக்கிடறேன். அந்த லாரி லோடு அடிக்கட்டும். ராவோட ராவா நகர்த்திடலாம். பில்லு கெடையாது. செக்கில பணம் தரக் கூடாது.''

''பேசுவோம்.''

''புடி அந்த ஆளை.''

போன் மணி அடித்தது.

கடற்கரை ஹோட்டல் படி ஏறினார்கள்.

''ஐயரே. நீங்க உங்க பொண்ணைக் கூட்டிக்கிட்டு அந்தால உக்காருங்க. நான் பேசிக்கிறேன்.''

விஸ்வநாதனும் வடிவேலுவும் குசுகுசு வென்று பேசினார்கள். நாலாயிரம் ரூபாய் அட்வான்ஸ் தாராளமாய்த் தரப்பட்டது.

''சகலத்துக்கும்நான் பொறுப்புங்க. வண்டி எப்ப வரும்னு சொல்ல முடியாது. ஹார்ப ராண்ட இருங்க. நான் வரமாட்டேன். ஐயரும் வரமாட்டாரு. உங்க கார் நெம்பர் சொல் லுங்க. அங்கு வந்து ஆளு ரப்பர் லோடுன்னு கேக்கும். சரின்னு கூட்டுக்கிட்டுப் போங்க. நாலு வண்டிதான் தருவேன். பத்து மணிக்கு ஆரம்பிச்சா விடிய விடிய முடிச்சரலாம். நான் ஹைகோர்ட் வாசல்லேர்ந்து கவனிச்சிக் கிட்டிருப்பேன். கவலைப்படாத போய்ட்டு வாங்க.''

''ஏதாவது கலாட்டா ஆச்சுன்னு?''

''அதுக்கு ஆள் படை வச்சிருக்கேன். தொலைவா உக்காந்து நம்ம கட்சி பேப்பர் ரா முழுக்கப் படிச்சிக்கிட்டிருப்பான். வண்டி மறிக்காத பாத்துக்குவான். எனக்குத் தெரி யும். ஐயரும் நானும் கௌம்பறோம். நீங்க பின்னால வாங்க.''

வெளியே இட்டுத் இட்டாய் மேகங்கள் நகர்ந்தன. கூவம் நதி மெல்ல நிதான மாய் நடந்து கடலுள் சின்ன நுரைச் சிரிப்

ஒட்டகமும், தபாலும்!

- ஒவ்வொரு ஆண்டும் தபால் இலாகா 11000 கோடி தபால்களை பட்டுவாடா செய்து வருகிறது.
- எட்டு லட்சம் பேர் தபால் தந்தி இலா காவில் பணியாற்றிக் கொண்டிருக்கின் றனர்.
- ஒரு ஆண்டில் 12 கோடி மணியார்டர் களைச் சேர்ப்பிக்கிறார்கள்.
- பதிவுக் கடிதங்களின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு பன்னிரண்டு கோடி.
- ஒரு ஆண்டில் 17 கோடி மக்கள் தந்தி கொடுக்கிறார்கள்.
- ராஜஸ்தான் பாலைவனப் பகுதிகளில் தபால்களைக் கொண்டு செல்ல ஒட்டகங்களைப் பயன் படுத்தி வருகி றார்கள்.

—எம். செல்லையா



இலவசம்! **பொன்னான வாய்ப்பு!**

ரூ. 75 பெறுமான லிப்கோ புத்தகங்கள் இலவசம்!

ரூ. 250-ஐ எம்மிடம் 3 ஆண்டுகளுக்கு நியாயமான வட்டிக்கு முதலீடு செய்பவர்களுக்கு (இந்தியாவில் உள்ளவர்களுக்கு மட்டும்) ரூ. 75 பெறுமான **அவர்கள் விரும்பும் லிப்கோ** புத்தகங்கள் **முற்றிலும் இலவசமாக உடனடியாக** அனுப்பி வைக்கப்படும். முழு விவரங்களுக்கும், லிஸ்ட் பட்டியலுக்கும், விண்ணப்பத் தாளுக்கும் எழுதுக.

பயன்தரும் லிப்கோ புத்தகங்களில் சில:

		ரூ.காசு
1.	பத்திரங்களும் ரிஜிஸ்திரேஷனும்	15-00
2.	நாமக்கல் கவிஞர் பாடல்கள்	9-25
3.	என்ன செய்யப் போகிறீர்கள்?	3-00
4.	மஹாத்மாவின் மஹத்வம்	3-00
5.	இயேசுவின் இதயம்	2-50
6.	வள்ளுவர் வாய்மொழி — குறள் மூலம்	1-50
7.	உங்கள் பிறந்த தேதியும் வாழ்க்கை ரகசியங்களும்	3-00
8.	உடல் மச்சங்களும் உங்கள் வாழ்க்கை ரகசியங்களும்	2-50
9.	ஆங்கில ஆசிரியன்	12-00
10.	தமிழ்—தமிழ்—ஆங்கில அகராதி	20-00
11.	குழந்தை வளர்ப்புக் கலை	5-00
12.	சமைப்பது எப்படி?	4-00
13.	இந்தி ஆசிரியன்	6-00
14.	ஸுந்தர காண்டம் — மூலம் ஸம்ஸ்க்ருதத்தில்	14-00
15.	ஸுந்தர காண்டம் — மூலம் தமிழில்	5-60
16.	ஸுந்தர காண்டம் — ஸ்ரீ C R.S. தமிழ் மொழிபெயர்ப்பு	18-50
17.	ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் (ஸ்தோத்ரமாலையுடன்)	10-50
18.	ஸ்தோத்ரமாலை	3-00
19.	கம்ப ராமாயணம் — வசனம்	9-50
20.	ரகுவம்ச மஹாகாவ்யம்—1—19 ஸர்க்கங்கள் — உரையுடன்	55-00
21.	குமாரஸம்பவம் — 1-8 ஸர்க்கங்கள் — உரையுடன்	25-00
22.	ஸ்ரீமத் பகவத் கீதை — மூலம் தமிழில் — உரையுடன்	8-00
23.	மாங்கல்ய ஸ்தவம்	1-50
24.	ஸ்ரீ லக்ஷ்மீநாராயண ஹ்ருதயம்	1-50
25.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் — மூலம் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் (அர்த்தத்துடன்)	10-00
26.	ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் — மூலம்	2-60
27.	,, உரையுடன்	48-00

		ரூ.காசு
28.	ஸ்ரீ தேசிக ஸ்தோத்ரங்கள் — மூலம் ஸம்ஸ்க்ருதத்தில்	12-00
29.	,, மூலம் தமிழில்	5-20
30.	,, உரையுடன்	60-00
31.	ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகைகளும் ஸகல காரியஸித்தியும்	3-00
32.	பஞ்ச ஸூக்தங்கள்	0-80
33.	ஸ்ரீ குருவாயூர் அப்பன் ஸுப்ரபாதம்	0-60
34.	ஸ்ரீ முகுந்தமாலை	1-50
35.	பஜ கோவிந்தம்	1-25
36.	ஸ்ரீ மஹா பக்த விஜயம்	10-50
37.	அபிராமி அந்தாதி — உரையுடன்	2-00
38.	ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ — மூலமும் உரையும்	3-00
39.	ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும்	4-50
40.	பெரிய புராணம் (சுருக்கம்)	2-00
41.	திருவிளையாடற் புராணம் (சுருக்கம்)	1-50
42.	ஸகல காரிய ஸித்தியும் சைவத் திருமுறைகளும்	7-50
43.	ஸ்ரீ ஸத்யநாராயண வ்ரதம்	1-30
44.	ஸ்ரீ லக்ஷ்மீ குபேர பூஜாக்ரமம்	0-90
45.	நவக்ரஹ க்ஷேத்ர புராணம்	7-20
46.	திருப்புகழ் மஞ்சரி	2-00
47.	ஆறுமுகனுக்குகந்த ஆறு படை வீடுகள்	7-50
48.	இயற்கை தரும் இன்மருந்துகள்	8-00
49.	குழந்தைக்கு வீட்டு வைத்தியம்	1-00
50.	விரத பூஜா விதானம்	7-50
51.	குடும்ப ஜோதிடம்	7-50
52.	விவாஹ மந்த்ரார்த்த போதினி	2-50
53.	ஸ்ரீத்யாகராஜ க்ருதி ராமாயணம்	3-00
54.	ஸ்ரீ சனிக்ரஹ சாந்தி பூஜா விதானம்	2-00
55.	Tamil Nadu General Sales Tax (English)	20-00
56.	Central Sales Tax (English)	12-50
57.	Documents-Drafting & Registration (English)	12-00

விவரங்களுக்கு:

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

43, ரங்கநாதன் தெரு, தபால் பை 1028

தியாகராயநகர், சென்னை-600017

போன்: 441538

54 ஆண்டுகளாகப் புத்தக உலகில் பெரும் புகழ்!

புடன் கலந்தது. யாரோ படகு ஓட்டிக் கொண்டிருந்தார்கள். ஹோட்டல் மாடி திறந்த வெளியில் காயத்ரி காதோரம் குழல் பறக்க உட்கார்ந்திருந்தாள். மெர்க்குரி விளக்குகள் பனிச்சென்று எரிந்தன.

விஸ்வநாதன் காயத்ரியை நோக்கி ''தேங்க்யூ!'' என்றான்.

காயத்ரி சிரித்தாள். மெல்லக் கனைத்து விட்டுப் பேசினாள்.

''வைரமுத்துவோட அந்தப் பாட்டு...''

''வேண்டாம். நான் அதை மறந்துட்டேன்.''

''பாட்டையா?''

''இல்லே. பேச்சை.''

காயத்ரி சிரித்தாள். ''இல்லே. நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது.'' காயத்ரி ஆங்கிலத்தில் பேசினாள்.

''தவறு என்மீதும் உண்டு. என்னை மீறிப் பாட்டு வந்து விட்டது. பெண்ணருகே காதல் பாட்டுப் பாடுவதும் அபிப்பிராயம் கேட்பதும் தரக் குறைவானதுதான். எல்லை மீறுவதுதான்.''

''நோ. எல்லை மீறியதாய் நான் நினைக்கவில்லே. அந்தப் பாட்டு கோபத்தை உண்டு பண்ணியது.''

''உங்களைச் சந்தோஷப்படுத்துவது எது?''

''கவிதை.''

புத்தகமும், பூதக்கண்ணாடியும்!

மிகச்சிறிய அளவில் அமைந்த புத்தகங்களின் கண்காட்சி ஒன்று மாஸ்கோவில் 'மாலின்' என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில், மிகப் பிரம்மாண்டமான புத்தகம், தீப்பெட்டியை விட சற்று அளவில் கூடுதல்!

கால் சதுர சென்டிமீட்டர் பரப்பளவு கொண்ட புத்தகத்தில், பாரிஸ் நகரக் காட்சிகள் எல்லாம் வண்ணப் படங்களாக இடம் பெற்றுள்ளன.

இன்னொரு அற்புதமான சின்னஞ்சிறிய புத்தகம் — ''மக்கள் கடலுக்குள் காண்கிறார்கள்!'' என்ற தலைப்பைக் கொண்டதாகும்.

இந்தப் புத்தகம் ரஷ்ய மொழி உட்பட 10 மொழிகளில் சமுத்திரத்தைப்பற்றி எழுதப்பெற்ற கவிதைகளின் தொகுப்பு.

இக்கண்காட்சிக்குச் செல்பவர்கள் கையோடு பூதக்கண்ணாடியை எடுத்துச் செல்ல வேண்டும்.

— ஏ. நிர்ச்சலாதேவி.



''பிறகு?''

''ஓவியம்.''

''பிறகு?''

''தெளிவான சிந்தனை.''

''குட். அப்பாவின் வீரியம் அப்படியே இறங்கியிருக்கிறது உங்களிடம்.''

''வாஸ்தவம். அப்பாதான் என் குரு. எனக்குள்ள ஒரே சிநேகிதம்.''

''சரிட்? அப்படியானால் என்னையும் ஒரு ஸ்நேகிதனாய் ஏற்றுக் கொள்ளுங்கள்.'' விஸ்வநாதன் வலக் கையை அவள் முன் நீட்டினான்.

காயத்ரி வியந்தாள். உன்னால் எப்படி என் குரூரத்தை மறக்க முடிந்தது? சட்டென்று சகலமும் துடைத்து விட்டு மறுபடி எப்படிப் பனியாய்ச் சிரிக்க முடிகிறது?

''நான் சற்று மூர்க்கம். சட்டென்று காயப்படுத்துவேன். இது என் சுபாவம்.'' காயத்ரி மெல்லிய குரலில் பேசினாள்.

''குழந்தை சிறிய காயத்தை எந்தத் தகப்பன் பொருட்படுத்துவான். எப்படிக் கோபிப்பான் காயத்ரி?''

காயத்ரி ஒரு நிமிடம் உள்ளே தடுமாறினாள். தகப்பன் மாதிரி ஒரு ஸ்நேகிதன். நண்பன் மாதிரி அப்பா. மெல்லத் தன் வலக்கை நீட்டி அவன் வலக் கைக்குள் பொதிந்தாள். ''நன்றி'' என்றாள்.

''இந்த உதவியை மறக்க முடியாது காயத்ரி.''

''ப்ளீஸ் மறந்து விடுங்கள்.''

''எதை?''

''உதவி என்கிற வார்த்தையை.''

''மறந்தேன். கிளம்பலாமா?''

''சரி. உங்களுக்குப் பிடித்த விஷயம் எது?''

''சொன்னால் கோபம்... ஸாரி... மூர்க்கம் வரும்.''

காயத்ரி மறுபடி சிரித்தாள். ''சொல்லுங்கள்.''

''பாட்டுப் பிடிக்கும்.''

''பிறகு?''

''கொஞ்சம் கவிதை.''

''பிறகு?''

''சினிமா.''

''பிறகு?''

''சகல விதமான மனிதர்களோடு சந்தித்துப் பேசுவது பிடிக்கும்.''

''உங்களின் ஒரு கவிதை சொல்லுங்களேன்.''

''உங்களை முதலில் சந்தித்தபோது தோன்றிய வரிகளைச் சொல்லட்டுமா?''

''ம்ம்ம் டெல் மீ.''

''சவுக்கடி பட்ட இடத்தை
நீவிடத் தெரியா குதிரை
கண்மூடி வலியை வாங்கும்
இதுவுமோர் சுகம்தானென்று
கதறிட மறுக்கும் குதிரை
கல்லென்று நினைக்க வேண்டாம்.
கதறிட மேலும் நகைக்கும்
உலகத்தைக் குதிரை அறியும்.''

காயத்ரி நின்றாள். கண்களை மூடினாள். நெஞ்சு ரணமாய் வலித்தது.


(தொடரும்)

அனைத்து சாலைகளும் அஞ்சலகத்தை நோக்கியே!

உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில் இரட்டிப்பாக்குங்கள்

தேசீய சேமிப்புப் பத்திரம்

6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்



ஒவ்வொரு ரூ.100/-ம் ரூ.201-50 ஆக பெருகுகிறது

உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது. இப்பத்திரம் ரூ.10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும். முதலுக்கும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறோம்!

தொடர்பு கொள்க:
இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
143, அண்ணா சாலை, சென்னை-600 002
அல்லது **அருகிலுள்ள அஞ்சலகங்கள்**

DIPR-509 83-EP

28

அவன் பதற்றத்துடன் தந்தியை வாங்கிப் பிரித்தான்.

''மதர் ஸீரியஸ் தாரா.''

நீ இஷ்டப்பட்டால் வா என்றாற்போல் இரண்டே வார்த்தைகள்.

''நாம உடனே டில்லிக்குத் திரும்பணும் அத்தே!''

''நீ மனுஷன்தான்னு எனக்குத் தெரியும்'' என்றாள் அத்தை சமையலறையிலிருந்து பார்வையைத் திருப்பாமலே.

''அம்மாவுக்கு ஸீரியஸ்ஸா இருக்காம்! தந்தி வந்திருக்கு அத்தே!''

சரேலெனத் திரும்பிய அத்தையின் முகம் பேயறைந்தாற்போல் இருந்தது.

சில விநாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

''நீ தயாராகு. மெட்ராஸ்லேருந்து ப்ளேன்லே போயிடலாம். குத்தகைக்காரர் கிட்டேந்து பணம் வாங்கிட்டு வரேன்.''

சிந்தனை செய்யவே இயலாத ஜடத்தனத்துடன் அவன் தனது சொற்பத்துணிமணிகளை எடுத்து வைத்துக் கொண்டான். இத்தனை விரைவில் அம்மாவுக்கு முடிவு வந்துவிட வேண்டுமானால் வியாதி மிகவும் முற்றிப் போயிருக்க வேண்டும் என்று



தோன்றிற்று. தன்னுள் அது படர்ந்திருந்ததைப் பற்றிய பிரக்ஞை அம்மாவுக்கு இருக்கவில்லையா அல்லது சகிப்புத் தன்மையா என்று வியப்பேற்பட்டது. அத்தை சமைத்து வைத்திருந்ததைஅவசரமாகச் சாப்பிட்டுக்கிடைத்த ரயிலில் திருச்சிக்கு விரைந்து அங்கிருந்து சென்னைக்குப் பறந்து வீடு போய்ச் சேர்ந்த போது, அம்மாவின் கதை முடிந்து போனது ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. அப்பாவும் கணேசனும் தொங்கிய முகத்துடன் வாசல் வராந்தாவில் இருந்த கூடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். நிலைமையைப் புரிந்து கொண்ட அதிர்ச்சியில் அப்பாவைப் பார்த்ததும் அடிவயிற்றிலிருந்து ஒரு துக்கம் வெடித்

ஒரு சங்கமத்தைத் தேடி..

வாஸந்தி

தது. அவன் அவர் அருகில் சென்று அவர் கையைப் பற்றியதும் தாங்கிக் கொள்ள இயலாதவர் போல் ''உன்னைப் பார்க்கல்லேன்னுதான் கடைசியிலே அவளுக்குக் குறை' என்று அவர் அழுதபோது அவன் குற்ற உணர்வுடன் தன்னை மறந்து அழுதான்.

கணேசன் வெளிப்படையாகக் கண்ணீர் பெருக்காமல், சோகச் சித்திரமாய் அமர்ந்திருந்தான். அவனுடைய மடியில் செக்கச் சிவக்கச் செலுலாய்ட் பொம்மை போல் குமார். கணேசனின் கரிய வெற்று மார்பின் பின்னணியில் பளீரென்று அந்த ரோஜா முகம் வித்தியாசமாய்... இந்த வம்ச விருக்ஷத்தில் ஒட்டாத கிளை நான் என்கிற நிதர்சனமாய்... அவனை அறியாமல் அவனுக்குச் சொரேல் என்றது.

எப்படிப்பட்ட வித்தியாசம்! கன்னத்தில் அரைகிற மாதிரி!

''பேரன் பிறந்து பார்த்துட்டா! அது ஒரு சந்தோஷம் பாமிக்கு!''.

''கொஞ்ச நஞ்ச சந்தோஷமில்லே!'' என்று அப்பா யாருக்கோ பதில் சொன்னார்.

''இந்த ஒரு மாசமா குழந்தை இங்கே இருந்ததிலே வலியைக் கூட அவ பாராட்டல்லே. பெரிசா ஆண்டு நிறைவு கொண்டாடணும்னு ஆசைப்பட்டா. நிறைவேறல்லே. வர வெள்ளிக்கிழமை பிறந்த நாள்.''

தன்மேல் காட்டத் தெரியாத பாசத்தையெல்லாம் அம்மா ரத்த சம்பந்தமில்லாத இந்தக் குழந்தை மேல் வைத்திருக்க வேண்டும் என்ற நினைப்பு அவனுள் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்திற்று. அம்மாவை ஏமாற்றின மாதிரி.

ஒரு மாதமாய் அவனைப் பார்க்காததில் குமாரின் கண்களில் அனுமானம் தெரிந்தது நினைவலைகள் கலைந்தாற்போல்.

கணேசன் அவனிடம் குழந்தையை நீட்டும்போது கார்த்திக் சகஜமாய்க் கைநீட்டி வாங்காமல், ஒரு புரியாத பதற்றத்துடன் ''பரவாயில்லே உங்கிட்டயே இருக்கட்டும்'' என்றான்.

சட்டென்று உள்ளுணர்வின் உந்துதலில் அவன் நிமிர்ந்தான்.

தாரா மூலையில்நின்றபடிஅவனையேபார்த்த வண்ணம் இருந்தாள். புன்னகை இல்லாத தீர்க்கமான அந்த வெற்றுப் பார்வைஅவனுள் ஒரு சங்கடத்தையும் அவனுடைய உருவம் ஒரு திகைப்பையும் ஏற்படுத்திற்று.

இளைத்திருக்கிறாள்! முகம் சற்றுக் கறுத்து, ஒளியிழந்து, கண்கள் அகலமாகி அவனுள் புரியாத ஒரு துக்கம் பொங்கிற்று.

''தாராதான் அம்மாவை முழுக்க முழுக்க — கண் முழிச்சு, கூப்பிடறதுக்கு முன்னாடி ஏன்னு எழுந்துண்டு....''



வாயே திறக்காத அப்பாவின் ஆத்மார்த்த வார்த்தைகள். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி இருந்தாள்? கரி பிடித்த சமையல் அறையையும் கையகலச் சமையலறையையும் பொருட்படுத்தாமல் எப்படி இருந்தாள்? யாருக்காக?

இவர்களை யெல்லாம் கவர்ந்து கொள்ளப் பார்க்கிருளா?

நமக்கு ஏன் இப்படித் தோன்றுகிறது என்று அவன் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

காரியத்திற்காகக் கணேசன் எழுந்தபோது குழந்தையை அவனிடம்கொடுத்தான். அவன் யாரென்று புரிந்து போனாற் போல அது சிரித்தது. புரியாத ஒரு சங்கடம் பரவ அவன் பக்கத்திலிருந்த யாரிடமோ அதை நீட்டுகையில்,

கொப்பரையும் தண்ணீரும்

திருவாவடுதுறை மடத்தில் சுப்பிரமணிய தேசிக பண்டார சந்நதிகள் ஆட்சி செய்த காலம். ஆண்டுதோறும் தை மாதத்தில் குருபூஜை விழா சிறப்பாக நடப்பது வழக்கம். அன்று பகல் 12 மணி அளவில் மகேசுவர பூஜை நடைபெறும். ஆயிரக் கணக்கானோர் அறுசுவை உணவு உண்டு மகிழ்வர். ஒரு முறை சாப்பிட்டு முடிந்த பிறகு அனைவரும் கைகழுவுவதற்காக மடத்தின் பின்புறம் உள்ள தோட்டத்துக்குச் சென்றனர். கைகழுவுவதற்காகப்பெரிய தவலைகளில் (அண்டா என்றும் கொப்பரை என்றும் வழங்குவார்கள்.) தண்ணீர் நிரப்பப்பட்டு வைத்திருப்பது வழக்கம். ஆனால் அன்று தண்ணீர் நிரப்பாமல் விட்டு விட்டார்கள் போலும். தண்ணீர் இல்லாததைக் கண்ட ஒருவர் ''கொப்பரையில் தண்ணீர் இல்லை'' என்றார். அவர் பின்னால் நின்றிருந்த புலவர் ஒருவர் ''கொப்பரையில் தண்ணீர் எப்படி ஐயா இருக்கும்?'' என்று நகைச்சுவையாகக் கூறினார். (தண்ணீர் முற்றி முதிர்ந்த தேங்காயைக் கூடக் 'கொப்பரை' என்றுதானே வழங்குவார்கள்!)

—முருகு சுவாமிநாதன்



சரேலென்று தாரா உள்ளேயிருந்து வந்து வாங்கிக் கொண்டு போனாள்.

சடலத்திற்கு வாய்க்கரிசி போட அழைக்கப்பட்டபோது கணேசனும் கோமதியும் தொடர்ந்து அவனும் தாராவும் நகர்ந்ததும் அத்தை குமாரை இடுப்பில் ஏந்தி அதன் உள்ளங் கையில் அரிசி மணிகளை வைத்துக் குனியும்போது தன்னுள் கிளம்பிய மறுப்பைக் காட்ட முடியாமல், அவன் லேசான எரிச்சலுடன், ''சின்னக் குழந்தைக்கு எதுக்கு அத்தை இதெல்லாம்?'' என்றான்.

''சின்னதோ பெரிசோ, இந்தாத்துப் பேரன்!'' என்றாள் அத்தை அழுத்தமாக.

அவனுக்கு மனசு லேசாகக் குலுங்கிற்று. அத்தை அவனுக்கு ஞாபகப் படுத்துகிறாள் என்று தோன்றிற்று.

'இருந்திருந்து பேரன் பிறந்திருக்கான் நெய்ப் பந்தம் பிடிக்க' என்று சாஸ்திரத்துக்குக் குமாரின் பிஞ்சுக் கையில் தொட வைத்து எடுத்துச் சென்றபோது தன்னுள் ஏற்பட்ட பதற்றத்தை மறைத்துக் கொண்டான்.

சரளமாக மனசை அடக்கிக் கொள்வது சாத்தியமா என்று மண்டைக்குள் ஏக வண்டுகள் குடைந்தன. அலுவலகத்தில் அந்த லோபோவைப் பார்க்கும்போதெல்லாம் ஆத்திரம் பீறிடாதா? அவனுடைய பிம்பத்தை வீட்டில் காணும்போது, 'ஏ. ஏமாற்றப்பட்டேன்' என்கிற நினைப்பு என்னை வெறி கொள்ளச் செய்யாதா? எதுவுமே நடக்காத மாதிரி ஜடத் தன்மையுடன் இருப்பது எப்படி சாத்தியம்? எல்லா அயோக்கியத்தனமும் கொண்ட ஒருத்தனின் ரத்தத்தை என்னுடைய ரத்தம் என்று பகிரங்கமாக மனுஷத்தனம் என்கிற போர்வையைப் போர்த்திச் சொல்வேனானால் நான் வேஷதாரி....

'யாரோ பண்ண தப்புக்கு அந்தக் குழந்தை என்ன பண்ணும்?'

'மனுஷன்னு நீ உன்னைச் சொல்லிக்கணும்னு மனுஷத்தனமா யோசனை பண்ணணும்.'

ஹெல்ப் மீ காட்!

யாரோ தோள் மேல் கைவைத்தார்கள்.

அவனது அலுவலகத்தில் வேலை பார்க்கும் இந்தர் மல்ஹோத்ரா.

''ஸாரி கார்த்திக்!'' என்றான். ''நீ எப்பொழுது வருகிறாய் என்று விசாரிக்க நான் எதேச்சையாக இன்று வந்தேன். ஸாரி அபௌட் தி நியூஸ்! என்ன திடீரென்று லீவுக்குப் போனாய்?''

''கிராமத்தில் வேலை இருந்தது.''

''காரியமெல்லாம் முடிந்து ஆபீஸுக்கு வந்துவிடுவாயோ இல்லையோ? மிஸ்டர் லோபோவும் இல்லாததாலே...''

அவன் சட்டென்று நிமிர்ந்தான்.

''மிஸ்டர் லோபோ எங்கே?''

''தெரியாதா? ஆஸ்திரேலியாவிலே நல்ல வேலை கிடைத்திருக்கிறது என்று திடீரென்று வேலையை ரிஸைன் பண்ணிட்டுப் போய் விட்டார்!''

அவன் வியப்புடன் புருவத்தை உயர்த்தினான்.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காலங்காலமாக
பயன்பட்டுவரும் கிராம்புத் தைலத்தின்
நன்மைகளை ப்ராமிஸில் கண்டுணர்ந்தனர்.

கிராம்புத் தைலம் கொண்ட
இணையற்ற டூத்பேஸ்ட்
ப்ராமிஸ்

நீங்களும் ஏன் அதை உபயோகிக்கக்கூடாது?



ப்ராமிஸ்

பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது,
வாய்க்குப் புத்துணர்ச்சி
தருகிறது மற்றும்
துர்நாற்றத்தை அகற்றுகிறது.

பல்லாரா தயாரிப்பு

ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சிமிக்க
மூச்சுக்கு ப்ராமிஸ்.

CHAITRA-BLS-453-R TAM

மல்ஹோத்ரா குரலை இறக்கினான்.

''ஏதோ ஸ்மக்ளிங் கேஸில் மாட்டிக்கொள்வார் போலிருந்ததாம்!''

'லோபோ ரிஸைன் பண்ணியிருக்காவிட்டால் நான் பண்ணியிருப்பேன்' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். எப்படிப்பட்ட திருப்பு முனைகள் வந்து சேர்கின்றன, காத்து நின்ற அச்சில் விழுகிற மாதிரி!

கனவில் மிதப்பவனைப் போல் அவன் பெரியவர்கள் சொன்னதை யெல்லாம் செய்தான். எதிலும் ஆழமாகப் பட்டுக் கொள்ளாதவர் போலத் தோன்றும் அப்பா சிதையில் நெருப்புப் பற்றியதும் உடைந்துபோனவராய் அழுவதைப் பார்த்து அவனுக்கு வியப்பேற்பட்டது. முருகனுக்கு மட்டும்தான் இவருடைய அன்பு, மனுஷப் பிறவிகளுக்கு இல்லை என்று சின்னப் பையனாக இருந்தபோது ஆத்திரப்பட்டது இப்போது நினைவுக்கு வந்தது.

வீடு திரும்பும்போது ஓர் இயல்பான வாத்சல்யத்துடன் அவன் அவரைக் கைத் தாங்கலாக அணைத்துக் கூட வருகையில் அப்பா நெகிழ்ந்து போனது ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. முதல் முதலில் தரைக்கு மனுஷனாய் இறங்கி அவனையும் ஒரு சக மனுஷனாய்ப் பாவித்துப் பாமரத்தனமாய்ப் பேசுகிற மாதிரிப் பட்டது.

''உங்கம்மாவுடைய கதை எப்படி போகக்குனு முடிஞ்சு போச்சு!'' என்றார் மீள முடியாத திகைப்புடன்.

''போன மாசம் கூட நாலு மணிக்கு எழுந்து நைவேத்தியத்துக்குச் சர்க்கரைப் பொங்கல் பண்ணியிருக்கா! என்னோடயே ஆயுசுக்கும் சாச்வதமா இருக்கப் போறா என்கிற கண்மூடித் தனத்திலே ஒரு நாள் கூட அவகிட்டப் பிரியமா உட்கார்ந்து நான் பேசினதில்லே. அதெல்லாம் அநாவசியம்னு நினைச்சாப்பலே. பிழைக்க முடியாத ஒரு வியாதியிலே அவ படுத்தப்பறம்தான் கருணையில்லாம நேரத்தை யெல்லாம் விரயமாக்கிட்ட மாதிரி பதைச்சுப் போனேன்.''

அப்பா சற்று நேரம் குலுங்கக் குலுங்க அழுதார்.

''பிரியம் காட்டத் தெரிய வேண்டியது ரொம்ப முக்கியமான குணம் கார்த்திக். எல்லா பேதங்களையும் தாண்டி நிற்க வேண்டிய குணம். சாச்வதமே இல்லாத இந்த வாழ்க்கையை முடிக்கறத்துக்குள்ளே எத்தனை பிரமைகளைச் சுமக்கிறோம்! 'நான்' என்கிற அகங்காரத்தினாலே! வாஸ்தவத்திலே இந்த 'நான்' என்கிறது யாரு.''

அப்பாவின் புலம்பல் அதிகமாயிருந்தது. அவனுக்குக் கலக்கமேற்பட்டது. அவனுள்ளேயே பல கேள்விகளை எழுப்பிற்று.

அவனை அவர் திரும்பிப் பார்த்து, தெய்வ சந்நிதியில் வழக்கமாகப் புன்னகைக்கும் புன்னகை புரிந்தார்.

''எதுக்குமே அர்த்தமில்லே கார்த்திக். இந்த 'நான்' என்கிறதை நீ மறக்காதவரை. அதைப் புரிஞ்சுக்காதவரை....''

இவர்களுக்கெல்லாம் எங்கோ ஓர் ஆதார சுருதி இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. அதனாலேயே சீக்கிரம் சமாதானமாகிறார்கள் என்று பட்டது. அவனுக்குத்தான் தன்னுடைய ஆதாரம் எங்கே என்று புரிபடவில்லை. வேர்கள் எங்கே என்று புலப்படவில்லை.

அப்பா அவனுடைய தோள் மேல் கையை வைத்தார். இதுவரை அப்பா அவனைத் தொட்ட ஞாபகமே இல்லை என்று அவன் நினைத்துக் கொண்டான்.

''எனக்குள்ள நீயும் உனக்குள்ளே நானும் நமக்குள்ளே எல்லோரும் சங்கமிச்சிருக்கும்போது அவனவன் தனி ஆள்னு பெருமைப்படறதும் கோபப்படறதும் எத்தனை பெரிய வேடிக்கை! இத்தனைக்கும் போகக்குன்னு ஒரு நாள் மண்டையைப் போடப் போறோம் என்று நிச்சயமாய்த் தெரிஞ்சும்!''

அவனுக்கு மனசு அதிர்ந்தது. பலமாக உலுக்கப்பட்ட மாதிரி.

அன்று மாலை அவன் வீட்டிற்குள் இருக்கப் பிடிக்காமல் குன்றில் ஒரு பாறையின் மேல் ஏகாந்தமாய் உட்கார்ந்தான்.

அப்பாவும் அத்தையும் தெரிந்தோ தெரியாமலோ கிழித்த பல போர்வைகளையும்



உள்ளும் புறமும்

பாரசீக மொழியில் புகழ் பெற்ற காவியங்களைப் படைத்தவர் மௌலானா ஜாமி. அவரிடம் ஒரு பழக்கம். தான் வீட்டுக்குள்ளே இருக்கும் பொழுது கதவை மூடித் தாழிட்டுக் கொள்வார். வெளியே செல்லும்பொழுது இரண்டு கதவுகளையும் திறந்து போட்டு விடுவார்.

ஒரு நாள் நண்பர் ஒருவர், ''ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு ஜாமி சொன்னார்:

''வீட்டுக்குள் இருக்கும் போது விலை உயர்ந்த பொருள் நான்தான். அதனால்தான் கதவை மூடிக் கொள்கிறேன். வெளியே செல்லும்போது வீட்டில் இருக்கும் மற்றப் பொருட்களைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை. எனவே கதவைத் திறந்து போட்டுவிடுகிறேன்!''

—வி.எம். செய்யது புகாரி

மீறி ஏதோ ஒரு பாரம் அவனை அழுத்திற்று. மனசில் சூன்யம் படர்ந்திருந்தது.

''கார்த்திக்!''

அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

தாரா நின்றிருந்தாள் குழந்தையுடன். குழந்தை அவனிடம் தாவிக் கொண்டு வரப் பார்த்தது. அவனது உணர்வுகளைச் சலனப் படுத்திற்று. தாரா அதை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு எங்கோ பார்த்தபடி சொன்னாள்.

''நான் கிளம்பறேன் கார்த்திக். என்னுடைய வேலை முடிஞ்சாச்சு!''

அவன் தன்னை நிதானப் படுத்திக்கொண்டு சொன்னான்.

''பேஷண்ட் செத்துப் போனதும் நர்ஸ் கிளம்பற மாதிரின்னு கிளம்பறே?''

அவள் தன் துக்கத்தையும் கண்ணீரையும் விழுங்கிக் கொண்டு நிற்பவள் போல் தொலை வைப் பார்த்தாள்.

''நீ வரவரைக்கும் நான் இங்கே உதவியா இருக்கணும்கிற நினைப்பிலே இருந்தேன். நீ சொன்ன மாதிரி பேஷண்ட் போனப் புறம் எனக்கென்ன வேலை? எனக்கு இந்த ரீச்சுவல்ஸ்லே நம்பிக்கை கிடையாது. அதோட உனக்குச் சங்கடம் கொடுக்கருப்பல இங்கே நான் இருக்க விரும்பல்லே. நீயும் நானும் தனி வழி பார்த்துண்டுபோக வேண் டிய நேரம் வந்தாச்சு கார்த்திக்!''

அவன் அதிர்ந்துபோய் அவளைப் பார்த் தான். ''வாட் டூ யூ மீன்?''

நீர் மல்கிய அவளது கண்களில் கோபம் பளிச்சிட்டது.

''நீயும் நானும் சேர்ந்திருக்கிறதிலேஅர்த்த மில்லே கார்த்திக்! என்னை நீ ஏத்துண்டேன்னு என் குழந்தையையும் நீ ஏத்துக்கணும். அதுக் « உனக்குத் தைர்யம் இல்லே! யூ நோ ஸம்திங்? நீ ஒரு பெரிய ஃப்ராட்! இந்த வீட் டிலேயே மிக மோசமான பிற்போக்குவாதி நீதான். நீதான் அவா எல்லாரையும் விட அதிகமா ஞாபகங்கள்ளே வாழறவன் வேஷம் போடணும்னு நினைக்கிறவன் பிரியம் வைக்கத் தெரியாதவன்.''

அவன் தயக்கத்துடன் குறுக்கிட்டான்.

''தாரா, நான் அத்தனை மோசமானவன் இல்லே. என்னைப் புரிஞ்சுக்கோ!''

''நீ ஊர்லேருந்து திரும்பினதிலேந்து உன்னைக் கவனிச்சுண்டு வரேன். இந்தக் குழந்தையைத் தொடக் கூடக் கூச்சப்படறே. இதே குழந்தை மேலே போன மாசம் வரைக் கும் நீ உசிரையே வச்சிருந்தே! ஒரே நாள் போதிலே உன் பிரியம் வெறுப்பாப் போக ணும்னு நீ ஃப்ராட் இல்லையா? உன் உணர்ச்சி சுன்னே ஏதும் சத்தியமில்லேன்னு அர்த்த மாகல்லியா? இது உன்னுடைய அங்கம் என்கிற பெருமையும் உன் பிள்ளை என்கிற நினைப்பும் மட்டுமே நீ வச்ச பிரியத்துக்குக் காரணம்னு அதுக்குப் பேர் பிரியம் இல்லே! நார்ஸிஸம்! உன்னையேதான் நீ காதலிக்க முடியும். அந்த வட்டத்தைத் தாண்டி உன் னால வர முடியாது. எப்படிப்பட்ட மனு ஷத்தனமே இல்லாத சுயநலவாதி நீ. கோழை நீன்னு புரியறப்போ எனக்கு அதிர்ச்சி ஏற்படறது கார்த்திக்! இந்த மாதிரி நிலையிலே உனக்கும் எனக்கும் நடு விலே ஒரு மீட்டிங் பாயிண்ட் வரமுடியாது!''

சாட்டையடி மாதிரி விழுந்தன வார்த் தைகள். அதிலிருந்து அவன் நிமிர்வதற்குள் ''குட் பை!'' என்று அவள் விருவிரு வென்று கீழ் நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அவனுள் குபீரென்று அதிர்ச்சி கலந்த துக்கம் கிளம்பிற்று. தொண்டையை அடைத்துக் கண்களில் நீர் மல்கியது.

அவன் எதிர்பார்த்தே இராத விபரீதம் நேர்ந்தாற்போல் மனசு பதறிற்று.

''தாரா, லிஸன்! ப்ளீஸ்!''

அவள் திரும்பியே பார்க்கவில்லை. குழந்தை அவனைத் திரும்பிப் பார்த்துக் கையசைத்துச் சிரித்தது.

'எனக்குள்ளே நீயும் உனக்குள்ளே நானும் நமக்குள்ளே எல்லாரும் சங்கமிச்சிருக்கும் போது அவனவன் தனி ஆள்னு பெருமைப் படறதும் கோபப்படறதும் எத்தனை பெரிய வேடிக்கை!'

''தாரா, நில்லு!''

தாரா இப்போது கண்ணுக்கே தெரிய வில்லை.

நாடி நரம்பெல்லாம் புதிய விழிப்புடன் புடைத்துக்கொள்ள, மனசு உள்ளுக்குள் ஒரே யடியாய்ப் பறக்க, அவன் அவசரமாக வீட் டிற்குள் சென்று செருப்பைத் தேடி மாட்டிக் கொண்டான்.

அதிர்ச்சியும் துக்கமுமாய் அத்தை அவனைப் பார்த்தாள்.

''எங்கேடா தாரா கிளம்பிப் போனா?''

அவன் அவள் தோளை லேசாகப் பற்றி மென்மையாகச் சொன்னான்.

''அவளைத் தேடிண்டுதான் நான் போயிண் டிருக்கேன் அத்தே!''

அத்தை சமாதானமாகவில்லை என்கிற அனுமானத்தில் மறுபடி திரும்பி, ''கவலைப் படாதீங்கோஅத்தே!'' என்றான்.

(முற்றும்)

''என்ன சார் இது... ஆச்சரியமா இருக்கே! அண்ணன் இருட்டிலே போறான்னு தம்பி தீப்பந்தம் பிடிச்சிக் கிட்டுப் போறானே!''

''அதுதான் சார் 'பந்த'பாசம்!''

—எம். பாஸ்கர்



தலைவலி பலவகை உண்டு



சிகிச்சை ஒன்றே ஒன்று!

அனஸின்

இதில் அதிக அளவில் வலி-நிவாரணி அடங்கியுள்ளது

துரித நிவாரணம் அளிக்க, உலகெங்கும் டாக்டர்கள் மிக
அதிகமாக சிபாரிசு செய்யும், வலி-நிவாரணி மருந்து
அதிக அளவில் கொண்டது—அனஸின்.

தலைவலி, ஜலதோஷம், ஃப்ளு, முதுகு வலி,
தசை வலி, பல் வலி ஆகியவற்றிற்கு
நல்ல பலனளிக்கிறது.

அனஸின் மீது மட்டுமே
நம்பிக்கை வையுங்கள்.

இப்போது பாதுகாப்பான ஃபாயில் உறையில்.



சக்தி வாய்ந்த நம்பகமான
மேனர்ஸ்
அனஸின்*

இந்தியாவின் புகழ்பெற்ற வலி-நிவாரணி மருந்து

* Licensed user of T.M. : Geoffrey Manners & Co.Ltd.

GM-1-83 TM

ராகம் வேறு... தாளம் வேறு...



"இன்னிக்குத்தான் ஞாயிற்றுக்கிழமை ஆச்சேய்யா... ஆபீஸ் லீவு கிடையாதா?'' — வந்திருந்த காக்கிச் சட்டையின் மேல் ராஜா எரிந்து விழுந்தான்.

''லீவுதாங்க... நாளைக்கு எங்க ஆபீஸ்ல இன்ஸ்பெக்ஷன்... அதனால இருக்கிற பெண்டிங் வேலையெல்லாம் இன்னிக்குள்ள முடிச்சாகணும்னு சூப்பிரெண்ட் ஐயா உத்தரவு போட்டிருக்காரு... லட்சுமியம்மா பார்க்கற பிராஞ்ச்சிலே ஏதோ வேலையிருக்கிறதால அழைச்சிட்டு வரச்சொன்னாருங்க.''

''நல்ல ஆபீஸ்... நல்ல உத்தியோகம்... சரி சரி. நீ போ... போய், வருவாங்கன்னு சொல்லு'' என்று ராஜா வேண்டாவெறுப்பாகச் சொல்லி முடிக்கும்போது வெளிப்பட்ட லெட்சுமி, ''அய்யாவு, கொஞ்சம் நில்லுப்பா'' என்று காக்கிச்சட்டையை நிறுத்தினாள்.

''என்னுங்கம்மா?''

''சூபர்வைசர்கிட்டே பின்னாலேயே நான் வர்றதாச் சொல்லு'' என்று அவனை வழியனுப்பியவள் இவனை உறுத்துப் பார்த்துவிட்டு உள்ளே சென்றாள்.

அவசரமாய்ப் புடவை மாற்றிக் கொண்டிருந்தவளிடம் இவன் சென்று, ''என்ன லெட்சுமி, இப்பவே போகணுமா?'' என்றான்.

''ஆமாங்க... உங்களுக்கு இதுகூடவா புரியலே... நாளைக்கு இன்ஸ்பெக்ஷன் நடக்கப் போகுது... மெட்ராஸ்லேர்ந்து 'டி. பி. எஸ்.' வர்றாரு... என் பிராஞ்சிலே ஏதோ வேலையிருக்குதுன்னு சூபர்வைசர் அழைச்சிட்டு வரச் சொல்லியிருக்காரு...''

''சரி, பிள்ளையை யாரு பார்த்துக்கறது?''

''ஏன், நீங்க பார்த்துக்க மாட்டீங்களா?... ஞாயிற்றுக்கிழமையில தான் ஆயா வரமாட்டாளே. வரவர உங்களை என்னால புரிஞ்சுக்கவே முடியலே... வேலைக்குப் போக மாட்டேன்னு சொன்ன என்னை, நீங்க தான் வற்புறுத்தி வேலைக்கு அனுப்பினீங்க... இப்ப ஒரேயடியா சலிச்சுக்கிறீங்களே, ஏன்?''

ராஜா, மௌனத்தைப் பதிலாக்கிவிட்டுக் கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடை பயின்றான்.

''சரி, நான் ஆபீஸ் போய்ட்டு வந்து உங்ககிட்ட பேசிக்கிறேன்... பிள்ளை தூளியில் தூங்கிக்கிட்டுதானிருக்கான்... முழிச்சு அழுதான்னா ஃப்ளாஸ்க்கிலே பால் வச்சிருக்கேன்... ஃபீடிங் பாட்டில்ல ஊற்றிக் கொடுங்க...''

அவள் போன பிறகு அதுவரை புகைந்து கொண்டிருந்த ராஜாவின் மனம் எரியத் தொடங்கியது.

''லெட்சுமி, உனக்கு இன்னிக்குப் பத்துமணிக்கு இண்டர்வியூ... ஞாபகமிருக்குல்லே... என்ன இப்படிச் சாவகாசமா வேலை செய்திட்டிருக்கே?''

''ஏங்க, நான் கட்டாயம் வேலைக்குப் போகத்தான் வேணுமா...? இப்ப முழுகாம வேற இருக்கேனேங்க... இப்படியே போக வெட்கமா இருக்குதுங்க''

''என்ன நீ சுத்த கர்நாடகமா இருக்கே... கொஞ்சம் கூடப் படிச்ச பொண்ணுத் தெரியலியே... உனக்கு 'மெடர்னிடி' லீவு உண்டும்மா.''

''அது போகட்டுங்க... அங்க போனு கண்ட கண்ட ஆம்பிளைங்களோட பழக வேண்டியிருக்கும்... எனக்கு அதெல்லாம் பிடிக்காதுங்க''

''சீச்சீ, சுத்தப் பைத்தியமா இருக்கியே.. வேலை நிமித்தமா ஆம்பிளைங்க கிட்ட பேசறது ஒண்ணும் தப்பில்லே.... இப்போ நான் வேலை செய்யற கம்பெனிலயும் பெண்கள் நிறையபேர் வேலை செய்யுறாங்க... அவங்களோட நான் விகல்பமாய்ப் பழகறதாவா நீ நெனச்சிக்கிட்டிருக்கே?''

''நான் ஒண்ணும் அப்படிச் சொல்ல லீங்க... புது சூழ்நிலே... புதுப்புது மனிதர்கள்... அதையெல்லாம் நெனச்சா பயமா இருக்குங்க... ப்ளீஸ், நான் சொல்றதைக் கேளுங்களேன்... உங்களோட சம்பளத்துலயே சிக்கனமாக் குடும்பம் நடத்திடுவேங்க... நான் வேற வேலைக்குப் போகணுமா?''

''ஆமா, போகணும்... போகணும் ... இந்தக் காலத்துல அவனவன் வேலைக்குப் பேயா அலையறான்... கிடைச்ச வேலையை வேண்டாம்னு சொல்ல உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?''

ராஜாதான் லெட்சுமியைக் கட்டாயப் படுத்தி வேலைக்கு அனுப்பி வைத்தான். சதீஷ் பிறந்து மெடர்னிடி லீவு முடிந்த போது கூட லெட்சுமி வேலையை விட்டு விடுவதாய்த்தான் சொன்னாள். அப்போதும் ராஜா விடாப்பிடியாய் நின்று அவளை வேலைக்குப் போகச் சொன்னான்.

ஆனால் பரந்த சிந்தனை கொண்டிருந்த ராஜாவின் மனம் நாளாக நாளாகச் சுருங்கிப் போனது. விகல்பமான எண்ணங்கள் அவன் மனத்தை விகாரப்படுத்த ஆரம்பித்தன. பல ஆண்களுடன் அவள் பழகுவதை— பேசுவதை ஜீரணிக்கச் சிரமப்பட்டான்.

ஆரம்ப நாட்களில் அலுவலகத்தில் நடக்கும் சுவையான சம்பவங்களை லெட்சுமி சொல்லும்போது சுவாரஸ்யமாகக் கேட்டவன் இப்போதெல்லாம் அலுவலகம் பற்றிய பேச்செடுத்தாலே எரிந்து விழுகிறான்.

● ● ● ●

உத்திரத்தை வெறித்துப் பார்த்தபடி படுத்துக் கிடந்தவன் ஒரு முடிவுக்கு வந்தவனாய் எழுந்தான். வீட்டில் சொந்த உபயோகத்திற்கு வைத்திருந்த 'ரெமிங்டனின்' முன்னால் அமர்ந்து அந்த லெட்டரை



'டைப்' செய்தான். முடித்தபோது மனத்துக்குள் ஒரு திருப்தி வியாபித்ததை உணர்ந்தான்.

● ● ● ●

மறுநாள் லெட்சுமியை ராஜா ஸ்கூட்டரில் அழைத்துச் சென்று அலுவலகத்தில் விட்டபோது, ''இன்னிக்கு ஏதாவது சினிமாவுக்குப் போகலாமா...? சாயந்திரம் சீக்கிரமா வந்திடுறேங்க'' என்றாள்.

''லெட்சுமி, உனக்கொரு சர்ப்ரைஸிங் நியூஸ்... நீ நேரா ஆபீஸ் போறே... அப்புறம் இந்த ராஜிநாமா லெட்டர்லே ஒரு கையெழுத்துப் போட்டு உங்க சூப்பிரண்டண்ட் கிட்ட கொடுத்திட்டு உடனே வீட்டுக்கு வர்றே'' என்றவன் தன் பைக்குள்ளிருந்து ஒரு கவரை எடுத்து லெட்சுமியிடம் கொடுத்தான்.

அவன் சொன்னதைக் கேட்டு முதலில் அதிர்ந்த லெட்சுமி பின் நிதானமாய் அந்தக் கவரைப் பிரித்துப் படித்தாள். இன்றுவரை தான் பெற்றெடுத்த பிள்ளையையே யாரோ ஓர் ஆயாவின் கவனிப்பில்

விட்டு வருவதற்காகத் துடித்துக்கொண்டிருந்த அவளது தாய் மனம் மகிழ்ச்சியில் குதூகலித்தது...

''ரொம்ப நன்றிங்க. ரொம்ப நன்றி.... சத்தியமாவே இன்னிக்குதாங்க எனக்கு ஆகஸ்ட் பதினஞ்சி... இந்தச் சுதந்திரத்தை நான் பல நாளா எதிர்பார்த்து உங்கள்கிட்ட எப்படிக் கேக்குறதுன்னு தெரியாம முழிச்சிக்கிட்டிருந்தேங்க '' என்று ஆனந்தக்கண்ணீர் மல்கினள்.

ராஜிநாமா செய்வதற்கு மறுப்பு சொல்வாள் என்று எதிர்பார்த்திருந்த ராஜாவுக்கு அவளின் செய்கை ஆச்சரியமாயிருந்தது. 'அதற்கு என்னதான் காரணமாயிருக்கும்?' என்று யோசித்தபடியே தான் வேலை பார்க்கும் சிட்ஃபண்டு கம்பெனிக்கு ஸ்கூட்டரைச் செலுத்தினன்.

அந்த சிட்ஃபண்டு கம்பெனிக்கு எதிரே மக்கள் கூட்டமாய் மொய்த்திருக்க, எக்கச்சக்கமான போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருந்தது. தலையில் சிவப்பு விளக்குடன் நான்கு போலீஸ் வேன்கள் விறைப்பாய் நின்றிருந்தன. தேடும் கண்களுடன் போலீஸ் அதிகாரிகள் தமக்குள் என்னென்னவோ கிசுகிசுத்துக் கொண்டிருந்தனர்.

ராஜாவுக்கு அடிவயிற்றில் புளி கரைந்தது. 'என்ன நடந்திருக்கும்?' — நிலைமையை யூகிக்க முடியவில்லை. கூட்டத்தைத் தாண்டி ஸ்கூட்டரைச் செலுத்த முடியாதவனாய், நின்றிருந்த ஓர் ஆளிடம், ''என்னங்க, என்ன நடந்ததாம்... ஏன் போலீசெல்லாம் வந்திருக்கு?'' என்று வினவினன்.

''உங்களுக்கு விஷயமே தெரியாதா?... நேத்து ராத்திரி சீட்டுக் கம்பெனி முதலாளி வந்து தனியா வேலை செஞ்சிக்கிட்டிருந்திருக்காரு... அதை எவனே தெரிஞ்சுக்கிட்டு வந்து அவரைக் கொலை பண்ணிட்டு 'லாக்கர்'ல இருந்த பல லட்ச ரூபாய்களைக் கொள்ளையடிச்சிட்டுப் போய்ட்டான்... பாவம், இந்தச் சீட்டுக் கம்பெனியில பணம் கட்டினவங்க பாடு அதோகதிதான்!''

அந்த ஆள் சொல்லிய வார்த்தைகள், இவனது செவிப்பறைகளில் நெருப்புத் துண்டங்களாய் வந்து விழுந்தன.

வேலையை நாமே உண்டாக்குவோம்!

ஒரு தடவை நான் பாட்னாவிலிருந்து சோகோ தேவராவிற்குச் சென்று கொண்டிருந்தேன். என்னுடன் ஜப்பானிய நண்பர் ஒருவரும் இருந்தார். ஜப்பில் அறுபது மைல் ப்ரயாணம் செய்தோம்.

வழியில், உடன் பயணம் செய்து கொண்டிருந்த ஜப்பானிய நண்பர், ''என்ன ஜே.பி. நீங்கள் உங்களது பாரத நாட்டை மிகவும் ஏழ்மையான நாடு என்று கூறுவீர்களே?'' என்று கேட்டார்.

''ஆம். இதிலென்ன உங்களுக்கு ஐயம்? செல்வம் கொழிக்கும் ஏதாவது ஒரு கிராமத்தை நீங்கள் வழியில பார்த்தீர்களா, என்ன!'' என்று நான் அவரிடம் கேட்டேன்.

''நான் உங்களது நாடு ஏழை நாடு என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டேன். எந்த வழியாக நாம் வந்தோமோ, அங்கு மக்கள் யாதொரு பணியும் செய்யாமல் உட்கார்ந்திருக்கின்றனர். சிலர் விட்டுத் தாழ்வாரத்தில் பணி செய்யாது வீண் பேச்சுப் பேசிக் கொண்டு இருந்தனர். சிலர் மரங்களுக்குக் கீழே அமர்ந்துள்ளனர். சிலர் அமர்ந்து குடித்துக் கொண்டிருக்கின்றனர். சிலர் கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் பகலிலேயே பணி செய்யாது உட்கார்ந்திருக்கிறார்கள் என்றால் உணவிற்கு ஏதோ ஏற்பாடு இருக்கிறது என்று தானே இதன் பொருள்.

''ஜப்பானுக்கு வந்தீர்களாயின், பகலில் பணி செய்யாமல் உட்கார்ந்திருக்கும் ஒரு மனிதரைக் கூட நீங்கள் பார்க்க முடியாது'' எனக் கூறினார்.

இதைக் கேட்ட எனக்கு வெட்கம் ஏற்பட்டது. 'வேலை இல்லாத் திண்டாட்டம் என்னவோ இருக்கிறது' எனக் கூறினேன்.

''தண்ணீர் குடித்த இடத்தின் அருகில் அதிகமான அசுத்தம் இருந்ததைக் கண்டோம். அதை ஏன் மக்கள் சுத்தம் செய்வது இல்லை? கம்போஸ்ட் உரம் ஏன் தயாரிப்பதில்லை? வேலையில்லாத் திண்டாட்டம் எங்கே இருக்கிறது?'' எனக் கேட்டார்.

இதற்கு நம்மிடம் என்ன பதில் இருக்கிறது?

எந்த வேலையும் இல்லை எனக் கூறுவது சோம்பேறித்தனமானது. வேலையை நாமே உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

—ஜெயப்பிரகாஷ் நாராயண்

நன்றி: சத்திய கங்கை



மால்டோவா சீரணி—
அவர்களது குறும்புகள் வெகு நளினம்
அதை நீங்கள் எண்ணுதல் வெகு கடினம்!



மால்டோவா பருகும் குழந்தைகள்—பள்ளியிலும், விளையாட்டிலும்—வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் ரசிப்பவர்கள். காரணம்—அவர்கள் பருகும் மால்டோவா...பாலுக்குச் சுவை கூட்டி பன்மடங்கு பலனையும் அளிப்பது.

சூரிய வெப்பத்தால் முதிர்ந்த கோதுமை, பார்லி மால்ட்

பஞ்சாபிலிருந்து வரும் கோதுமையும் பார்லியும் மால்டோவா தொழிற்சாலையில் போஷாக்குத் தரும் மால்ட்டாக மாறுகின்றன. அவசியமான தாது உப்புக்களும் வைட்டமின்னும் நிறைந்த, நவீன தயாரிப்பு முறையில் உருவான, மால்டோவா அதன் சத்துக்கள் உடலில் எளிதில் கலந்துவிடும் பானமாகிறது.




தூய, முழுமையான பால்

எங்கள் பால் சேகரிக்கும் நிலையங்களில், மால்டோவா தயாரிக்கப் பயன்படும் பால் 100% தூய்மையானது. 100% போஷாக்கு நிறைந்தது.

சுவை கூட்டும் கோக்கோ

மால்டோவாவில் தரத்தில் உயர்ந்த வெளி நாட்டுக் கோக்கோ சேர்கிறது. அதன் சீரிய சுவையும், போஷாக்கும் உங்களுக்கு புத்துணர்ச்சி அளித்து இன்புறச் செய்கிறது.



சக்தி தரும் சர்க்கரை

உயர்தரமான வெண்மையான சக்கரை சேர்ந்து மால்டோவா...தேர்ந்தெடுத்த இன்னமுதம்...சின்னக் குழந்தைகளுக்கு அதிகச் சக்தி தரத் தேவையான அமுதம்.

வைட்டமின்களின் விசேஷச் சேர்க்கை

புரதம், கார்போஹைட்ரேட்டுகள், வைட்டமின்கள், தாது உப்புக்கள் அனைத்தும் இணைந்த சமநிலையுற்ற படைப்பு மால்டோவா. வைட்டமின் A, நயாசின், வைட்டமின் B_1, வைட்டமின் D_2 இவற்றின் விசேஷச் சேர்க்கை கூடியது. செயற்கைச் சுவையெதுவும் கிடையாது.



ஜெ. ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

Monde (உலக) தரத்தேர்வில் தங்கமெடல் பெற்றது 1981, 1982

வைட்டமின்கள் கூடிய மால்டோவா:
ஆரோக்கியம், பலம் மற்றும் சக்திக்கு

SIMOES/JIL/1/83 TM

காய்கறிகளைக் கெடாமல்,
பசுமையோடு நீங்கள்
பாதுகாக்கவே

ஜனதா
குளிர் சாதனப்பெட்டி

காய்கறிகளும் அழுகாது!
பணமும் விரையமாகாது!



வீட்டிற்குத் தேவையான பலவித
அழகிய மட் பாண்டங்களும் குறைந்த விலையில்.

கிடைக்குமிடம் **காதிகிராஃப்ட்**

தமிழ்நாடு, கதர் கிராமத் தொழில் வாரியம்,
'குறளகம்', சென்னை-600 108

DIPR/509/83/ELEGANT

சின்னத் துணுக்கின் பெரிய சாதனை

அந்தத் துணுக்கை கருங்கல் ஆர். ஜார்ஜ் எழுதியபோது அதற்குக் கல்கி வாசகர்களிடமிருந்து இப்படி ஒரு எதிரொலி கிளம்பும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார். பிரசுரித்தபோது நாங்களும் எதிர்பார்க்கவில்லை தான். ஆனால் அந்தச் சின்னஞ் சிறிய துணுக்கு ஒரு பெரிய சாதனையை அல்லவா நிகழ்த்தி விட்டது!

வியந்து போகிறோம்.

26-6-83 கல்கி இதழில் ஒரு மூலையில் வெளியாயிற்று அந்தச் சிறிய துணுக்கு.

> கருங்கல்லுக்கும் தொடுவெட்டிக்கும் இடையே உள்ள ஒரு ஊரின் பெயர் நட்டாலம். இங்கு ஒரு பெண் சிறிய தொரு பெட்டிக் கடை வைத்துள்ளாள். இந்தப் பெட்டிக்கடையின் மூலதனம் சுமார் ரூ. 100. 'அந்தப் பெண்ணை எங்கோ பார்த்த ஞாபகம் உள்ளதே!' என நான் யோசித்தேன். பளிச்சென ஞாபகம் வந்தது. இவள் பிச்சைக்காரி அல்லவா!
>
> விசாரித்ததில் அவள் கூறியது:
>
> ''நான் பிச்சை எடுத்து 100 ரூபாய் சேர்த்து இந்தப் பெட்டிக் கடையைத் துவங்கியுள்ளேன். எனக்கு யாராவது 500 ரூபாய் கடன் தந்தால் கடையை விரிவு படுத்தலாம்.''
>
> இவள் உண்மையிலேயே மற்ற பிச்சைக்காரிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தானே!
>
> —கருங்கல் ஆர். ஜார்ஜ்



இதைப் படித்தவுடன் பல வாசக அன்பர்கள் ''அந்தப் பெண்மணியின் விலாசம் தந்திருக்கக் கூடாதா? நாங்கள் அவளுக்கு உதவ விரும்புகிறோம்'' என்று எழுதினர்.

கேரளத்தில் வாழும் வி. லலிதா (மச்சின்கம் தோட்டம் வீடு, கருமானூர், பாறசாலை போஸ்டு, திருவனந்தபுரம் மா. வ.) ரூ. 100 மணி ஆர்டர் எங்களுக்கு அனுப்பிவிட்டார்.

இதன் பின்தான் நாங்களும் விழித்துக் கொண்டு நாகர்கோயில் கல்கி ஏஜெண்ட் திரு எம். சிதம்பரநாதனு அவர்களுக்கும் கருங்கல் ஜார்ஜ் அவர்களுக்கும் எழுதினோம். அவர்களிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைத்திருக்கிறது.

அந்தப் பெண்மணியின் பெயர் ஆர். செல்லம்மாள். எழுதப் படிக்கத் தெரியாது. கை நாட்டுத்தான். வயது 48 ஆகிறது. ஆஸ்துமா நோய் இருப்பதால் கூலி வேலை செய்ய இயலாது. 21 வயதில் மகன் கங்காதரன் இருந்தாலும் காலில் கட்டி கட்டியாக 'ஆணி' நோய் இருப்பதால் இவராலும் கடின வேலை செய்ய முடியவில்லை. கங்காதரன் சிறுவனாக இருக்கும்போதே தந்தையை இழந்துவிட்டான். செல்லம்மாவுக்கு 70 வயதில் தாயும் இருக்கிறாள்.

சிறிது காலம் அம்மாவும் மகனும் பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்தினர். சிறுகச் சிறுக, சிறு தொகை சேர்த்துப் பெட்டிக் கடை வைத்துள்ளனர். உ. வியாபாரமும் செய்கின்றனர். கையில் காசிருந்தால் கடையைச் சற்று விரிவுபடுத்தலாம் என்று எண்ணுகின்றனர். உதவி பெறத் தகுதி வாய்ந்த குடும்பம்தான். விலாசம் பின்வருமாறு:

ஆர். செல்லம்மாள், பெட்டிக்கடை, வலிய கண்டறை, நட்டாலம், 629·165 குமரி (மா. வ.)

வி. லலிதா அவர்கள் அனுப்பிய நூறு ரூபாயை ஆர். செல்லம்மாளுக்கு அனுப்பி விட்டோம். செல்லம்மாளுக்கு உதவ விருப்பம் தெரிவித்து எழுதிய நேயர்கள்: என். பிச்சையா, ராஜபாளையம்; எஸ். ஜெகவீர பாண்டியன், பொன்னேரி; தங்கதுரைராஜ், மதுரை; ஜெகன், குருவியார்பெட்டி, கோவை (மா.வ.); எம். ஜூலியட், பெங்களூர்; என். ஹேமலதா, பெங்களூர்; பி. செல்வராஜ், பெங்களூர்; எஸ். சுந்தர் சிங், சென்னை; ஏ. வில்சன், பெங்களூர்; பி. தங்கராஜ், சென்னை.

இவர்கள் செல்லம்மாளுக்கு நேரடியாகவோ, அல்லது கல்கி காரியாலயம் மூலமாகவோ பண உதவி செய்யலாம்.

கல்கி காரியாலயம் சார்பில் செல்லம்மாளுக்கு ரூ. 100 உதவித் தொகை அனுப்பப் படுகிறது.

-ஆசிரியர்

ஆட்டோ அனுபவம்!

— வீ —

''மரியாதைக் குறைவாக நடந்து கொள்வது எப்படி?'' என்ற தலைப்பில் புத்தகம் எழுத வேண்டுமானால், அதை எழுதுவதற்குச் சென்னை நகர ஆட்டோ ரிக்‌ஷா டிரைவரை விடப் பொருத்தமானவர் வேறொருவர் கிடைக்க மாட்டார்.

சந்தேகம் இருந்தால், சாலையில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஆட்டோக்களில் ஒன்றை அணுகி, ''சவாரி வரீங்களா?'' என்று கேட்டுப் பாருங்கள்.

''உனக்கு எங்கே போகணும்...?''

''திருவல்லிக்கேணி...''

ஆட்டோ டிரைவர் பதிலேதும் கூறாமல் முகத்தைத் திருப்பிக் கொள்வார். ''நமக்குப் பதில் சொல்வது அவரது கௌரவத்துக்குத் தாழ்ந்த செயல்'' என்பதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.

சரி, ஒருவேளை பெரிய மனசு பண்ணி ஆட்டோ டிரைவர் நாம் குறிப்பிட்ட இடத்திற்கு வரப் போகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதற்குப் பிறகு...

''அஞ்சு ரூபா தர்றியா...?'' என்று கேட்பார்.

''இங்கே இருக்கிற திருவல்லிக்கேணிக்கு அஞ்சு ரூபாயா...? மீட்டர்படி கொடுக்கிறேன்...''

''வண்டி வராது போ!'' — என்று 'மரியாதை' கலந்த பதில் வரும்.

இந்த இரண்டு கட்டங்களையும் தாண்டி, உங்களை ஆட்டோக்காரர் திருவல்லிக்கேணிக்கே அழைத்துச் சென்று விட்டார் என்று வைத்துக் கொள்வோம். இறங்குவதற்கு முன்பு மீட்டரைப் பார்க்கிறீர்கள். 3.60 காட்டுகிறது. 1.70–க்கு மேல் நிச்சயமாக ஆகாது என்பது உங்களுக்குத் தெரியும். இதை நீங்கள் டிரைவரிடம் எடுத்துக் காட்டினால் —

''இப்போ நீ இன்னான்றே...? மீட்டர்படி குடு சார் துட்டை!''

''1.70–க்கு மேலே ஆகாதேப்பா!''

''ஆவாதா? எவன் சொன்னான்? முன்னே பின்னே ஆட்டோ (வி) லே ஏறியிருக்கியா நீ?...''

''என்னப்பா, மரியாதை இல்லாம பேசறியே?''

''உனக்கு இன்னா மரியாதை தர்றது? பேமானி, மீட்டர் துட்டைக் கொடுக்க வக்கில்லே... மரியாதை வேறே கேக்குதோ?..''

நீங்கள் புத்திசாலியாக இருந்தால், வாயை மூடிக் கொண்டு கட்டணத்தைக் கொடுத்து விட்டு, நகர்ந்து விட வேண்டும். இல்லாவிட்டால் சொல்லடி தொடரும். உங்களது சட்டை கசக்கப்படலாம்; கண்ணாடி அணிந்திருப்பவரானால், அது மூக்கிலிருந்து 'டைவ்' அடிக்கும்படி நேரிடலாம்!

உலக அதிசயங்களுள் ஒன்றாக, நம்மூர் ஆட்டோ மீட்டர்களைச் சொல்லலாம். வண்டி பத்து மீட்டர் ஓடுவதற்குள் ஒரு ரூபாய் ஏறிவிடும். சில மீட்டர்கள் வண்டி 'ஸ்டார்ட்' ஆகும்போது ரூ.1.70 காட்டினாலும் அரை பர்லாங் போவதற்குள் 6 ரூபாய் வரை ஏறி விடும்! நீங்கள் புத்திசாலியாக இருந்து, டிரைவரிடம் இந்த அநியாயத்தைச் சுட்டிக் காட்டினால், அவரது எண்ண வெளிப்பாடு இரண்டுவிதமாக இருக்கலாம்.

ஒன்று: ''இத்தினி நேரம் சரியாத்தான் சார் இருந்துச்சு... இப்போதான் தகராறு பண்ணுது!'' (ஏதோ கொஞ்சம் நியாய உணர்வு இருப்பது இப்படி வெளியாகும்.)

''உனக்குன்னு ஸ்பெஷல் மீட்டரா போட்டிருக்கேன்... மீட்டர் சரியாதான் ஓடுது...'' (இறங்குமிடத்தில் சண்டை போட நான் தயார், நீ?'' என்ற போர் முரசு காதிலே கேட்கிறதா உங்களுக்கு?)

கட்டணக் கொள்ளை, அடாவடிப்பேச்சு இவற்றுக்குக் களமாக அமைந்திருப்பவை சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்களே. தப்பித் தவறிப் போலீஸ்காரரிடம் (அவரும் நடப்பது அனைத்தையும், வேடிக்கை பார்த்தபடியே பக்கத்திலேயே அமைதியாகத்தான் நின்று கொண்டிருப்பார்!) நீங்கள் புகார் செய்தாலோ, ''எல்லாம் பாத்து அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போங்க சார்!'' என்று உபதேசிப்பார் அவர்!

குறைந்த தூரத்துக்கு வர மறுப்பது, பயணியிடம் சண்டை, மீட்டரில் தில்லுமுல்லு போன்ற காரணங்களுக்காக அவ்வப்போது போலீசார் ஒரு சில ஆட்டோ டிரைவர்கள் மீது வழக்குத் தொடர்வதும்; பிறகும் இத்தகைய அநியாயங்கள் தொடர்வதும் 'மாமூல்' விஷயங்கள் — தான்! காவல் துறையினர் பெற வேண்டியதைப் பெற்று விட்டார்களானால், காட்ட வேண்டிய கருணையைக் காட்டாமலிருப்பார்களா?

ஆட்டோக்களுக்கு 'மயில் வாகனம்' என்று செல்லப் பெயர் ஒன்று உண்டு. அந்தப் பெயர்ப் பொருத்தத்தை நிரூபிப்பது போல இப்போது சென்னையில் பச்சிளம் பாலகர்களும் கூட ஆட்டோ ஓட்டுநர்களாகப் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள்! பாலமுருகனை நினைவூட்டும் இவர்களிடம் இல்லாதது: மீசை, லைசென்ஸ் இரண்டுமே!

எதிர்ப்பக்கம் வண்ணப்படம்:

செல்லப்பன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran



REGISTERED No. M. 43
Registered as a Newspaper in Sri Lank